விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 09 ஞாயிற்றுக்கிழமை (23.06.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 186

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


# மத்தியஸ்தம் குறித்து பேசுவதற்கு தென்னாபிரிக்க அமைச்சர் வருகை

## அரசு, கூட்டமைப்புடன் பேசுவார்

அரசிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குமிடையில் மத்தியஸ்தம் வகிப்பது குறித்து பேசுவதற்காக தென்னாபிரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் இப்ராஹிம் இன்று இலங்கைக்கு விஜயம் செய்கிறார்.

அரசிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் குறித்த பேச்சுக்களின்போது மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என தென்னாபிரிக்கா முன்னர் அறிவித்திருந்த நிலையில் இவரது பயணம் முக்கியத்துவம் பெறுகிறது. (23ஆம் பக்கம் பார்க்க)

## நயினை தேர்த் திருவிழாவில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பு



நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா ஓசையுடன் அம்பாள் தேரில் திருவீதியுலா வந்தார்.

கடந்த 9-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய இவ் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத் திருவிழாவில், 14-ம் நாளாகிய (23ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸி செல்ல முயன்ற படகு பிடிபட்டது

(சென்னை)

தமிழகத்தின் நாகப்பட்டினம் மாவட்ட கடற்கரையோரமாக இலங்கை அகதிகள் அவுஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற படகொன்றை கியூ பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் கடந்த (24ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய கேதர்நாத்தில் காட்டாற்று வெள்ளம்

### ஐயாயிரம் பேர் பலி; 200 கிராமங்கள் அழிவு



(புதுடில்லி)

இந்தியாவின் உத்தர்காண்ட் மாநிலத்தில் பெரும் வெள்ளத்தில் கேதர்நாத் பகுதியில் மட்டும் 5 ஆயிரம் பேர் பலியாகி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

கேதர்நாத் கோயில் வளாகத்தில் இருந்த ஆதி சங்கரரின் சமாதியும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

கேதர் நாத் கோயிலை ஒட்டி ஓடும் மந்தாகினி ஆற்றில் கேதார் பனிச்சிகரத்தின் பெரும் (23ஆம் பக்கம் பார்க்க)

## அதிருப்தியில் மு.காங்கிரஸ்!

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13-வது திருத்தத்தை திருத்துவது குறித்து ஆராய அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் அரசாங்கத்தில் அங்கம் (23ஆம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு குறித்து விரைவில் முடிவு

### த.தே.கூட்டமைப்பு அறிவிப்பு

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்காக இலங்கை அரசு நியமித்திருக்கும் தெரிவுக்குழு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் எந்த நிலைப்பாடும் எடுக்கவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் தெரிவித்தார்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் 19 பேர் கொண்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அரசாங்கம் கடந்த வெள்ளியன்று அறிவித்திருக்கிறது. இந்த தெரிவுக்குழுவில் சேரும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அழைப்பு வந்ததாகவும், ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பின் குழுவினர் இந்தியா செல்வதற்கு முன்பாக இந்த அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் தெரிவித்த சம்பந்தன், தற்போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் (23ஆம் பக்கம் பார்க்க)

## அவுஸ்திரேலியாவில் புலிகளை தடை செய்ய அரசு முயற்சி!

(கொழும்பு)

இலங்கையில் யுத்தத்தில் தோற்றதன் பின்னர், எஞ்சியுள்ள விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள், ஆட்கடத்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அவுஸ்திரேலிய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் விடுதலைப் புலிகளின் எஞ்சிய தரப்பினர் வெளிநாடுகளில் செயற்பட்டு வருகின்றனர்.

அவர்களால் மேற்கொள்ளப்படும் ஆட்கடத்தல் செயற்பாடுகளாலேயே தற்போது அவுஸ்திரேலியா சிக்கலை எதிர்நோக்கியுள்ளது.

எனவே (23ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் அதிகாரம் குறித்து இந்தியாவுக்கு அறிவிப்பு

### - பாதுகாப்பு செயலர்

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட மாட்டாது என்பது பற்றி இந்தியாவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

13-ம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட மாட்டாது என்பது இந்தியாவிற்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

நான்காம் கட்ட ஈழப் போரின் போதே இது அறிவிக்கப்பட்டது.

இன்றும் அதே நிலைப்பாடு காணப்படுகின்றது, அதில் மாற்றங்கள் கிடையாது.

இது தொடர்பில் எந்தத் தரப்பினரும் பிரச்சினைகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியதில்லை.


இந்தியாவும் இலங்கை மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தக் கூடாது.

13-ம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதாகத் தெரிவித்த வாக்குறுதி மீறப்பட்டுள்ளதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை.

பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப்பாடு ஏற்கெனவே இந்தியாவிடம் அறிவிக்கப்பட்டுள்ளது என கோத்தபாய ராஜபக்ஷ அறிவித்துள்ளார். (எ-11)

சிங்கர் மெகா சேல்
இடம்:- நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.
காலம்:- 2013 June 21 - 26 வரை
விநியோகம் இலவசம்
சகல விதமான இலத்திரனியல் வீட்டுப் பாவனை பொருட்களை 60% மேற்பட்ட விலைக் கழிவுடனும், உத்தரவாதத்துடனும் பெற்றுக் கொள்ளலாம்.
கையிருப்பு உள்ளவரை மட்டுமே!...
(C-3708)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லண்டன் மாநகரில் உள்ள சைவப்பெரியோர்களின் நிதி உதவி மூலம் நல்லை ஆதீன வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய மடாலயத்தின் சைவ சமய அனுட்டானத்தின் படியான திறப்பு நிகழ்வு நேற்று முன்தினம் 21.06.2013-ம் திகதி இடம் பெற்றது. லண்டன் ஸ்ரீ கனக துர்க்கையம்மன் ஆலய இணை ஸ்தாபகரும் நல்லை ஆதீன கட்டிடக் குழுவின் லண்டன் ஒருங்கிணைப்பாளருமான அப்பையா தேவசகாயம் தம்பதிகள், கட்டிட ஒப்பந்தகாரர் சண்முகநாதனிடமிருந்து திறப்பினை பெற்று, நல்லை ஆதீன முதல்வரிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

# மாத்தளை புதைகுழி விவகாரத்தை மூடி மறைக்க அரசு முயற்சி!

## டெலிகிராப் சந்தேகம்

மாத்தளை மனிதப் புதைகுழி விடயம் தொடர்பான விசாரணைகள் நீதிமன்றத்தில் இருந்து ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றுக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளமை சந்தேகத்தை தோற்றுவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு டெலிகிராப் இந்த சந்தேகத்தை வெளியிட்டுள்ளது.

1989-ம் ஆண்டு காலப்பகுதியில் ஜே.வி.பி உறுப்பினர்கள் என்று நம்பப்படுவோர் கொலை செய்யப்பட்டு மாத்தளை வைத்தியசாலை வளவில் புதைக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த இடத்தை கட்டிட அமைப்புக்களுக்காக தோண்டிய போதே இந்த விடயம் வெளியானது.

இந்த நிலையில் குறித்த கொலைகளுடன் இலங்கையின் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகளின் பிரதிவதிவிடப் பிரதிநிதி சவேந்திர சில்வா உள்ளிட்டோருக்கு தொடர்பிருப்பதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

அதேநேரம் மாத்தளை நீதிவான் சத்துராணி டி சில்வாவும் இந்த குற்றச்சாட்டு தொடர்பில் இராணுவத்தரப்பினரின் வாக்கு மூலங்களை பெறுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து மாத்தளை நீதிவான் உடனடியாக கொழும்புக்கு மாற்றம் செய்யப்பட்டார். அத்துடன் குறித்த விசாரணையும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு மாற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் இதுவரை காலமும் குற்றச்சாட்டுக்களை மூடிமறைக்கவே உதவியுள்ளன.

எனவே இந்த ஆணைக்குழுவும் அந்த அடிப்படையிலேயே அமைக்கப்பட்டுள்ளது என்ற சந்தேகத்தை கொழும்பு டெலிகிராப் வெளியிட்டுள்ளது. ( எ-11)

## பொது பல சேனாவுக்கு எதிராக கிறிஸ்தவர்கள் ஆர்ப்பாட்டம்

பொது பல சேனா அமைப்பினர் சிறுபான்மை மதங்கள் மீது அத்துமீறி நடந்துகொள்வதாக தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன.

இலங்கையின் தெற்கே, களுத்துறையில் மக்கொனை என்ற இடத்தில் சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் பௌத்த கடும்போக்கு அமைப்பான பொது பல சேனாவுக்கு எதிராக நேற்று சனிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கிறிஸ்தவ மக்கள் நேற்று காலை முதல் நடத்திய இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, அந்தப் பிரதேசத்தில் நிலவிய பெரும் பதற்றம் காரணமாக பொலிஸ் உயர் அதிகாரிகளும் சிறப்பு அதிரடிப் படையினரும் அங்கு வரவழைக்கப்பட்டனர்.

பின்னர் சந்திரவட்டக்கல்லை அகற்றியவர்கள் தேவாலய நிர்வாகத்திடம் மன்னிப்பு கோரிய பின்னரே ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றதாக ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் தெரிவித்தார். (எ-11)


## வேலைவாய்ப்பு

புதியதோர் எதிர்காலத்தை நோக்கி...

நீங்கள் Management துறையில் ஆர்வம் கொண்டவரா? தனியாக ஒரு அலுவலகத்தைக் கொண்டு நடத்தும் திறன் படைத்தவரா? அப்படியானால் உங்களுக்கான ஒரு புதிய சந்தர்ப்பம். வடக்கில் ஆரம்பிக்கவுள்ள எமது புதிய கிளைகளுக்கு office Administration, Management Trainee, Supervisors, customer care, Account ஆகிய பதவிகளுக்காக துடிப்பான ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் தேவைப்படுகின்றனர்.

- அடிப்படைத் தகைமைகள்: O/L
- 6, 8 மாதகால பதவி உயர்வு அனுபவப் பயிற்சி வழங்கப்படும். அதன்மூலம் அடிப்படையாக 12,000-14,000/= பெறலாம்.
- தங்குமிட வசதிகள் உண்டு.
- வயதெல்லை: 18-35

(C-3743)

தொடர்புகளுக்கு: 0775566226, 077981471, 0771363797

உங்கள் திறமைகளை வெளிப்படுத்த புதிய சந்தர்ப்பம்: www.grantonsrilanka.com

வலம்புரி
விளம்பர தொடர்புகளுக்கு
தொ.பே. : 021 321 0815
021 567 1540

## பணிப்பெண் தேவை

கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய குடும்ப பொறுப்பற்ற நடுத்தர வயதுடைய பணிப்பெண் தேவை.

தொடர்பு:- 075 0442099

(3110)

## செல்லா சினிமா யாழ்ப்பாணம்




ஸ்ரீ



# இணுவில் திருப்பதி

## அருள்மிகு ஸ்ரீ வேங்கடேஸ்வரர் ஆலயம்

## நூதனமஹாசம்ப்ரோக்ஷணம்

(மஹாகும்பாபிஷேகம்)

விஜய வருடம் ஆனி மாதம் 9 ஆம் நாள் (23.06.2013)

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில்

**கிரியாரம்பம்**

விஜய வருடம் ஆனி மாதம் 12 ஆம் நாள் (26.06.2013)

புதன்கிழமை

## எண்ணைக்காப்பு விஞ்ஞாபனம்

**அடியார்களே!**

இலங்கையிலேயே எங்குமில்லாத திவ்ய விஸ்வரூப வேங்கடேஸ்வரப்பெருமாள் பதின்நான்கு (14) அடி உயரமான சிலைக்கும், ஏழரை அடி உயரமான விநாயகர், எட்டடி உயரமான மகாலக்ஷ்மி ஏழரை அடி உயரமான ஆண்டாள் பிராட்டி, ஏழரை அடி உயரமான ஆஞ்சனேயர், ஏழரை அடி உயரமான கருடாழ்வார் போன்ற மகோன்னதமான தெய்வத்திருவுருவங்களுக்கு எண்ணைக்காப்பு வைபவம்.

விஜய வருடம் ஆனி மாதம் 13 ஆம் நாள் (27.06.2013)

வியாழக்கிழமை காலை 9.30 மணி முதல் 11.00 மணி வரை

**மஹாசம்ப்ரோக்ஷணம் (மஹாகும்பாபிஷேகம்)**

சுபம்

கே.கே.எஸ்.றோட், இணுவில் [சி-3745] தேவஸ்தானம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் லைஃப்

# சிப பெத்தும்

## தேசிய புலமைப்பரிசில் திட்டம் 2013



## பாரிய காப்புறுதி நிறுவனமான ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸிடமிருந்து தேசத்தின் பிள்ளைச் செல்வங்களுக்காக முழு தேசத்தின் சார்பில்...

### நாடெங்கிலும் சிறந்த பெறுபேறுகளுக்குரிய 300 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள்

- 5ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் சகல மாவட்ட மட்டத்திலும் அதிக புள்ளிகளைப் பெற்ற 4 மாணவர்கள் வீதம் 100 புலமைப்பரிசில்கள். ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் லைஃப் காப்புறுதியின் உரிமையாளராயின் அப் புலமைப்பரிசிலானது தொடர்ச்சியாக 5 வருடங்களுக்கும், காப்புறுதி உரிமையாளர் அல்லாதவராயின் அப் புலமைப்பரிசிலானது தொடர்ச்சியாக ஒரு வருடமும் வழங்கப்படும்.
- க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சகல மாவட்ட மட்டத்திலும் அதிக புள்ளிகளைப் பெற்ற 4 மாணவர்கள் வீதம் 100 புலமைப்பரிசில்கள். ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் லைஃப் காப்புறுதியின் உரிமையாளராயின் அப் புலமைப்பரிசிலானது தொடர்ச்சியாக 2 வருடங்களுக்கும், காப்புறுதி உரிமையாளர் அல்லாதவராயின் அப் புலமைப்பரிசிலானது தொடர்ச்சியாக ஒரு வருடமும் வழங்கப்படும்.
- க.பொ.த. உயர் தர பரீட்சையில் உயிரியல், கணிதம், வர்த்தகம், கலை ஆகிய பிரிவுகளில் தேசிய பட்டியலுக்கேற்ப உயர் புள்ளிகளைப் பெற்ற 25 மாணவர்கள் வீதம் 100 புலமைப்பரிசில்கள். ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் லைஃப் காப்புறுதியின் உரிமையாளராயின் அப் புலமைப்பரிசிலானது தொடர்ச்சியாக 3 வருடங்களுக்கும், காப்புறுதி உரிமையாளர் அல்லாதவராயின் அப் புலமைப்பரிசிலானது தொடர்ச்சியாக ஒரு வருடமும் வழங்கப்படும்.

**விபரங்கள்:** எமது கிளை வலையமைப்பின்/காப்புறுதி ஆலோசகரிடம்/www.srilankainsurance.com எனும் எமது இணையதளத்தின் அல்லது கீழ்காணும் எமது 24 மணிநேர வாடிக்கையாளர் சேவை இலக்கத்தின் ஊடாக.

0112 0115 0117 0114 0711 0721 0771 0751 **357357**

Sri Lanka Insurance LIFE

வாழ்க்கைக்கு மதிநுட்பமான முதலீடு

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்

தந்தையும் தாயும் போன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்துச் சம்பவங்கள் குறைவடைந்துள்ளன

## நெல்லியடி பொலிஸார் தெரிவிப்பு

(கரவெட்டி)

வடமராட்சி நெல்லியடிப் பொலிஸ் பிரிவில் இவ் வருடம் மிகக் குறைவான விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக நெல்லியடிப் பொலிஸ் நிலைய போக்குவரத்து பொறுப்பதிகாரி அங்கோல காமினி விஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை 5 வாகன விபத்துச் சம்பவங்களே பதிவாகியுள்ளன.

நெல்லியடிப் பொலிஸார் ரோந்து பணியில் ஈடுபட்டு வீதி போக்குவரத்து விதிகளை மீறுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தமையே இவ் விபத்துச் சம்பவங்கள் குறைவடைய காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு 31 விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன் 6 உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

2012 ஆம் ஆண்டு 15 விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன் 4 உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

ஆயினும் இவ்வருடம் 5 விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. ஆனால் எந்தவொரு உயிரிழப்பும் ஏற்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-24)

# சிவன் இசையமுதம் இறுவெட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வேலணையூர் கவிஞர் சுரேஸ் எழுதிய இறைபாடல்களை உள்ளடக்கிய இலந்தைக்காடு சிவன் இசையமுதம் இறுவெட்டு வெளியீட்டு விழா நாளை திங்கட் கிழமை பிற்பகல் 3 மணிக்கு இலந்தைக்காடு சிவன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆலய நிர்வாக சபை செயலாளர் ந. ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலக செயலாளர் ச. சிவஸ்ரீ, சிறப்பு விருந்தினர்களாக ஜே/357 சமரபாகு கிராம சேவகர் வ. தயானந்தா, ஜே/356 வல்வெட்டி மத்தி கிராம சேவகர் சி.அசோகன், ஜே/ 358 இமையாணன் கிராமசேவகர் த. சுதர்சன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ் வெளியீட்டு விழாவில் மதிப்பீட்டுரையை யாழ் பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் க.அருந்தாகரன் வழங்கவுள்ளார்.

இசையமுத பாடல்களுக்கான இசையினை இசையமைப்பாளர் ஸ்ரீ குகன் வழங்கியுள்ளார். (அ-5)

# வாரம் ஒரு தகவல்

## அடையாத இலக்கு...

ஒருவர் வெளிநாடு செல்வதற்கு தயாரான நிலையில் அவரை வழியனுப்புவதற்காக உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் வந்திருந்தனர்.

அவர் புறப்பட ஆயத்தமான போது தன்னுடைய வைரம் பதித்த மோதிரத்தையும் விரலில் அணிந்திருந்தார்.

இவரை வழியனுப்ப வந்த இவரின் நண்பர் ஒருவருக்கே இவர் அணிந்துள்ள அந்த மோதிரத்தின் மீதே பார்வை விழுந்தது.

அம் மோதிரத்தை சில நாட்களாவது தன்னுடைய விரலில் அணிந்திருக்க வேண்டுமென அந்த நண்பர் ஆசை கொண்டார்.

எப்படியாவது இந்தச் சந்தர்ப்பத்தில் அதை கேட்டு பெற்றுக் கொள்ள வேண்டுமென நினைத்த அவர், பயணமாகவிருந்தவரை பார்த்து "என்றைக்கு புறப்படுகிறீர்கள்?" என்று கேட்டார்.

அவரும் "நாளைக்கு" என்று பதிலளித்தார். இதை கேட்டதும் அந்த நண்பர் "எவை எவை தேவையோ அவற்றை மட்டும் எடுத்துச் செல்லுங்கள்" என அறிவுரை கூறுவது போன்று கூறினார்.

அதற்கு அவர் "சரி" என பதிலளித்தார். எப்படியோ தன் இலக்கை அடைய வேண்டுமென்று நினைத்த அவரது நண்பர் "தேவை இல்லாதவற்றையெல்லாம் அநாவசியமாக சுமந்து செல்ல வேண்டாம்!" என்றார்.

அதற்கு அவர் "சரி" என்றே பதிலளித்தார்.

பொறுமையிழந்த நண்பர் நாட்டிற்குத் திரும்பி வர எவ்வளவு காலமாகும்?" என வினவினார்.

"ஆறு மாதகாலம்" என அவரிடமிருந்து பதில் வந்தது.

'ஆறு மாதமா? அவ்வளவு காலம் நான் எப்படி உங்களை பிரிந்திருப்பேன்? என்று விம்மினார் அந்த நண்பர்.

பயணமாகவிருந்தவரும் எனக்கு கூட மனசு சங்கடமாகத்தான் இருக்கிறது!" என்றார்.

இதையே சந்தர்ப்பமாக பயன்படுத்திய அந்த நண்பர் "ஒன்று செய்யுங்களேன்!, உங்களுடைய வைர மோதிரத்தை என்னிடம் கொடுத்துவிட்டுப் போங்கள்... அதை பார்க்கும் போதெல்லாம் எனக்கு உங்களை ஞாபகம் வரும்" என கூறினார்.

அதற்கு அவர், இல்லை நண்பரே இந்த மோதிரம் என்னிடமே இருக்கட்டும்... அப்போதுதான் இதைப் பார்க்கும் போதெல்லாம், ஐயோ!... நண்பர் கேட்டாரே... கொடுக்கவில்லையே... என்று என்மனம் சொல்லும், ஆகவே உங்களை நான் அடிக்கடி நினைத்துக் கொள்வேன்... இல்லையா...? என்றார்."

இதைக் கேட்டதும் நண்பருக்கு வாயடைத்துவிட்டது.

அப்போதுதான் அவருக்குப் புரிந்தது அடைகிற இலக்குகளை விட... அடையாத இலக்குகளே... அழியாத நினைவுகள் ஆகின்றன என்று.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# அபிவிருத்தி வங்கியின் முதலாவது வருட பூர்த்தி

பிரதேசஅபிவிருத்தியை மையமாககொண்டு ஆரம்பிக்கப்பட்ட அரசாங்கத்தின் அபிவிருத்தி வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கியின் யாழ்ப்பாணக் கிளையின் முதலாவது வருட பூர்த்தி நிகழ்வு மாவட்ட முகாமையாளர் ச.கீர்த்திசீலன் தலைமையில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த ஒரு வருட காலத்தில் அதிகளவிலான வாடிக்கையாளர்களை ஈர்ந்துள்ள பிரதேச அபிவிருத்தி வங்கி 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்களுக்கு அபிவிருத்தி கடன்களை வழங்கியுள்ளது. அத்துடன் அதிக வட்டியுடன் கூடிய நிலையான வைப்புக்களையும் சேமிப்பு வைப்புக்களிலும் தன்னகத்தே கொண்டு தனது சேவையை வழங்கும் வங்கி Western Union பணப்பரிமாற்று சேவை அடகுச் சேவைகளை யாழ்ப்பாணம் முழுவதும் விஸ்தரித்துள்ளது.

இந்த வங்கி இலங்கையில் 267இற்கு மேற்பட்ட கிளைகளை தன்னகத்தே கொண்டு 25 வருடங்களுக்கு மேலாக தனது சேவையை வழங்கி வருகின்றது. (அ)

# பரிசளிப்பு விழா

வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு கல்லூரி அதிபர் திருமதி தேவராணி நவரட்ணம் தலைமையில் இடம் பெறவுள்ளதுடன் இதில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (அ-24)

# கொக்குவில் தூய பவுல் ஆலயத்தின் திருவிழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் தூய பவுல் ஆலயத் திருவிழாத் திருப்பலி எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 7 மணிக்கு நடைபெறும்.

நவநாள் வழிபாடுகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகி தினமும் பிற்பகல் 4.30 மணிக்கு நவநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுகிறது. எதிர்வரும் 29 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு நற்கருணை விழா நடைபெறவுள்ளது. (அ-5)

# இராசி பலன்

23.06.2013
(ஆனி09, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
பூரணை மாலை 5.40 மணிவரை
மூலம் பின்னிரவு 2.38 மணிவரை
இராகுகாலம் 4.24-5.54 மணிவரை
சுபநேரம் 8.54-10.24 மணிவரை
பூரணை விரதம், அமிர்தசித்தம்,
பொசன் முழுநோன்மதி தினம்

**மேடம்** மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், பொதுவாழ்வில் ஏற்பட்ட வீண் பழிகள் மாறும், தைரியத்தோடு செயற்பட்டு சாதனைகள் படைக்கும் நாள்.

**இடபம்** ஆதவன் வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பிள்ளைகள் வழியில் திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**மிதுனம்** நல்லவர்கள் தொடர்பால் நலம் காண வேண்டிய நாள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**கடகம்** உடல் நலம் சீராகும், பயணத்தால் பலன் கிடைக்கும், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பழைய கடன்களை அடைக்க புதிய வழியை கையாள்வீர்கள்.

**சிங்கம்** எடுத்த காரியத்தை முடிப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம் பெறலாம், புதிய நபர்களின் சந்திப்பு உண்டு.

**கன்னி** தூரத்து உறவினர்களால் நன்மையுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** பாராட்டும் புகழும் கூடும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இளைய சகோதரர் வழியில் உதவிகள் கிடைக்கலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**விருச்சிகம்** சுப காரிய பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும், பெரியவர்களின் விமர்சனங்களுக்கு உட்பட நேரிடலாம், வாக்கு மேன்மையுண்டு, தெய்விக சிந்தனை மேலோங்கும்.

**தனுசு** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சிக்கனத்தை கடைப்பிடிக்க முற்படுவீர்கள், பயணத்தால் பலனுண்டு, வழக்கமான பணிகளால் சுணக்கம் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**மகரம்** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, சுப விரயங்கள் ஏற்படும் நாள், சுபநிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு, சயன சுகக் குறைவான நாள்.

**கும்பம்** குடும்ப மகிழச்சி கூடும், சமயோசிப் புத்தியால் பலரையும் கவர்வீர்கள், பயணங்கள் அனுகூலம் தரும், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், நண்பர்கள் சந்திப்புண்டு.

**மீனம்** தொழில் நன்மை கருதி புதிய முயற்சி எடுப்பீர்கள், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும், அந்நியர் உதவியுண்டு, ஆரோக்கியமான நாள்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 30 | 50 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-160 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 120 | 120 |
| தக்காளி | 160 | 140 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 | 40 |
| கோவா | 100 | 100 | 120 | 120 |
| கரட் | 120 | 100 | 140 | 160 |
| பூசணி | 40 | 40 | 50 | 40 |
| புடோல் | 40 | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 200 | 190 | 160-220 | 140-200 |
| பெரிய வெங்காயம் | 90 | 70 | 100 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | -- | 100 |
| பயற்றங்காய் | 100 | 60 | 80 | 80 |
| லீக்ஸ் | 120 | 160 | 160 | 160 |
| பீற்றூட் | 100 | 60 | 100 | 120 |
| கறிமிளகாய் | 160 | 120 | 120 | 200 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 600 | 280 |
| போஞ்சி | 160 | 140 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 20 | 40 | 30 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 10 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 80 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 35 | 30-40 |
| இராசவள்ளி | 100 | 90 | 120 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:**

T.P : 021 321 0815, 021 567 1540

E-mail : valampuriijaffna@gmail.com


# நினைவுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மலையக போராளி ஓ.எ.இராமையாவின் நினைவு தினக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு அண்மையில் அமைந்துள்ள டி.சி.எம்.தனியார் கல்வி நிறுவனத்தில் சொ. சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளதென யாழ்ப்பாணம் சர்வதேச மார்க்சிய குழு தெரிவித்துள்ளது. (அ-5)


## ST.JOHN'S COLLEGE, JAFFNA. CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA,

## THE JAFFNA ACADEMY AND SCHOOL OF TECHNOLOGY.

ADMISSION-2014 FOR GRADE 1, GRADE 4, GRADE 6, GRADE 10 & A/L

## தரம் 01, தரம் 04, தரம் 06, தரம் 10, தரம் 12 இற்கான அனுமதி 2014

01. அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01.07.2013 முதல் 15.07.2013 வரை பெற்றுக்கொள்ளலாம்.
 ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
 இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 19.07.2013 வெள்ளிக்கிழமை. அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
02. தரம் 01 இற்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோஸ்ரட் கொப்பி) இணைக்கப்படவேண்டும்.
03. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும் விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
04. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 1000/=

**05. வயதெல்லைகள்**

 அ. தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2008 இற்கும் 31.01.2009 இற்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
 ஆ. தரம் 04 விண்ணப்பதாரி 01.02.2005 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
 இ. தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2003 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
 ஈ. தரம் 10 விண்ணப்பதாரி 01.02.1999 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

06. தரம் 12 (A/L) 2016 Batch)விண்ணப்பதாரி 01.02. 1997 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
07. தரம் 04, தரம் 06, தரம் 10 இற்கான பிரவேசப் பரீட்சை 21.09.2013 சனிக்கிழமை காலை 08.00 மணிக்கு ஆரம்பமாகும்.

**குறிப்பு:**

01. தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு 5 புலமைப்பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அனுமதிப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில புலமைப்பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.
02. சென்.ஜோன்ஸ் கல்லூரியில் தரம் 12 இற்கும் (A/L) 2016 Batch) தமிழ்/ஆங்கில மொழிமூலம் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்) London A/L 2013/2014 இற்கும் கற்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அனுமதிப்பரீட்சை 04.01.2014 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும் புதிய வகுப்புக்கள் 06.01.2014 ஆரம்பமாகும்.
03. சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 12 A/L (தமிழ்/ஆங்கில மொழி மூலம் 2016 Batch) விண்ணப்பதாரிகள் O/L பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் விண்ணப்பிக்கவும்.
 The Jaffna Academy and School of Technology இல் Gr 5, O/L, A/L விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

அதிபர்கள்

(3709)



## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்

CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

T.P. No :-021222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(சி/3631)



## வைத்திய சேவை

- On Call Doctor சேவை
- வீடுகளுக்கு வந்து நோயாளிகளை பார்வையிடும்சேவை Home Visit
- உடற்பருமன் குறைத்தல் /கூட்டுதல் தொடர்பான சிகிச்சைகள்
- முடியுதிர்தலுக்கான சிகிச்சைகள்
- முகப்பருக்களுக்கான சிகிச்சைகள்

**மேலதிக விபரங்களுக்கு : குளோபல் கிளினிக்**

இல.769, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0773179062

(3080)



## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1977 இந்து(V)
நட்சத்திரமஉத்தரம் 4
கி.பா: 26.25
உயரம்: 5'7"தகைமை/தொழில்:O/Lசாரதி
தொ.இ:B555

பிறப்பு: 1970 இந்து(V)
நட்சத்திரம்: சதயம் 4
கி.பா : 36.75 1இல் செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L சுவிடன் PR
தொ.இ:B560

பிறப்பு: 1987 இந்து(V)
நட்சத்திரம்: மூலம் 4
கி.பா :43.50 12இல் செவ்உயரம்: 5'6"
தகைமை/தொழில்- BSc Eng.UK Work Permit
தொ.இ:B561

பிறப்பு: 1978 இந்து(V)
நட்சத்திரம்: சித்திரை 4கி.பா :3.5 உயரம்: 5'8"
தகைமை/தொழில: BAஆசிரியர்
தொ.இ:B562

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1983 இந்து(V)
நட்சத்திரம்: அத்தம் 3
கி.பா : 51உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L, NITA வாடிக்கையாளர் சேவை அதிகாரி
தொ.இ:G789

பிறப்பு: 1972 (Pa)
நட்சத்திரம்: ரேவதி
உயரம்: 5' 4ல் செவ்
தகைமை/தொழில்: அவுஸ்திரேலியா PR
தொ.இ:G791

பிறப்பு: 1987 இந்து(Na)
நட்சத்திரம்: பூரம் 3 2இல் செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L
தொ.இ:G795

பிறப்பு: 1969 இந்து(V)
நட்சத்திரம்: புனர்பூசம் 4
உயரம்: 5'கி.பா:11.75, 12இல் செவ்
தங்கமை/தொழில்:BA நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்
தொ.இ:G498

சகல தொடர்புகளுக்கும்:-

## கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி





sale sale sale sale

ஆடித் தள்ளுபடி 19.06.2013 முதல்

Saravana Tex

## சரவணா ரெக்ஸ்

01, சிவப்பிரகாசம் வீதி,

வண்ணார் பண்ணை,

யாழ்ப்பாணம்.



(சி/3729)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொந்தரவு செய்த நபர்களுக்கு அபராதம் விதித்தது மன்று

(கரவெட்டி)


துன்னாலை கிழக்கு பகுதியில் பெண் ஒருவருக்கு பாலியல் தொந்தரவு மற்றும் அச்சுறுத்தல் விடுத்து வந்த மூன்று நபர்களுக்கு நீதிமன்றம் கடும் எச்சரிக்கை விடுத்ததுடன் வதிரி ஸ்ரீபரந்தாமன் ஆச்சிரம மடத்திற்கு 9 ஆயிரம் ரூபா வழங்க வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பித்தது.

கரவெட்டி கிழக்கை சேர்ந்த பெண் ஒருவரை துன்னாலை வேம்படியை சேர்ந்த மூன்று நபர்கள் பாலியல் தொந்தரவு மற்றும் அச்சுறுத்தல் செய்தார்கள் என நெல்லியடி பொலிஸாரால் வழக்கு பதியப்பட்டது.

இதன் இறுதி தீர்ப்பு நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது முறைப்பாட்டாளரான பெண் மணி குறித்த மூன்று நபர்களையும் மன்னித்து விடுமாறும், அவர்களிடம் இருந்து எதிர் வரும் காலங்களில் தனக்கு எதுவிதமான தொந்தரவுகளும் இருக்க கூடாதெனவும் நீதிமன்றத் திடம் கோரினார்.

இதனையடுத்து மூன்று நபர்களும் அதனை ஏற்றுக் கொண்டமையால் நீதவான் மூன்று நபர்களுக்கும் தலா 3 ஆயிரம் ரூபாவை மேற்குறித்த ஆச்சிரம மடத்திற்கு செலுத்துமாறும் செலுத்தியதன் பற்றுச் சீட்டை எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் உத்தர விட்டார். (அ-3-24)



நன்றி:- ஜலண்ட்

# பாதிக்கப்பட்டவருக்கு நட்டஈடு வழங்க உத்தரவு

(கரவெட்டி)

வடமராட்சி வதிரி சந்தியில் கடந்த வருடம் வாகனத்தால் மோதி நபர் ஒருவருக்கு காலில் பெரும் காயத்தை ஏற்படுத்திய சாரதி ஒரு இலட்சத்து 50ஆயிரம் ரூபா நட்ட ஈட்டை பாதிக்கப்பட்டவருக்கு வழங்க வேண்டும் என பருத்தித்துறை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

வடமராட்சி வதிரி சந்தியில் கடந்த 2012 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 3 ஆம் திகதி காலை 9.45 மணியளவில் வதிரியைச் சேர்ந்த இராமசாமி பத்மராஜ் என்பவரை நெல்லியடியைச் சேர்ந்த சாரதியான இராசசிங்கம் நாகநாதன் என்பவர் வாகனத்தால் மோதி காலில் பெரும் காயத்தை ஏற்படுத்திய வழக்கு நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது,விபத்தில் பாதிக்கப்பட்டவரான இ.பத்மராஜ் இற்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை நட்ட ஈடாக வழங்க வேண்டும் என உத்தர விட்டார்.

இதில் அன்றைய தினம் ஒரு இலட்சம் ரூபாவும் மீதி 50 ஆயிரம் ரூபாவை மறுதவணைக்கு செலுத்துமாறும் நிதவான் உத்தர விட்டார். (அ-3-24)

# எனது கணவனிடமிருந்து பிரிந்து வாழவேண்டும்

## நீதிமன்றில் வாதிட்டார் மனைவி

வடமராட்சி நெல்லியடி பொலிஸ் பிரிவில் மனைவி மற்றும் பிள்ளைகளைத் தொடர்ந்து துன்புறுத்தி வந்த கணவனை தெல்லிப்பழை வைத்தியசாலையில் மருத்துவ பரி சோதனைக்கும், ஆலோசனைக்கும் உட்படுத்துமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.




நெல்லியடி பகுதியில் மனைவி மற்றும் பிள்ளைகளை தொடர்ந்து துன்புறுத்தி வந்தவருக்கு எதிராக மனைவியால் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இவ் வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் திருமதி ஸ்ரீநிதிநந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.


மன்றில் மனைவி தன்னையும் பிள்ளையையும் கணவர் தொடர்ந்து துன்புறுத்துவதால் தானும் பிள்ளையும் அவரிடமிருந்து பிரிந்து வாழ விரும்புவதாகவும் தன்னை கணவரிடமிருந்து பிரித்து வைக்குமாறு நீதவானிடம் கோரினார்.

அதற்கு கணவர், தனது சொந்த இடம் கொழும்பு எனவும் தனக்கு மனைவியையும், பிள்ளையையும் தவிர இங்கு வேறுயாரும் இல்லை என்றும் தன்னை அவர்களிடமிருந்து பிரிக்க வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார்.

இதை மனைவி ஒப்புக் கொள்ளாது எதிர்ப்பு தெரிவித்தமையால்,

இருவரின் வாதங்களையும் கவனத்திலெடுத்த நீதவான் கணவரை தெல்லிப்பழை வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனைக்கும் மற்றும் மருத்துவ ஆலோசனைக்கும் உட்படுத்துமாறு உத்தரவிட்டதோடு,

அக்காலப் பகுதியில் மனைவி கணவருக்கு தேவையான உடுதுணி, உணவுப் பொருட்களையும் மற்றும் அத்தியாவசியப் பொருட்களையும் கொண்டு சென்று பார்வையிட வேண்டும் எனவும் மனைவியும் மருத்துவரின் ஆலோசனையைப் பெறவேண்டும் என்றும் எதிர்வரும் ஜூலை 5 ஆம் திகதி மீண்டும் கணவனை மன்றில் ஆஜர்படுத்துமாறும் உத்தர விட்டார். (அ-24)


நீராவியடி ஜெய வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த் திருவிழா நேற்றைய தினம் இடம்பெற்ற போது ....

# வடமராட்சி பகுதியில் குற்ற செயல்கள் அதிகரிப்பு

(கரணவாய்)

நெல்லியடிப் பொலிஸாரினால் வடமராட்சிப் பகுதி மக்களுக்கும் சமூக சேவை அமைப்புக்களுக்கும் அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, குடும்பத்தில் ஏற்படும் தகராறுகள், புரிந்துணர்வின்மையால் வரும் பிரச்சினைகள் , வட்டிக்கு பணத்தை கொடுத்து ஏமாற்றப்படுதல், மீற்றர் வட்டிக்கு பணம் கொடுத்தல், சீட்டு பிடித்து ஏமாறுதல், திருமணப் பிரச்சினைகள் போன்றனவற்றை உடனேயே பொலிஸாருக்கு முறைப்பாடு செய் யாது சமூக சேவை அமைப்புகள், மாதர் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் ஆகிய வற்றிற்கு, தெரிவித்து தீர்வைப் பெற்று சுமுகமாக வாழப்பழக வேண்டும் எனத்தெரிவித்துள்ளனர்.

மேலும் வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் தமது பொருட்களை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் எனவும் தற்போது ஆலய உற்சவங்கள் தொடர்ந்து நடைபெற்றுவருவதால், பொதுமக்கள் தமது உடைமைகளைத் தாமே பாதுகாக்க பழகிக் கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவங்கள், வடமராட்சி வடக்கின் உடுப்பிட்டி, மாலுசந்தி, வதிரி, இமையாணன், கரணவாய் மத்தி போன்ற பல கிராமங்களில் குறைவாகக் காணப்படுகின்றன என்றும், வடமராட்சி கிழக்குப் பகுதியான கரணவாய், கரணவாய் கிழக்கு, துன்னாலை, கரவெட்டி போன்ற இடங்களிலேயே இவை அதிகமாக காணப்படுவதாகவும் நெல்லியடி பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-60)

# வாகனத்தை கடத்திய விவகாரம்; சந்தேக நபர் கைதானார்

(கரவெட்டி)

கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் ஹயஸ் வாகனத்தை கடத்திய சம்பவத்துடன் தொடர்புடைய கம்பஹா பகுதியைச் சேர்ந்த முக்கிய சந்தேக நபரை வெள்ளவத்தை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வடமராட்சி வதிரியைச் சேர்ந்த சுப்பிரமணியம் தவச்செல்வம் என்பவருடைய GE 84 67 என்ற 'இலக்கமுடைய ஹயஸ் வாகனம் கடந்த மார்ச் மாதம் 10 ஆம் திகதி வெள்ளவத்தையில் தரித்து நின்ற போது கொள்ளையர்களால் கடத்தப்பட்டது.

பின்னர் இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக வாகன உரிமையாளரால் வெள்ளவத்தை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

விசாரணைகளை மேற்கொண்டு வந்த வெள்ளவத்தை பொலிஸார் குறித்த சந்தேக நபரை கடந்த 5 ஆம் திகதி கம்பஹா பகுதியில் வைத்து கைது செய்தனர்.

சந்தேகநபர் 5 வாகனங்களைக் கொள்ளையடித்ததை பொலிஸாரிடம் ஒப்புக் கொண்டதையடுத்து 2 வாகனங்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-24)

# வங்கிப் பயிற்சி

(தும்பளை)

புதிதாக நியமிக்கப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வங்கிப் பயிற்சி நாளை திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை காலை 8.30 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு ஒவ்வொரு பிரதேச செயலகங்களில் இருந்தும் புதிதாக நியமிக்கப்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களில் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் பங்குபற்றுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-3-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி தவமணிதேவி சதாசிவம், சாவகச்சேரி

அன்பின் வியாசரே!

எப்போது எமக்கு ஈடேற்றம் வரும்?

*அமெரிக்கன், சீனன் , இலங்கைத் தமிழன் ஆகிய மூவரும் கடவுளிடம் சென்று சுவாமி எமக்கு எப்போது ஈடேற்றம் வரும் என கேட்கின்றார்கள். அப்போது கடவுள் கூறுகின்றார், நீங்கள் மூவரும் பத்து நிமிடங்கள் என்னை நினைத்து தியானம் செய்தால் போதும் என்றரார். மூவரும் ஒரு மரத்தின் கீழ் தியானம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். தியானத்தின் ஐந்தாவது நிமிடம் கடவுள் பிச்சைக்காரன் போல் உருவெடுத்து அவர்கள் தியானம் செய்யும் இடத்திற்கு வருகின்றார். அமெரிக்கன் தியானம் செய்யும் இடத்திற்கு சென்று அவனை தட்டி எழுப்புகிறார் பிச்சைக்காரன். கண்விழித்துப் பார்த்தவன் பிச்சைக்காரனுக்கு பத்து ரூபா பணத்தைக் கொடுத்து விட்டு மீண்டும் தியானத்தில் மூழ்கினான். அடுத்து சீனன் அருகில் சென்று அவனையும் தட்டுகிறார். சீனனும் பத்து ரூபாய் கொடுத்து விட்டு தியானத்தில் மூழ்கினான். மூன்றாவதாய் நம் தமிழனிடம் சென்று அவனின் தியானத்தை கலைக்கிறார். விழித்துக் கொண்ட தமிழன் அடே பிச்சைக்காரா இறைவனின் ஆசிபெற இன்னமும் ஒரு நிமிடமே இருந்தது அதற்குள் குழப்பி விட்டாயே! என்று திட்டித் தீர்த்து விட்டு மறுபடியும் இறைவனை நினைத்து தியானம் செய்ய ஆரம்பித்தான். இப்போது புரிகிறதா நமக்கு ஈடேற்றம் ஏன் வரவில்லை என்று?*

வல்லவன் வாரிவளவு, காரைநகர்

அன்பின் வியாசரே!

வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டா?

*நல்லவனுக்கு நல்லவன் இருக்கும் போது வல்லவனுக்கு வல்லவன் இருக்க முடியாதா?*

செ.மிதுஷா

அன்பின் வியாசரே!

தாய் தந்தையரை மதிக்காத பிள்ளைகளை பற்றி உங்கள் கருத்து என்ன?

*இன்று அவர்கள் பிள்ளைகளாக இருக்கும் போது புரியாது. நாளை அவர்கள் பெற்றோர்கள் ஆகும்போது புரியும்.*

## வியாசரே நீங்கள் கடவுளைத் தேடி போனதுண்டா?

தர்ஷிகா, யாழ்ப்பாணம்

அன்பின் வியாசர் அண்ணாவுக்கு!

சிரிக்கவும் சிந்திக்கவும் சீரியஸ்சாகவும் கேட்கப்படும் கேள்விகளுக்கெல்லாம் பதில் கொடுக்கப்படுகிறதே சினிமாக் கேள்விகள் தவிர்க்கப்படுகிறதே ஏன்?

*கவர்ச்சியை காட்டி எழுதுவதற்கு எனக்குத் தெரியாது ம்ம்ம்... இனிமேல் கேளுங்கள் தரப்படும்.*

சாந்தி, கோவிலாக்கண்டி

அன்பின் வியாசர்!

வியா நீங்கள் செய்த நல்ல செயல் ஒன்றும் தீய செயல் ஒன்றும் கூறுங்களேன்?

*நேற்று யாழ்ப்பாணம் போகும் போது வீதியில் கிடந்த பாரிய கல்லொன்றை தூக்கி வீதி ஓரமாக போட்டேன். போட்ட கல் ஒருவன் தலையில் வீழ்ந்து விட்டது. அவனை வைத்தியசாலையில் சேர்த்து விட்டே வீடு சென்றேன்.*

## வியா நீங்கள் செய்த நல்ல செயல் ஒன்றும் தீய செயல் ஒன்றும் கூறுங்களேன்?

வே.வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி

வியாசரே நீங்கள் கடவுளைத் தேடி போனதுண்டா?

*ஒருநாள் எப்படியாவது கடவுளைக் கண்டு விடவேண்டுமென முடிவெடுத்து வடக்கு நோக்கி நடந்தேன் கடல் வந்தது நான் திரும்பி வந்து விட்டோன்.*

ச.டிலக்சனா, வவுனியா

அன்பின் வியாசரே!

இந்தியாவில் காணப்படும் Ajmer என்ற இடத்தைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்.

*ஜுலை மாதம் தான் யாத்திரை செல்கின்றேன். சென்றுவிட்டு வந்தவுடன் கூறட்டுமா?*




சு.ஜெயரூபன், பருத்தித்துறை

அன்பின் வியாசரே!

இன்று எங்கள் யாழ்ப்பாணத்தில் மது பான விற்பனை கொடிகட்டிப் பறக்கின்றதே... அதற்குக் காரணம் என்ன?

*எம் பண்பாடு, கலாசாரம் காற்றோடு பறந்து நிறைய நாட்கள் ஆகிவிட்டது. ஆனால், நாம் இப்போதும் மேடைபோட்டுப் பேசிக் கொண்டிருக்கிறோமே.*

### வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்....

பைத்தியக்காரன் ஒருவன் கடவுளுக்கு கடிதம் எழுதி வைத்தியனிடம் Post பண்ணும்படி கொடுக்கின்றான். வைத்தியரும் வாங்கி அவன் என்ன எழுதியிருக்கிறான் என பார்க்கிறார். அதில் கடவுளிடம் நூற்றுஐம்பது ரூபா பணம் தரும்படி கேட்டிருந்தான். மறுநாள் வைத்தியர் நூறு ரூபாவை கவரில் வைத்து கடவுள் அனுப்பியதாக பைத்தியக்காரனிடம் கொடுக்கிறார். உடனே பைத்தியக்காரன் கோபத்துடன் ஒரு கடிதத்தை எழுதி வைத்தியரிடம் கொடுக்கின்றான் கடவுளிடம் கொடுக்கச் சொல்லி. வைத்தியர் அதை பிரித்து வாசிக்கிறார்

"கடவுளே இனிமேல் எனக்கு பணம் தருவதாக இருந்தால் நேரடியாக என்னிடம் தாருங்கள். வைத்தியர் ஐம்பது ரூபாவை எடுத்து விட்டார்"

### அன்பு வாசகர்களே....!

உங்கள் கேள்விகளை

ஆசிரியர், வியாசர் பதில்கள்

இல.3, 2 ஆம் ஒழுங்கை,

பிறவுண் வீதி , யாழ்ப்பாணம் என்ற

முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

# ஐ.தே.கவின் அரசியலமைப்பு ஆளும் கட்சியிடம் ஒப்படைப்பு

ஐக்கிய தேசியக் கட்சி தயாரித்துள்ள புதிய அரசியலமைப்பு நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது. ஐ.தே.க. எதிர்காலத்தில் ஆட்சிக்கு வந்தால் அமுல்படுத்தும் நோக்குடன் தயாரிக்கப்பட்டுள்ள இந்த புதிய அரசியலமைப்பு ஐ.தே.க. செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவினால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செயலாளர், அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செயலகத்தில் இடம்பெற்றது. மக்கள் இறைமை மீண்டும் உங்களுக்கு என்ற தொனிப் பொருளில் இந்தச் சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த சு.க. செயலாளர், அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, ஐ.தே.க.தயாரித்துள்ள புதிய அர சியலமைப்பை மேலும் ஆராய்வதற்காக சுதந்திரக் கட்சி மத்திய செயற்குழுவுக்கு சமர் ப்பிக்கவுள்ளதாக தெரிவித்தார். இதனை முழுமையாக ஆராய்ந்த பின்னர் ஐ.தே.க. அரசியலமைப்பு குறித்து தமது நிலைப்பாட்டை வெளியிடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் ஐ.தே.க. எம்.பிகளான ரவி கருணாநாயக்க, விஜயதாச ராஜபக்ஷ ஆகியோரும் பங்கேற்றனர்.

ஐ.தே.க.வின் புதிய அரசியல் அமைப்பு பல்வேறு கட்சிகள் மற்றும் அமைப்புக்களுக்கு கையளிக்கப்பட்டு வருவது தெரிந்ததே. (அ-2)

# ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் முன்னாள் புலிகளே ஈடுபடுகின்றனர்

## கூறுகிறார் அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

இலங்கையில் யுத்தத்தில் தோற்றதன் பின்னர் எஞ்சியுள்ள விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் ஆட்கடத்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அவுஸ்திரேலிய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

யுத்தம் நிறைவடைந்த பின்னர் விடுதலைப் புலிகளின் எஞ்சிய தரப்பினர் வெளிநாடு களில் செயற்பட்டு வருகின்றனர். அவர்களால் மேற்கொள்ளப்படும் ஆட்கடத்தல் செயற்பாடுகளாலேயே தற்போது அவுஸ் திரேலியா சிக்கலை எதிர்நோக்கியுள்ளது.

எனவே இந்த சிக்கலில் இருந்து மீள வேண்டுமாக இருந்தால் அவுஸ்திரேலியா விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்ய வேண்டும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்துள்ள போதும் அவுஸ்திரேலியா இன்னும் அதனை தடை செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# வடமராட்சி வடக்கு பிரதேச செயலக கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

(தும்பளை)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் விபரம் வருமாறு,

**திறந்த பிரிவு**

**பாடலாக்கப்போட்டி**

பா.வேதநாயகம், இ.திருத்துவராஜா, கா.சின்னராஜன்

**நாட்டார் கலை கற்றற்போட்டி**

மு.தணிகாசலம், பா.வேதநாயகம்

**விபரணப்போட்டி**

பெ.ஐங்கரன், மு.தணிகாசலம், இ.திருத்துவராஜா

**சிறுகதைப்போட்டி**

பா.வேதநாயகம், பா.மதனரூபி, இ.சச்சிதானந்தன்

**கவிதைப்போட்டி**

பா.மதனரூபி, பெ.ஐங்கரன், இ.திருத்துவராஜா

**சிறுவர் கதைப்போட்டி**

கு.ஜனனி, பா.வேதநாயகம்

**சிரேஷ்டபிரிவு**

**கவிதைப்போட்டி**

சி.கோமகன் (யா/ புற்றளை மகா வித்தி

**கட்டுரைப்போட்டி**

ப.கஜலட்சுமி (யா/ புற்றளை மகா வித்தி), க.விதுர்ஷா (யா/ வட.இந்து மகளிர் கல்லூரி)

**கவிதைப்பாடல்**

நா.சுபேசன் (யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி), க.தனுஷன் (யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி), வி.ரஜீஷன் (யா/வேலாயுதம் ம.வி)

**கனிஷ்ட பிரிவு**

**கவிதைப்போட்டி**

சி.அஜீவா (யா/பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி), வி.திருமகள் (யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தி),இ.கிருத்திகா (யா/புற்றளை ம.வி)

**கட்டுரைப்போட்டி**

சு.கிருத்திகா (யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி),ச.சர்மினி (யா/ புற்றளை ம.வி),வ.துஷாயினி (யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி)

**கவிதைப்பாடல்**

சி.சங்கவி (யா/ வட இந்து மகளிர் கல்லூரி), அ.ஆன்றிதுஷா (யா/ தும்பளை சிவப்பிரகாச ம.வி), சி.பிரதீப்குமார் (யா/வேலாயுதம் ம.வி)

**பாலர் பிரிவு**

**உறுப்பெழுத்துப்போட்டி**

த.தர்சிகா (யா/ பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி,மு.வைஷ்ணவி (யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி), செ.நிதுஷா (யா/புற்றளை ம.வி) (அ-19)

# ஒலித்தது கைபேசி; செலுத்தினார் அபராதம்

(கரவெட்டி)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் கடந்த வியாழக்கிழமை தவறுதலாக கையடக்கத் தொலைபேசியின் சத்தத்தை ஒலிக்கவிட்ட நபர் ஒருவருக்கு மூவாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார்.

மன்றில் வழக்கு இடம்பெற்றுக் கொண்டிருந்த போது திடீரென வழக்கிற்கு வந்த நபர் ஒருவரின் கையடக்கத் தொலைபேசியின் அழைப்புச் சத்தம் ஒலித்ததை அடுத்து நீதிமன்ற பொலிஸார் குறித்த நபருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்தனர். குறித்த நபரை மன்றில் ஆஜர்படுத்திய போது நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் விசாரணையின் பின்னர் மூவாயிரம் ரூபாவை அபராதமாக செலுத்துமாறு உத்தரவிட்டார்.

நீதிமன்றத்திற்குள் கையடக்கத் தொலைபேசி பாவனை முற்றாக தடைசெய்யப்பட்டிருந்த நிலையில், குறித்த நபரின் கையடக்க தொலை பேசி திடீரென இயங்கியமையினாலேயே மேற்படி அபராதம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-24)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

494

## நகரைத்தாக்க வந்த நரி




வெகு காலத்திற்கு முன் போதிசத்வர் காசியில் ஒரு உயர் குடும்பத்தில் பிறந்து எல்லா சாஸ்திரங்களையும் கற்று மிகச் சிறந்த பண்டிதராக விளங்கினார். அதனால் காசி மன்னன் அவரைத் தன் ஆஸ்தானப் புரோகிதராக நியமித்துக் கொண்டான். போதிசத்வர் பல பழைய கிரந்தங்களைத் தணிக்கை செய்து வந்த போது அவற்றில் ஒன்றில் ஒரு அற்புத மந்திரத்தைக் கண்டு கொண்டார். அது சக்தி வாய்ந்தது. அதை உச்சரித்தால் எப்படிப்பட்ட பலசாலியான எதிரியும் பணிந்து போயாகவேண்டும். இந்த மந்திரத்தைத் தெரிந்து கொண்டும் போதிசத்வரு

**அம்புலிமாமா கதைகள்**


க்கு யாரையும் படிய வைத்து தன் அடிமை போல நடத்த விருப்பம் இல்லை. அதை மறந்து மறைந்து போக விடக் கூடாது என அவர் எண்ணினார். ஒரு நாள் ஒரு காட்டிற்குள் மக்கள் நடமாட்டமே இல்லாத ஒரு பகுதியில் ஒரு உயர்ந்த பாறை மீது அவர் உட்கார்ந்து தாம் கற்ற அந்த அற்புத மந்திரத்தைப் பல முறை உரத்த குரலில் கூறினார். மாலையானதும் அவர் அப்பாறை மீதிலிருந்து கீழே இறங்கி நகருக்கு திரும்பிச் செல்லலானார். அப்போது அந்தப் பாறையின் பின்னால் இருந்து ஒரு நரி ஓடி வந்து அவரைக் கண்டு வணங்கி "மகா பண்டிதரே! நீங்கள் கூறிய மந்திரத்தை நான் மனப்பாடம் செய்துவிட்டேன். உங்களுக்கு மிக்க நன்றி" எனக் கூறிவிட்டு அங்கிருந்து ஓடியது. சக்வாய்ந்த மந்திரத்தைத் தந்திரசாலியான நரி கற்றது சரியல்ல என நினைத்து அவர் அந்த நரியைப் பிடிக்க முயன்றார். ஆனால் அப்போது மிகவும் இருட்டி விட்டதாலும் நரி புதர்களுக்கு இடையே ஓடி மறைந்தாலும் அவரது முயற்சி பலிக்கவில்லை.

அந்த நரி முன் பிறப்பில் ஒரு பிராமணனாக பிறந்து பிறரை ஏமாற்றியே வந்திருந்தது. அந்தப் பிறப்பின் காரணமாக அதற்கு இப்போது தான் கற்ற மந்திரத்தின் சக்தி தெரிந்து போயிற்று.

வேகமாக ஓடிய நரி தன்



எதிரே தன்னை விட பலம் பொருந்திய வேறொரு நரி வருவகைக் கண்டது. உடனே அது தான் கற்ற மந்திரத்தை மனத்திற்குள் உச்சரிக்கவே



பலசாலியான அந்த நரி திடீரென அதன் முன் விழுந்து வணங்கி பணிவுடன் அது செல்ல வழியை விட்டது. மந்திரம் கற்ற நரி இதனால் ஏரேயடியாக மகிழ்ந்து போயிற்று.

அன்று முதல் அந்த நரி தான் கற்ற மந்திரத்தால் நரிகள், காட்டுப் பன்றிகள், புலிகள், யானைகள், சிங்கங்கள் முதலியவற்றைத் தனக்குப் பணிந்து போக வைத்தது. இதனால் எல்லா மிருகங்களும் அதனை தம் அரசனாக ஏற்றுக் கொண்டன.

அரசனான நரி ஒரு பெண் நரியைத் திருமணம் செய்து கொண்டு அதனை அரசியாக அறிவித்தது. தனது அரசவை மந்திரிகளாக யானைகளையும் படைத் தலைவர்களாக சிங்கங்களையும் புலிகளையும் அந்த நரி நியமித்துக்கொண்டது.

காட்டிலுள்ள எல்லா மிருகங்களும் உகிலேயே அதனைப் போன்ற சக்தி வாய்ந்த அரசன் இல்லை எனப் புகழ்ந்தன.

கர்வம் தலைக்கு ஏறியதால்



அந்த நரி "இப்போது நான் மிருகங்களுக்கு மட்டுமே அரசன். இனி காசிநகர் மீது

எல்லா மிருகங்களும் தனக்கும் தன் மனைவிக்கும் பயந்து அடங்கி ஒடுங்கிப் பணிவிடை செய்தது கண்டு அந்த நரிக்கு கர்வம் வந்து விட்டது. அது இரு யானைகளின் மீது ஒரு சிங்கத்தை நிற்கவைத்து அதன் மீது தான் அமர்ந்து காட்டில் திரியலாயிற்று.

படை எடுத்துப்போய் அங்கு உள்ளவர்களையும் பணிய வைத்து மனிதர்களின் மன்னனாகவும் விளங்குகிறேன்" என எண்ணியது.

சில நாட்களுக்குப்பின் அது பலம் மிகுந்த பல சிங்கங்களையும் புலிகளையும் மற்றும் பல மிருகங்களையும் சேர்த்து ஒரு படையாகத் திரட்டி காசி நகரின் மீது படைஎடுத்துச் சென்றது. தம் நகரைத் தாக்கப் பல மிருகங்கள் வருவது கண்டு சில நகரவாசிகள் ஓடி மற்றவர்களை எச்சரித்தார்கள்.

இதனால் நகரில் ஒரே அமளி ஏற்பட்டது. நரியும் தன் படையோடு காசிநகரின் தலை வாசலை வந்து அடைந்தது. அது நடுநடுங்கும் காவலாளிகளிடம் "அடே! இப்போது உங்கள் மன்னவிடம் போய் எனக்குப் பணிந்து போகச் சொல்லுங்கள். இல்லாவிட்டால் என் படை நகரில் புகுந்து எல்லாவற்றையும் நாசமாக்கிவிடும்" என்று கூறியது.

காவலாளிகளும் ஓடிப் போய் காசிமன்னனிடம் நரி கூறியதைச் சொன்னார்கள். அது கேட்டு மன்னன் நடுநடுங்கினான். அப்போது போதிசத்வர் "அரசே, நான் இதற்குத் தீர்வு காண்கிறேன்" என்று கூறினார்.

பிறகு அவர் வீரர்களை அழைத்து "நகரில் உள்ளவர்கள் எல்லாரையும் தங்களது காதுகளில் மறக்காமல் பஞ்சை வைத்து அடைத்துக் கொள்ளச் சொல்லுங்கள்" என்றார்.

வீரர்களும் மக்களிடம் சென்று போதிசத்வர் கூறியதைக் கூற, எல்லோரும் அவ்வாறு செய்தனர். வீரர்கள் போதிசத்வரிடம் அந்தத்தகவலையும் தெரிவித்தார்கள்.

அப்போது அவர் தலைவாசலுக்குப் போய் நரி மன்னனிடம் " நீ என்ன வேண்டுமானாலும் உனது விருப்பப்படி செய்துகொள் " என்றார்.

இரு யானைகளின் மீது நின்ற சிங்கத்தின் மீது அமர்ந்திருந்த நரி சிங்கங்களை எல்லாம் பயங்கரமாக கர்ஜிக்கும்படிக் கட்டளையிட்டது. சிங்கங்களும் மிகவும் பயங்கரமாக கர்ஜித்தன.

ஆனால், காசி நகரவாசிகள் தம் காதுகளில் பஞ்சை அடைத்துக் கொண்டதால் அந்த கர்ஜனையைக் கேட்கவே இல்லை. ஆனால், சிங்கங்களின் கர்ஜனை கேட்டு நரி மன்னனைச் சுமந்து நின்ற யானைகள் துள்ளிக் குதித்து ஓடின.

அதனால் அவற்றின் மீதிருந்த சிங்கம் கீழே விழ அதன் மீதிருந்த மன்னனான நரியும் உருண்டு விழுந்தது. பயந்து ஓடும் யானைகள் இந்த நரியைத் தம் கால்களால் நசுக்கின.

மற்ற மிருகங்களும் பயந்து ஓடவே அவை கூட நரி மன்னனின் உடலை மிதித்தவாறே சென்றன. இந்த அமளியில் நரியும் பல மிருகங்களும் இறந்து போயின. எஞ்சியவை காட்டிற்கு ஓடி விட்டன. இதன் பின் நகர மக்கள் தம் காதுகளில் அடைக்கப்பட்ட பஞ்சை எடுத்தனர். நகருக்கு வெளியே வந்து அவர்கள் எல்லோரும் இறந்து கிடந்த மிருகங்களின் தோல்களை உரித்து எடுத்துக் கொண்டனர்.

இவ்வாறு நரி மன்னனை ஒழித்துக் காட்டு பயங்கரமிருகங்களிடம் இருந்து தம்மைக் காப்பாற்றிய போதிசத்வரை காசி மன்னனும் மக்களும் போற்றிப் புகழ்ந்து தம் நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தடை மாத்திரை கொடுக்க முயன்றவருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையின் மகளிர் பிரிவினுள் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதியொருவருக்கு கருத்தடை மாத்திரைகளை வழங்க முயன்ற சந்தேக நபரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி கொழும்பு மேலதிக நீதவான் பிரியந்த லியனகே உத்தரவிட்டுள்ளார். குறித்த நபர் சிறையிலுள்ள தனது உறவினரொருவருக்கு வழங்கும் பொருட்டே இதனை சிறைச்சாலைக்கு கொண்டுவந்துள்ளார்.

கைதிக்கு வழங்குவதற்கென கொண்டு வந்த உணவில் கோழித்துண்டொன்றினுள் 4 மாத்திரைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. குறித்த உறவினர் உணவைக் கொடுக்க முற்பட்ட வேளை சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவினரால் உணவு சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது மாத்திரைகள் கண்டு பிடிக்கப்பட்டன. உடனடியாகவே அவர் கைது செய்யப்பட்டார். (அ-2)

# வடக்குக் கிழக்கில் 25 ஆயிரம் வீடுகள்

## அமைக்கப்படும் என்கிறது ஐரோப்பிய ஒன்றியம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சுமார் 25 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கைப் பிரதிநிதி பெர்னாட் சாவேஜ் இந்த உறுதிமொழியை அளித்துள்ளார். அடுத்த ஆண்டில் இந்த வீடமைப்பு திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதென பிரதமர் டி.எம்.ஜயரட்ணவை சந்தித்த போது, சாவேஜ் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

மேலும் நாட்டின் அபிவிருத்திக்கு முழுமையான அளவில் உதவிகளை வழங்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை யுத்தம் இடம்பெற்ற காலத்தில் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய ஒத்துழைப்பிற்கு நன்றி பாராட்டுவதாகவும் யுத்த நிறைவின் பின்னர் நாட்டின் அனைத்து மக்களும் சமாதானத்துடன் வாழ்ந்து வருவதாக பிரதமர் குறிப்பிட்டார். (அ-2)

# நஞ்சற்ற உணவும் நல்ல தண்ணீரும்

## இன்று கருத்துரை

தேசிய கலை இலக்கியப் பேரவையின் சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தில் இடம்பெறும் நஞ்சற்ற உணவும் நல்ல தண்ணீரும் எனும் தலைப்பிலான கருத்துரை இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலைக்கு முன்பாக அமைந்துள்ள செயல் திறன் அரங்க இயக்கம் மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கான தொடக்கவுரையை ச.சத்தியதேவன் ஆற்ற, கருத்துரையை சூழலியலாளர் பொ. ஐங்கரநேசன் நிகழ்த்தவுள்ளார்.

இக் கருத்துரையை தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறவுள்ளமையால் கலை இலக்கிய சமூக விஞ்ஞான அறிவியல் ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ-5)

# கேணலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவி வழங்கிய இராணுவ கேணல் ஒருவருக்கு எதிரான வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு நடைபெற்ற தயட்ட கிருல கண்காட்சியில் புலிகள் குண்டுத் தாக்குதல் நடத்த குறித்த இராணுவ கேணல் ஒத்துழைப்பு வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சாட்சியங்கள் தொடர்பில் தகவல்களை திரட்ட கால அவகாசம் வழங்குமாறு சட்டத்தரணி நீதிமன்றில் கோரியுள்ளார்.

இதன்படி குறித்த தகவல்களைத் திரட்டுவதற்கு ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி வரையில் கால அவகாசம் வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

கேணல் ரஞ்சித் சந்திரசிறி பெரேரா எனப்படும் ஆர்மி அங்கிள் என்பவருக்கு எதிராக இவ்வாறு வழக்குத்தாக்கல் தொடரப்பட்டுள்ளது. (அ-2)

# கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் வீதி நாடகத்திற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் நிறுவனம் நடத்தும் வாக்காளர் பதிவிற்கான விழிப்பூட்டல் எனும் தொனிப்பொருளிலான வீதி நாடகப் போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் நாடக குழுக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி வீதி நாடக போட்டியில் பங்குபற்றும் நாடக குழுவில் 6 நபர்கள் பங்குபற்ற முடியும்.

அத்துடன் வழங்கப்படும் நாடக ஆற்றுகை 10முதல் 15 நிமிட கால எல்லைக்குள் அமைந்திருத்தல் வேண்டும். போட்டிகள் யாவும் எதிர்வரும் ஜூலை மாதம் 13 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளன.

எனவே மேற்படி போட்டியில் பங்கேற்க விரும்பும் நாடகக் குழுக்கள், சமூக அமைப்புக்கள், பங்குபற்றும் நாடக உறுப்பினரின் பெயர் அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய விண்ணப்பப்படிவத்தை எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னதாக இயக்குநர் இல 14, மத்தியூஸ் வீதி, கரித்தாஸ்-கியூடெக் ,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

தபால்உறையின்இடதுபக்கமேல்மூலையில் வீதி நாடக போட்டி என குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலும் போட்டியில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று குழுக்களுக்கும் வெகுமதியான பரிசும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதாகவும் போட்டியில் பங்குபற்றும் குழுக்களுக்கு வேறு கொடுப்பனவுகள் வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# இறுவெட்டு வெளியீடு

(தும்பளை)

பாடலாசிரியர் பொன்.சுகந்தனால் எழுதப்பட்டு தென்னிந்திய முன்னணி பாடகர்களால் பாடி இசையமைக்கப்பட்ட நயினை நாகபூஷணி அம்மன் ஆலய அருள் கானங்கள் இறுவெட்டு வெளியீடு நாளை திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் ப.க. பரமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் இறுவெட்டை நடராசா ரவிதரன் வெளியிட்டு வைக்கவுள்ளார். (அ-3-19)

# தன்சானியாவை தன்பக்கம் இழுப்பாரா ஜனாதிபதி

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை தன்சானியாவிற்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

ஐந்து நாட்கள் பயணமாக அங்கு செல்லும் அவர், வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி வரை அங்கு தங்கியிருப்பார்.

இலங்கை ஜனாதிபதி ஒருவர், ஆபிரிக்க நாடான தன்சானியாவுக்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாக அமையவுள்ளது.

இதன்போது தன்சானிய ஜனாதிபதி ஜகாயா கிக்வெரேயைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ள மஹிந்த ராஜபக்ஷ, இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இந்த ஆண்டு இறுதியுடன் அங்கோலா, உகண்டா, லிபியா, மொரிட்டானியா ஆகிய நாடுகளின் உறுப்புரிமைக் காலம் முடிவடையவுள்ளது.

ஜெனீவாவில் தமக்குச் சாதகமான நிலையை உருவாக்கும் வகையில் தன் பக்கம் இழுத்து தன்சானியாவை ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் உறுப்பினர் பதவிக்கு போட்டியிட வைப்பது இலங்கை ஜனாதிபதியின் திட்டமாகக் கருதப்படுகிறது.

ஆபிரிக்க நாடுகளை தன் பக்கம் இழுத்துக் கொள்ளும் இலங்கை அரசின் திட்டத்தின் ஒரு கட்டமாகவே மஹிந்த ராஜபக்ஷவின் இந்தப் பயணம் அமையவுள்ளது. (அ-2)


**வீடு விற்பனைக்கு**

இருபாலைச் சந்திக்கு அருகில் 3½ பரப்பில் வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு. அத்துடன் அதன் அருகில் 4பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

விலை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 0773326653, 0770582062

(3085)




**மணி விழா நாயகனை வாழ்த்துகின்றோம்**

ஓய்வுநிலை கணித பாட ஆசிரிய ஆலோசகரும் வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலனசபை, வேலணை ப.நோ.கூ.சங்கம் ஆகியவற்றின் தலைவருமான எங்கள் அன்புக்குரிய **திரு.ந.ஜெகநாதன** அவர்களின் இன் றைய (23.06.2013) மணிவிழா நிகழ்வுகள் வெகு சிறப்பாக அமையவும் அவரின் ஓய்வுநாட்கள் ஊர் வளர்ச்சியில் முக் கிய பங்காற்றவும் அவரும் குடும்பத்தினரும் எல்லா நலமும் பெறவும் பெருங்குளத் தன்னையை இறைஞ்சிப் பணிகின்றோம்.

ந.நவரெத்தினமும்
(ஓய்வுபெற்ற தபாலதிபர்) குடும்பத்தினரும்
கலையகம், வேலணை - 01

(சி-3724)


**கேன் புற்றுநோயாளர் காப்பகம்**

இல.5 சபாபதிப்பிள்ளை வீதி. உடுவில்.

வாகனம் விற்பனைக்கு உண்டு

'மைக்றோ' (MICRO) NPJR - 7209 இலக்க வாகனம் ஒன்று விற்பனைக்கு உள்ளது. தங்களின் கூறுவிலையை கீழ்க் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் 05.07.2013 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். தபால் உறையின் இடது பக்கத்தில் வாகன கூறுவிலை என குறிப்பிடவும்.

இவ்வாகனத்தின் குறைந்த பட்ச விலை 850,000.00 ஆகும். இவ் வாகனத்தை 01.07.2013 ஆம் திகதி தொடக்கம் 04.07.2013 ஆம் திகதி வரை வேலை நாட்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை பார்வையிடலாம். எமது தொலைபேசி இலக்கம் 021 2240258

முகவரி: தலைவர்,
கேன் புற்றுநோயாளர் காப்பகம்,
இல.05, சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில்.

(3106)



**வீடு விற்பனைக்கு**

நெடுந்தீவு மேற்கு 2 ஆம் வட்டாரத்தில் பெரிய வீட்டுடன் கூடிய காணி நல்ல தண்ணீர் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. வீடு தனியாகவும் கழற்றிக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0778996130



**கார் விற்பனைக்கு**

பருத்தித்துறையில் Nissan Sunny V.15 சில்வர் நிற A/C கார் விற்பனைக்குண்டு.

இல.KA - XXXX

சனி, ஞாயிறு தினங்களில் நேரில் பார்வையிடலாம்.

தொடர்புகளுக்கு: 0770760717

(சி-3727)



**வீடு, வளவு விற்பனைக்கு**

அச்சுவேலி சென் திரேசா பாடசாலைக்கு அருகாமையில் 6 ¾ பரப்புக் காணியும் வீடு வளவும் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
தொ.பே. : 0779552665.
0776691216

(3101)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றுவலுவுள்ளோருக்கு சாரதி அனுமதிப்பத்திரம்

(சிவநகர்)

மாற்றுவலுவுள்ளோருக்கு சாரதி அனுமதிப்பத்திரம், மருத்துவ அத்தாட்சிப் பத்திரம் வழங்குவதற்கான பதிவுகளும் கலந்துரையாடலும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு கரைச்சி, பூநகரி, கண்டாவளை, பளை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 85 பேர் வருகை தந்திருந்தனர். இதில் சிறு வலுவிழப்பைக் கொண்ட 20 பேர்களுக்கு மருத்துவ அத்தாட்சிப் பத்திரம் வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

மிகுதி 65 பேரையும் கொழும்பிலுள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் தலைமைப் பணிமனைக்கு அழைத்துச் சென்று சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சாரதி அனுமதிப் பத்திரம் தேவைப்படும் மாற்றுவலுவுள்ளோர்கள் பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (3-254)

# முல்லை–வவுனியா தனியார் பேருந்துகளில் அதிக கட்டணம் அறவிடப்படுகின்றது

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவிலிருந்து வவுனியா நோக்கி செல்லும் தனியார் பேருந்துகளில் பணம் அதிகமாக அறவிடப்படுவதாகவும், பயணிகளை தரிப்பிடங்களில் இறக்கிவிடும் நேரங்களில் ஒழுங்கற்ற தன்மை உள்ளதாகவும் பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

முல்லைத்தீவிலிருந்து ஒட்டுசுட்டான், நெடுங்கேணியூடாக பேருந்துகள் வவுனியாவை சென்றடைகின்றன. முல்லைத்தீவிலிருந்து வவுனியாவுக்கான தூரம் 78கிலோ மீற்றராகும்.

பாதைகள் புனரமைப்புச் செய்யப்படுவதற்கு முன்னர் இலங்கை போக்குவரத்துச் சபையினரின் பேருந்துகளும் தனியார் பேருந்துகளும் ஆரம்பிக்கும் நேரத்திலிருந்து 3 1/2 மணித்தியாலங்களில் வவுனியாவைச் சென்றடைந்தன.

ஆனால், தற்போது இவ் வீதிகள் புனரமைக்கப்பட்டு காப்பெற் இடப்பட்டுள்ள நிலையில் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் ஏறத்தாழ 2.15 மணித்தியாலங்களில் வவுனியாவை சென்றடைகின்றபோது தனியார் பேருந்துகள் மட்டும் ஏறத்தாழ 3 மணித்தியாலங்களை எடுக்கும் நிலையில் அவசர தேவைகளை நிறைவேற்ற செல்லும் பயணிகள் அலுவலர்கள் என அனைத்துத் தரப்பினரும் பாதிக்கப்படுகின்றனர்.



அத்துடன் முல்லைத்தீவிலிருந்து வவுனியா செல்வதற்கு இலங்கை போக்குவரத்துச் சபையினரின் பேருந்து 136 ரூபாவை அறவிடுகின்றபோது, தனியார் பேருந்துகள் 180 ரூபாவை அறவிடுகின்றன.

இவ்வாறாக அரச பேருந்துகளுடன் ஒப்பிடுகையில் தனியார் பேருந்துகளில் ஏற்பட்டுள்ள கட்டணம் மற்றும் நேரங்களின் வேறுபாடுகள் என்பவற்றைக் கவனத்தில் எடுக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினரிடம் பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (3-267)

## பாதை சீரின்மையால் பயணிகள் சிரமம்

(குருமன்காடு)

வவுனியா விபுலானந்த கல்லூரி பாடசாலை வீதி திருத்தப்படாமையால் பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.


நகர சபைக்கு உட்பட்ட இவ் வீதி பல ஆண்டுகளாக திருத்தப்படாது காணப்படுகின்றமையால் வீதி எங்கும் குன்றும் குழிகளுமாக காணப்படுகின்றது.

கடந்த வாரம் பாடசாலைக்கு துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த மாணவன் ஒருவன் வீதி சீரின்மையால் இடறி விழுந்தமை குறிப்பிடத்தக்கது.

இப் பிரதேச மக்களும், பாடசாலை சமூகமும் உரிய தரப்பினரிடம் இது விடயமாக எடுத்துக் கூறிய போதும், இதுவரை எது வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என கூறுகின்றனர்.

இதேவேளை, நகர சபையினர் இவ் வீதியை திருத்துவர் எனக் கூறப்பட்டபோதும் இதுவரை அவர்களால் எந்தவித திருத்த வேலைகளும் மேற் கொள்ளப்படவில்லை. (3-250)





மிகவும் ஆபத்தான நிலையில் முற்றாக முறிவடைந்து மின் கம்பிகளில் தாங்கியவாறு A35 வீதி புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்திற்கு அண்மையாக காணப்படும் மின் கம்பத்தை படங்களில் காணலாம். (படங்கள்- றெட்பானா செய்தியாளர்)




## சாந்தபுர வீதிகளை புனரமைக்க கோரிக்கை

(முல்லைத்தீவு)

கிளிநொச்சி மாவட்டத்தின் அம்பாள் நகர் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட சாரந்தபுர கிராமத்தின் குறுக்கு வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சாந்தபுர கிராம மக்கள் மீள்குடியேற்றப்பட்டு மூன்று வருடங்கள் கடந்து விட்டன. இங்கு 650 இற்கும் மேற்பட்ட குடும்பத்தவர் வாழ்ந்து வருகின்றனர். இக்கிராமத்தின் பிரதான வீதி இரணைமடு வீதியுடன் முடிவடைகின்றது.

மேற்படி கிராமத்தில் இருக்கும் 30 குறுக்கு வீதிகள் ஒவ்வொன்றும் சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்தைக் கொண்டுள்ளதுடன் இவை கரைச்சிப் பிரதேச சபைக்கு சொந்தமானவையாகவும் உள்ளன.

இக்குறுக்கு வீதிகளில் பண்ணை வீதி ஒன்று மட்டுமே புனரமைக்கப்பட்டுள்ளது. ஏனைய குறுக்கு வீதிகள் 25 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமையால் வீதிகளில் பாரிய பள்ளங்களும் குழிகளும் காணப்படுவதால் மழை காலங்களில் இவ் வீதியால் செல்பவர்கள் பெரும் விபத்துக்களுக்குள்ளாகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, 30 குறுக்கு வீதிகளையும் இவ் வருட இறுதிக்குள் புனரமைப்புச் செய்து தருமாறு அப்பகுதி மக்கள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (3-267)

## கிளி.தமிழ்ச்சங்கம் நடாத்தும் திருக்குறள் தமிழ் இலக்கியத் தேர்வு

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தினால் நடத்தப்படும் இவ் ஆண்டுக்கான திருக்குறள் தமிழ் இலக்கியத் தேர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கடந்த 1994 ஆம் ஆண்டு தொடக்கம் ஆண்டு தோறும் நடைபெற்று வரும் இத் திருக்குறள் தமிழ் இலக்கிய தேர்வில் ஏறக்குறைய 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் தோற்றுவர்.

கரைச்சி கோட்டத்தில் கிளி/உருத்திரபுரம் ம.வி., கிளி/சிவநகர் அ.த.க., கிளி/இந்துக் கல்லூரி, கிளி/மத்திய கல்லூரி, கிளி/திருவையாறு ம.வி., கிளி/ விவேகானந்தா வித்தியாலயம், கிளி/பாரதி வித்தியாலயம், கிளி/அக்கராயன் ம.வி., கிளி/ ஸ்கந்தபுரம் இலக்கம் 1 அ.த.க., கிளி/ வட்டக்கச்சி ம.வி., கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. ஆகியவற்றில் இப்போட்டி நடைபெறவுள்ளது.

மேலும் கண்டாவளை கோட்டத்தில் கிளி/பரந்தன் இந்து ம.வி., கிளி/முருகானந்தா கல்லூரி, கிளி/ கண்டாவளை ம.வி., கிளி/தர்மபுரம் ம.வி., கிளி/பிரமந்தனாறு ம.வி. ஆகியவற்றிலும் பளைக் கோட்டத்தில் பளை மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

இத்தேர்வில் பங்குபற்றும் அனைத்து மாணவர்களையும் உரிய நேரத்திற்கு தேர்வு நிலையங்களுக்கு சமுகமளிக்குமாறு கிளி.தமிழ்ச் சங்க செயலாளர் வே.இறைபிள்ளை அறிவித்துள்ளார். (3-254)

## கற்றல் உபகரணம் வழங்கப்பட்டது

(சிவநகர்)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தால் தந்தையை இழந்த 123 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு கடந்த 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கரைச்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கரைச்சி பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார்.

தேசிய மொழிகள் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் உதவிச் செயலர் திருமதி எஸ்.கிருஸ்ணவதனா, அமைச்சின் மாவட்ட உத்தியோகத்தர் ந.உமாநாத், தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபையின் சிறுவர் மாவட்ட உத்தியோகத்தர் எஸ்.செந்தூரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

123 மாணவர் ஒவ்வொருவருக்கும் பாடசாலை பை, கற்றல் உபகரணங்கள், குடிநீர் போத்தல் உள்ளிட்ட பொதி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

அத்துடன் நிகழ்வில் மகிழ்வூட்டும் கலை நிகழ்வுகளும் நடத்தப்பட்டு இந் நிகழ்வு ஒரு முழுநாள் நிகழ்வாக நடை பெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பாடசாலை ஆசிரியர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (செ-3-254)

## ரி.எம்.சௌந்தரராஜனை நினைவுகூரும் 158 ஆவது முழுநிலா கருத்தாடல்

(குருமன்காடு)

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் மாதந்தோறும் நடத்தி வரும் முழுநிலா கருத்தாடல் நிகழ்வின் 158 ஆவது நிகழ்வாக தமிழ் திரை இசையுலகின் முடிசூடாமன்னன் ரி.எம். சௌந்தரராஜனின் நினைவு நிகழ்வு, கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் வவுனியா சுத்தானந்த இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் இன்று காலை பத்து மணிக்கு நடைபெறவுள்ளது.

வரவேற்புரையை சி.நாகராஜா வழங்க, சௌந்தரராஜன் பற்றிய நினைவு சிறப்புரையை நா.தியாகராஜா வழங்கவுள்ளார். இம் முழுநிலா கருத்தாடல் நிகழ்வின் விசேட நிகழ்வான காலத்தால் அழியாத சௌந்தரராஜனின் பாடல் இசை நிகழ்வை இசைச் செல்வர் கலாபூஷணம் ஈழத்து சௌந்தரராஜன் இ.சிவசோதி வழங்கவுள்ளார். (3-250)

## மயான சுத்திரிகரிப்பு சேவைக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு தேவை

(சிவநகர்)

உருத்திரபுரத்தில் அமைந்துள்ள மயானம் யுத்த காலத்திற்கு முன்பும் யுத்த காலத்திற்கு பின்பும் பற்றைக் காடாக இருந்து வந்துள்ளது.

இம் மயானத்தின் பற்றைகளை தற்போது கரைச்சி பிரதேச சபையினர் பைக்கோ இயந்திரத்தின் மூலமாக அழித்து துப்புரவு செய்துள்ளனர்.

எனினும், இங்கு அழிக்கப்பட்ட மரங்களின் வேர்களையும் மற்றும் அடிக்கட்டைகளையும் அகற்றுவதற்கு மனித வலு தேவைப்படுவதால் அதற்கு பொதுமக்களின் உதவி நாடப்படுகிறது.

இதன்படி இவற்றை அகற்றுவதற்கு இம் மயானத்தைப் பயன்படுத்துகின்ற கிராமத்து மக்களும் அப்பகுதியை சேர்ந்த அமைப்புக்களும் முன்வரவேண்டும் என கரைச்சி பிரதேச சபைத் தலைவர் நா.வைகுகராஜாவால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (3-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சிரம அதிசயங்கள்



## ஆன்மீகம் 40

### அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி

அங்கு வந்து போவோர் எவருக்கும் எந்தத் தீங்கும் நடந்தில்லை.

நானே ஒரு பாம்பைக்கூட நேரில் பார்த்தது இல்லை, ஆனால் அன்று அதிசயமாக ஆறடிக்கு மேல் நீண்ட தொருபாம்பு ஆச்சிரமத்திற்குள் புகுந்தது. கூட்டத்தைக் கண்டதும் படம் எடுத்து சீறியது. எல்லோருக்கும் எம பயம். பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பார்களே. இன்று யாருக்கு முடிவோ, என்றெண்ணி என் இதயமே நின்றுவிடும்போல் இருந்தது. சினிமாவுக்கு கொண்டு வரும் பாம்புகளைப் பார்த்து பழக்கப் பட்டிருந்தாலும், இது பாம்பாட்டியின் பல் பிடுங்கிய பாம்பல்ல நாகம், என் உடல் வியர்வையால் நனைந்தது.

எல்லோரும் அஞ்சுவதைக் கண்ட சித்தர் உரத்த குரலில் ஏ ஆயி எங்கே வந்தே? எல்லோரும் பயப்படுகிறாங்க பாரு. அப்படி என்ன உனக்கு அவசரம். அப்புறமா நாம பேசிப்பலாம். நீ புறப்படு! அப்புறம் உனக்கு ஆபத்தாயிடும். யாராவது உன்னை அடிச்சிட்டாங்கன்னா என்னால தாங்க முடியுமா? இனிமே இப்படி வராதே. நானே உன்னை தேடிவர்றேன். இப்போ போ! எனவும் அந்த நல்ல பாம்பு எல்லோரையும் ஒரு முறை தலைதிருப்பிப் பார்த்து விட்டு விறுவிறுவென வெளியேறியது.

அதை எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதான் போயிருச்சே! இன்னுமா உங்களுக்குப் பயம் போகலே? என்று சித்தர் சிரிக்க, எல்லோரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

ஒருமுறை சுருளி வீராசாமி அவர்கள் சித்தரின் பெருமையை அதிசயமாய்க் கூறினார். சித்தரின் ஆச்சிரமத்தின் பின்புறம் உள்ள மிகப்பெரிய புற்றின் மீது சாயங்கால வேளை சாய்ந்து படுத்திருக்க நாகம் அவர் உடலை சுற்றி தலைமேல் படம் எடுத்த காட்சியும் அவர் அதனுடன் கொஞ்சிப் பேசும் விதத்தையும் கண்டு அலறிப்போனதாக என்னிடம் கூறினார்.

ஆனால், இதற்கு மேல் அதிசயங்களை அடியேன் கண்டதால் விஷமுள்ள பாம்பின் விஷத்தன்மையுடன் பழகும் மனித நாகத்தை கண்டு தான் அஞ்ச வேண்டும்.

**மாண்டவர் மீண்ட அற்புதம்**

ஒருநாள் கோயிலில் பூஜை செய்யும் பிராமணர் ஒருவர் தன் மனைவியுடன் ஆச்சிரம் தேடி வந்தார். அவருக்கு மலஜலம் கழிப்பது மிகவும் கடினமாக இருந்தது. இதனால் அவர் உடல் ஊதிப்போயிருந்தது. நோய் முற்றிப்போயிருந்த நிலை ஆயினும் கருணை வடிவான சித்தர் பெருமானின் சிகிச்சையால் அவர் உடல்நலமானார். மலஜலம் ஒழங்காக வெளியேறியது. ஊதிய உடல் வற்றியது. அவர்கள் ஒரு மாதம் வரை ஆச்சிரமத்தில்தான் இருந்தார்கள்.



தினமும் ஆச்சிரமத்தில் நடக்கும் அன்னதானத்தினால் அவர்களுக்கு உணவுப்பிரச்சினைகளும் இல்லை. அந்த பிராமணரின் மனைவி ஆச்சிரமத்தைப் பெருக்கி சுத்தப்படுத்தி கோலமிடுவார். இந்நிலையில் ஒருநாள் சித்தர்அவர்கள் என்னை அழைத்து அய்யருக்கு ஒரு மருந்து செய்ய வேண்டும். அதைச்சாப்பிட்டால் தான் அவர் பூரண குணமடைய முடியும். ஆனால், அதற்குத் தேவையான முக்கிய சில பொருள்கள் திருச்சி மருந்துக் கடைக்குச்சென்று வாங்கி வர வேண்டும். மருந்துக்குத் தேவையான மற்றபொருட்கள் நம்மிடமே இருக்கின்றன.

தொடரும்

# போர் தவிர்ப்பு வலயம்



**அறிமுகம்**

**2009 இல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை பாதுகாப்புப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்றதாக குற்றம் சாட்டப்பட்ட போர்க்கால மீறல்களை உள்ளடக்கி பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி சேவையால் வெளியிடப்பட்ட காணொலிகளை கலும் மக்றே தயாரித்திருந்தார்.**

**கலும் மக்றே இலங்கையில் தொடரப்பட்ட இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இந்நாட்டுப் பாதுகாப்புப்படைகளால் இழைக்கப்பட்ட குற்றங்களை ஆவணப்படுத்தி தனது முதலாவது காணொலியை வெளியிட்டதைத் தொடர்ந்து இலங்கையில் அதிகம் பேசப்படும் ஒருவராக மாறியுள்ளார்.**

**இலங்கையின் கொலைக்களங்களில் இடம்பெற்ற மீறல் குற்றச்சாட்டுக்களை முதன்மைப்படுத்தி இலங்கையின் கொலைக்களங்கள்- தண்டிக்கப்படாத போர்க் குற்றங்கள் எனும் தலைப்பில் கலும் மக்றேயின தயாரிப்பில் சனல் 4 தொலைக்காட்சி சேவையால் காணொலி ஒன்று வெளியிடப்பட்டது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள போர்க்குற்றச்சாட்டுக்கள் ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தப்பட்ட போதிலும் இவற்றை இலங்கை அதிகாரிகள் மிகத் துணிச்சலுடன் மறுத்து வருகின்றனர். இந்நிலையில் தற்போது கலும் மக்றே தனது மூன்றாவது காணொலியான போர் தவிர்ப்பு வலயம்- *நோ பஃயர் சூன்* என்ற தலைப்பில் 93 நிமிட நேர காணொலி ஒன்றைத் தயாரித்துள்ளார்.**

**இலங்கை அரசாங்கமானது இலங்கையின் கொலைக்களங்கள் என்ற காணொலியில் உட்சேர்க்கப்பட்ட ஆவணங்களின் மூலப் பதிவுகளைத் தருமாறு தனது கட்டளையின் கீழ் செயற்படுபவர்களிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளாது, சனல் 4 தொலைக்காட்சி சேவையிடம் கேட்பதற்கான காரணம் என்ன என சிலோன் ருடே ஊடகம் மேற்கொண்ட நேர்காணலின் போது கலும் மக்றே கேள்வியெழுப்பியுள்ளார்.**

## 93 நிமிடநேர காணொலி

**கலும் மக்றேயுடன் சிலோன் ருடே ஊடகத்திற்காக சிலோசனா ராமய்யா மோகன் மேற்கொண்ட நேர்காணலின் விபரம் வருமாறு:-**

கேள்வி:- சனல் 4 தொலைக்காட்சி சேவையானது தொடர்ந்தும் இலங்கை பாதுகாப்பு படையினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பாக முதன்மைப்படுத்தி வருகிறது. ஆனால், இந்தக் குற்றச்சாட்டை இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் நிராகரித்து வருகிறது. இந்நிலையில் தங்களால் குற்றம் சுமத்தப்படும் அரசானது தொடர்ந்தும் இந்தக் குற்றங்களை மறுத்து வரும் நிலையில் நீங்கள் எவ்வாறு இதன் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த முடியும்?

பதில்:- இதற்கான சாட்சியங்களை நாங்கள் மட்டும் முன்வைக்கவில்லை. பல்வேறு அமைப்புகளும் போர்க்குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களை முன்வைத்துள்ளன. ஐ.நா. சுயாதீன வல்லுனர் குழுவால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் இறுதியில் போரில் ஈடுபட்ட இரு தரப்பினரும் குற்றங்களைப் புரிந்ததாகவும் ஆனால், போர் தவிர்ப்பு வலயங்களில் மக்கள் அதிகம் கொல்லப்படுவதற்கு இலங்கை அரசாங்கத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட எறிகணை வீச்சுக்களே காரணம் எனவும் உறுதிப்படுத்தப்பட்டது.

மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நாம் மிகக் கடுமையாக இந்தக் குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்தும் ஆதாரங்களைப் பரிசீலித்து விசாரணை மேற்கொண்டோம். எமது தொலைக்காட்சி சேவையால் ஒளிபரப்பப்பட்ட போர் ஆதாரப் பதிவுகள் தொடர்பாக நூறுக்கும் மேற்பட்ட இலங்கை அரசாங்க ஆதரவாளர்கள் பிரித்தானிய சுயாதீன ஒலிபரப்பு அதிகார அமைப்பான தொடர்பாடல்களுக்கான செயலகத்திடம் ஒஃவ்வீஸ் ஒஃவ் கொமினிக்கேஷன்- ஒஃவ்கொம் முறையீடு செய்தனர். இந்த முறைப்பாடுகள் ஒவ்வொன்றும் மிக ஆழமாக தனித்தனியாக ஆராயப்பட்ட பின்னர் இவை மறுக்கப்பட்டன. எம்மிடம் கிடைக்கப் பெற்ற போர்க் குற்ற ஆதாரங்களை நாம் மிக ஆழமாக துல்லியமாக ஆராய்ந்தோம். இவை தொடர்பாக நாம் பத்திரிகைத் துறைசார் ஆராய்ச்சி மற்றும் குறுக்குச் சோதனைகளையும் மேற்கொண்டோம்.

ஐக்கிய நாடுகள் சபையால் இப்போர்க் குற்றங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட பெற்றி தலைமையிலான வல்லுனர் குழுவானது முதலாவது குழுவை விட வேறுபட்டதாகும். இக்குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கையில் பல்வேறு போர்க்குற்றங்கள் தொடர்பான ஆதாரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அமெரிக்க இரகசிய செய்திக் குறிப்புகள் அனைத்துலக செஞ்சிலுவைச்சங்கம் போன்றவற்றால் வழங்கப்பட்ட ஆதாரங்களும் செய்மதி ஒளிப்படங்களில் எறிகணை வீச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டதை ஆதாரப்படுத்தும் சான்றுகளும் இலங்கை அரசாங்கம் மீதான குற்றச்சாட்டுக்களை மேலும்வலுப்படுத்துகின்றன.

இலங்கை அரசாங்கமானது, போரின் இறுதிக்கட்டத்தில் தன்னால் பூச்சிய பொதுமக்கள் இழப்புகள் என்ற கொள்கை கடைப்பிடிக்கப்பட்டதாக கூறுவதானது முற்றிலும் நம்பமுடியாததாகும்.

இலங்கை அரசாங்கமானது, போரின் போது 7000 வரையானவர்கள் மரணித்ததாக தற்போது அறிவிக்கும் இந்நிலையில் போரின் இறுதி நாளின் போது போர்த் தவிர்ப்பு வலயத்தில் உள்ள பொதுமக்கள் அனைவரும் தற்போது அரசாங்கப் படைகளால் மீட்டெடுக்கப்பட்டுள்ளனர் என இலங்கை அரசாங்கத்தால் அறிவித்ததை நம்ப முடியாதுள்ளது.

இதேபோன்று போரின்போது தாம் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை எனவும் அரசாங்கம் அறிவித்தது. ஆனால், இலங்கை அரச தொலைக்காட்சி செய்திகளில் கனரக ஆயுதங்கள் காண்பிக்கப்பட்ட அதே வேளையில் போர் தீவிரம் பெற்றிருந்தபோது தாம் அதனைப் பயன்படுத்தவில்லை என இலங்கை அரசாங்கம் கூறும் நியாயத்தை ஏற்க முடியாது.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுள் என்ன மாற்றமோ?

# யாழ்ப்பாணத் திரைப்படம் - விமர்சனம்

தென்னிந்திய சினிமாவிற்கே சவால்விடும் வகையில் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு புது தலைமுறை கிளம்பியிருக்கின்றது. தடைகளைக் கடந்து புதுச்சரித்திரம் படைத்து, அவனியில் புகழோடு ஜொலிக்க அப்புதிய தலைமுறையினருக்கு முதலில் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டு விமர்சனத்துக்குள் நுழைவோம்.

புரையோடிக்காணப்படும் இலங்கைத் தமிழ் சினிமாவையும், அடையாளமே இல்லாமல் அழிந்து போயிருக்கும் யாழ்ப்பாண சினிமாவையும் மீட்டெடுக்கும் புதுவிதையாக விழுந்திருக்கின்றது. கவி மாறனின் ''என்னுள் என்ன மாற்றமோ?'' திடைப்படம். இது பெருவிருட்சமாக வளர்ந்து, சினிமா மீது தீராக்காதல் கொண்டு வாய்ப்புக்கள் இன்றி தங்கள் பணத்தை எல்லாம் செலவழித்து நொந்து கொண்டிருக்கும் ஈழத்துக் கலைஞர்களுக்கு புது உற்சாகத்தைத் தரும் என நம்புகிறோம்.

இலங்கையின் தமிழ்த் திரைப் படத்துறையின் வளர்ச்சி, அவ்வப்போது வெளியிடப்படும் குறும் படங்களோடு மீண்டும் மீண்டும் குறுகி விடுகின்றது. எம்மவர்கள் பிரகாசிக்க வேண்டுமானால், சகோதர மொழி அல்லது தென்னிந்தியக் கலைஞர்ககள், தொழில்நுட்ப வியலாளர்களின் ஆதரவுடனேயே அச்செயற்பாடு இடம் பெறவேண்டும் என்பது எழுதப்படாத விதியாக உள்ளது. அதேபோல், தென்னிந் திய திரைப்பிரபலங்களைப் பின் தள்ளி எம்மவர்களே எம்மவர்களின் ஹீரோக்களாக ஜொலிக்கலாமா? என்ற பெரியதொரு கேள்விக் குறியும் இருக்கின்றது.

இவற்றுக்கெல்லாம், "முடியும்" என்ற ஆணித்தரமான பதிலைத் தந்திருக்கின்றார்கள் என்னுள் என்ன மாற்றமோ? படக்குழு வினால் நல்லூரான் பிக்ஸர்ஸ் எனும் மங்களகரமான பெயருடன் தொடங்கப்பட்டிருக்கும் கவிமாறனின் சினிமா தயாரிப்ப நிறுவனத்தின் முதல் படைப்பான இப்படம் அவரின் கதை, திரைக்கதை, இயக்கம் மற்றும் நடிப்பிலேயே வெளிவந் திருக்கின்றது. இளம் அணிசேர் கலைஞர்களுடன், ஒரு சில மூத்த நடிகர்களையும் உள்வாங்கி படம் திரைக்கு




வந்துள்ளது.

ஹீரோ -கவிமாறன் , ஹீரோயின் - தர்ஷிகா, வில்லன்- சயந்தன், ஒளிப்பதிவு -மேனன், படத்தொகுப்பு-தேவா, இசை-தேவா மற்றும் சிவசுஜாந்தன், உதவி இயக்குநர்கள் திலீப், தர்சகன் மற்றும் பலர் படக்குழுவில் உள்ளனர்.

சரி படத்தோட கதை என்ன? காலேஜில் படிக்கும் ஹீரோ, ஹீரோயின் இடையே காதல் மலர்கிறது. ஹீரோவைப் பற்றி அவனுடன் கூடப்படிக்கும் எதிர் நண்பர்கள் ஹீரோயினின் தந்தையிடம் ஏகத்துக்கும் போட்டுக்கொடுத்து விடுகிறார் கள். தன் தந்தைக்காக ஹீரோவின் காதலை ஏற்காத ஹீரோயின் ஒரு கட்டத்தில் தன் காதலையும் வெளிப்படுத்தி விடுகிறார். தன் மகளின் காதலைக் கண்காணிக்கும் தந்தை விடயம் முற்றியதும் அவளை வீட்டிலே அடைத்து முறை மாமனுக்கு கட்டிக்கொடுக்க முயற்சி செய்கிறார். முறைமாமனுக்கும் ஹீரோயினைத் திருமணம் முடிக்க வேண்டும் என்ற ஆசை நிறையவே இருந்தது.

இறுதியில் ஹீரோ- ஹீரோயின் இணைந்தார்களா? முறைமாமன் கதி என்னவாயிற்று என்பதை சுவாரசியமான திரைக்கதையுடன் இரண்டு மணி நேரத்தில் திரைப்படமாக்கியிருக்கிறார்கள். இலங்கையின் பல பகுதிகளிலும் படத்தை திரையிட ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. முதற் கட்டமாக யாழ். ராஜா திரையரங்கில் படம் திரையிடப்பட்டது. அரங்குக்கு வந்த ரசிகர்களைப் பார்த்த போது வியப்பாகவும் பெருமிதமாகவும் இருந்தது. அருகில் திரையிடப்பட்டுக்கொண்டிருக்கும் "தீயா வேலை செய்யணும் குமாரு'' திரைப்படத்திற்கு வந்திருந்த கூட்டத்தை விட இப்படத்திற்கு வந்தவர்கள் அதிகம். மொத்தம் ஆறு காட்சிகளுக்கு மட்டுமே ஏற்பாடு செய்யப்பட்டிருந் தது. ஆறு காட்சிகளும் நிறைவாக இருந்ததாக தியேட்டர் உரிமையாளர் மற்றும் ஊழியர்கள் தெரிவித்தனர்.

றொம்பவும் சாதாரணமான கதை தான்! படமாக்கப்பட்டிருக்கும் விதம் பாராட்டும் படியாக இருக்கின்றது. இலங்கையில் அதுவும் யாழ்ப்பாணத்தில் எம் கலைஞர்கள், தொழில் நுட்பவியலாளர்களை பயன்படுத்தி இந்தத் திரைப்படத்தை எடுப்பது ஒன்றும் அவ்வளவு சாதாரணமான தல்ல. ஒரு குறும்படத்தை எடுத்து முடிப்பதற்கே எம்மவர்கள் படும் திண்டாட்டம் சொல்லிமாளாது. அப்படியிருக்கையில், முழு நீளத் திரைப் படத்தை எடுத்து அதை திரையரங்கில் வெளியிடும் அளவிற்கு கொண்டு வந்த கவிமாறனின் முயற்சி மெச்சத்தக்கது. அவருக்கு தோளோடு தோள் நின்று உழைத்த அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.



படத்தின் எழுத் தோட்டத்தில் யாழ்ப்பாணத்தின் முக்கிய இடங்களை காட்டிய விதம் அருமை. முதல் பாதி திரைக்கதை கொஞ்சம் தொய்வாக நகர்ந்தாலும், இரண்டாம் பாதி அமர்க் களமாக இருக்கின்றது.

மூன்று பாடல்கள், அனைத்தும் படமாக் கப்பட்டவிதத்திலாகட்டும், இசை யிலாகட்டும் சுப்பர். பின்னணி இசை கூட தேவைக்கேற்ற இடத்தில் சரி யாகக் கையாளப்பட்டிருக்கின் றது. படத்தொகுப்பில் ஒரு சில "ரிப்பீட்" காட்சிகள் இருந்தாலும் அட்டகாசம். ஒளிப்பதிவின் பல இடங்களில் ''ட்ரவலிங் கமெரா'' பயன்படுத் தியிருப்பது கொஞ்சம் ஆட்டம் போடுவதாக இருந்தாலும் பார்ப் போரை குழப்பவில்லை. யாழ்ப்பா ணத்தில் உள்ளவர்களே அறிந்திராத வித்தியாசமான இடங்களில் வெளிப்புறப்படப்பிடிப்புக்கள் இடம் பெற்றிருக்கின்றன.

படத்தில் மைனஸ் என்று எதுவுமே இல்லையா? என்று நீங்கள் கேட்கலாம். படக்குழுவின் முயற்சிக்கும் நாங்கள் எதிர்பார்த்துப் போனதற்கு மேல் தந்த பிரமாதத்திற்கும் முன்னால் மைனஸ்கள் எல்லாம் ப்ளஸ்களாகிவிட்டன.

கோடிகளைக் கொட்டி படங்களை எடுத்தும், ஒரு வாரம் கூட தாக்கு பிடிக்க முடியாமல் தியேட்டரைவிட்டு ஓடும் தென்னிந்திய சுப்பர் ஹீரோக்களின் படங்களுடன் ஒப்பிடுகையில், சில இலட்சாங் களை கொண்டு எம்மவர்கள் தந்த படைப்பு என்றென்றும் பாராட்டக் கூடியதே! இனி வருங் காலங்களில் இலங்கையிலும், வடகிழக்கிலும் தமிழ்த் திரைப் படங்களைத் தயாரிப்பதற்கு தன வந்தர்கள் முன்வர வேண்டும். அவர்களுக்கு இலாப மீட்டும் ஒரு இடமாக யாழ்ப்பாண திரைத்துறை இருக்கின்றது என்பதை உணர்த்துவதற்கு எம்மவர்கள் அனைவரும் இவ்வாறான முயற்சிகளுக்கு பூரண ஆதரவைக் கொடுக்க வேண்டும்.

---

## முன்னாள் எம்.பிக்கள் 19 பேருக்கு அழைப்பாணை

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 19 பேருக்கு நீதிமன்றத்தினால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

மாதிவலயில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோக பூர்வ வாசஸ்தலத்திற்கான வாட கைக் கட்டணத்தை செலுத்தவில்லை என கூறப்படும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 19 பேருக்கு நுகேகொட மாவட்ட நீதிமன்றத்தினால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் 19 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும் படி அழைப்பாணை அனுப்பி வைக்குமாறு நுகேகொட நீதவான் நாமல் பண்டார பலல நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

2001 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் திகதி முதல் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி 7 ஆம் திகதிவரை மாதிவல உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் தங்கியிருந்து வாடகை செலுத்தாத நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே இவ்வாறு அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ-2)

## கல்விக்கான உதவிக் கொடுப்பனவு

ஏசியா கப்பிற்றல் நிறுவனத்தின் அனுசரணையுடன் 33 சிறுவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வரும் கல்விக்கான (ஜூன் மாதத்திற்கானது) உதவிக் கொடுப்பனவு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பிரதேச செயலக சமூகப் பராமரிப்பு நிலையத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக கரவெட்டி பிரதேச செயலாளர் எஸ். சிவசிறி அறிவித்துள்ளார்.

எனவே இக் கொடுப்பனவை பெற்றுக் கொள்வதற்கு பயனாளிகளை உரிய ஆவணங்களுடன் குறித்த நேரத்திற்கு சமூகமளிக்குமாறு அவர் கேட்டுள் ளார். (அ-2-60)

## நீராடிய பெண் முதலைக்கு இரை

(கொழும்பு)

நில்வள கங்கையில் நீராடச் சென்ற பெண்ணை முதலை இழுத்துச் சென்றுள்ளது.

இச்சம்பவம் நேற்றுமுன் தினம் மாலை இடம் பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் 43 வயதுடைய கமலாவதிஎன்றபெண்ணே இவ்வாறு முதலைக்கு இரையாகியுள்ளார்.

கம்புறுபிட்டி பொலிஸ், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், மாலிம்பட பிரதேச மற்றும் பிரதேச வாசிகள் இணைந்து சடலத்தை தேடும் பணியில் ஈடுப ட்டுள்ளனர்.

கம்புறுபிட்டி பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (அ-2)

## புலிகளின் முக்கிய உறுப்பினர் கைது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் முக்கிய உறுப்பினர் ஒருவரை கைது செய்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்து கோரி படகு மூலம் சென்ற 88 பேரை அண்மையில் கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

இந்த 88 பேரில் குறித்த புலிகளின் சிரேஷ்ட உறுப்பினரும் உள்ளடங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர் புலனாய்வுப் பிரிவினரிடம் விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளார் என சிங்கள ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இலங்கைப் பாதாள உலகக் குழுத்தலைவர் ஒருவர் இத்தாலியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரதீவ் தேவ தர்மவிக்ரம என்னும் 42 வயதான கொஸ்கொட நதுன் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இத்தாலியின் மிலான் வெனித்தியா பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்துள்ளனர்.

பலபிட்டிய பிரதேசத்தில் இடம் பெற்ற முக்கொலைச் சம்பவத்தின் பிரதான சந்தேக நபராக குறித்த நபர் கருதப்படுகின்றார். சந்தேக நபருக்கு எதிராக இன்டர் போல் பிடிவிறாந்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட மூன்று பேரை குறித்த நபர் கொலை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டன் வாழ் சிங்களவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துக

## ஜாதிகஹெல உறுமய கோரிக்கை

லண்டனிலுள்ள சிங்களவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கை அரசாங்கம் பிரித்தானிய அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

பிரித்தானியாவில் விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்ட அமைப்பாக இருந்த போதிலும் பிரித்தானிய அரசாங்கமும் பாதுகாப்பு பிரிவினரும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களுக்கு மறைமுகமாக வழங்கி வரும் ஒத்துழைப்பு காரணமாகவே பிரித்தானியாவின் கார்டிப் மைதானத்தில் நடைபெற்ற இலங்கை இந்திய அணிகளுக்கு இடையிலான அரையிறுதிப் போட்டியின் முடிவில் புலிகளின் ஆதரவாளர்கள் சிங்களவர்களைத் தாக்குவதில் அச்சமின்றி வெளிப்படையாக செயற்பட்டுள்ளதாக அந்தக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளாது.

குறித்த சம்பவத்தைக் கண்டித்து ஜாதிக ஹெல உறுமயவின் ஊடக செயலாளர் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க விடுத்துள்ள அறிக்கையிலேயே இதனைக் கூறியுள்ளார்.

கிரிக்கெட் போட்டியின் இறுதியில் சுமார் 200 விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் மிகவும் வன்முறையாக செயற்பட்டு சிங்கள கிரிக்கெட் ரசிகர்கள் மீது இரும்பு கம்பிகள், பொல்லுகள் கொண்டு தாக்கியுள்ளனர்.

இதற்கு முன்னர் இலங்கை- அவுஸ்திரேலிய இடையிலான போட்டியின் போது புலிகளின் ஆதரவாளர்கள் சிங்களவர்களை ஆத்திரமூட்டும் வகையில் நடந்து கொண்டனர்.

மேலும் சிங்கக் கொடியை மிதித்து கொண்டு புலிக்கொடியை ஏந்தியும் இலங்கைக்கு எதிராக பதாகைகளை எடுத்து கொண்டும் மைதானத்தில் நடைபெறும் போட்டிக்கு தடையேற்படுத்தினர்.

அரையிறுதிப் போட்டியில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் மிகவும் திட்டமிட்ட வகையில் இந்த செயற்பாட்டில் ஈடுபட தயாராகி வருவதாக இலங்கை தூதரக அலுவலகம் ஊடாக பிரித்தானிய பாதுகாப்பு தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்காதது குறித்து பிரித்தானிய அரசு மற்றும் பாதுகாப்பு தரப்பினருக்கு எமது கடும் எதிர்ப்பையும் அதிருப்தியையும் தெரிவித்து கொள்கிறோம்.

இந்நிலைமை மிகவும் பாரதூரமானது. எனவே லண்டனில் இருக்கும் சிங்களவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கை அரசு லண்டன் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பொதுநலவாய மாநாட்டில் பிரிட்டன் பிரதமர் பங்கேற்பார்

(கொழும்பு)

ஜனநாயகம், சட்டம், ஒழுங்கு, மனித உரிமை, நீதி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இலங்கை கூடுதல் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரான்கீன் குறிப்பிட்டுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளின் போது கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதனை இலங்கை அரசாங்கம் நிரூபிக்க வேண் டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் பிரித்தானிய பிரதமர் டேவின் கமரூன் பங்கேற்பார் என தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் மீது பிரித்தானியா கொண்டுள்ள மரியாதையின் காரணமாக அமர்வுகளில் பங்கேற்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமர்வுகளை ஏற்பாடு செய்யும் நாடு என்ற ரீதியில் இலங்கை பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள் கோட்பாடுகளை மதித்து செயற்பட வேண்டுமென ஏற்கனவே வெளிவிவகார அமைச்சர் அலிஸ்டர் பர்ட் அறிவித்துள்ளார் என ஜோன் ரான்கீன் தெரிவித்துள்ளார். (அ-2)




- ❖ 1532-இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றியும் பிரான்சின் முதலாம் பிரான்சுவாவும் புனித ரோமப் பேரரசின் ஐந்தாம் சாள்சுக்கு எதிராக இரகசிய ஒப்பந்தத்தை ஏற்படுத்தினர்.
- ❖ 1565-மால்ட்டா மீதான முற்றுகையின் போது ஒட்டோமான் பேரரசின் கடற்படைத் தளபதி கொல்லப்பட்டான்.
- ❖ 1658-இலங்கையில் போர்த்துக்கேயர் இறுதியாக நிலைகொண்டிருந்த யாழ்ப்பாணக் கோட்டையை பிரித்தானியர் கைப்பற்றினர்.
- ❖ 1757-இந்தியாவில் பலாசி என்ற இடத்தில் வங்காளத்தின் கடைசி நவாப் சிராஜ் உல் டாவுலா தலைமையிலான இந்திய இராணுவத்தினரை பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியினர் தோற்கடித்தனர்.
- ❖ 1758-ஏழாண்டுகள் போர்: பிரித்தானயப் படையினர் ஜேர்மனியில் கிரெஃபீல்ட் என்ற இடத்தில் பிரெஞ்சுப் படைகளை வென்றனர்.
- ❖ 1760-ஏழாண்டுகள் போர்: ஆஸ்திரியர் புரூசியாவை வென்றனர்.
- ❖ 1794-உக்ரேனின் கீவ் நகரில் யூதக் குடியேற்றத்துக்கு ரஷ்யாவின் பேரரசி இரண்டாம் கத்தரீன் அனுமதி அளித்தார்.
- ❖ 1868-கிறிஸ்தோபர் ஷோல்ஸ் தட்டச்சி யந்திரத்துக்கான காப்புரிமம் பெற்றார்.
- ❖ 1894-பன்னாட்டு ஒலிம்பிக் அமைப்பு பாரிசில் அமைக்கப்பட்டது.
- ❖ 1919-எஸ்தோனியாவின் விடுதலைப் போரில் வடக்கு லாத்வியாவில் செசிஸ் என்ற இடத்தில் ஜேர்மனியப் படைகள் தோற்ற இந்நாள் எஸ்தோனிய வெற்றி நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.
- ❖ 1942-இரண்டாம் உலகப் போர்: முதன் முதலாக அவுஷ்விட்ஸ் வதை முகாமில் நச்சு வாயு அறையில் சேர்ப்பதற்காக முதல் தொகுதி யூதர்கள் பாரிசில் இருந்து தொடரூந்தில் அனுப்பப்பட்டனர்.
- ❖ 1942-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் போர் விமானம் ஒன்று தவறுதலாக வேல்சில் தரையிறங்கியபோது கைப்பற்றப்பட்டது.
- ❖ 1945-ஜப்பானிய இராணுவத்துக்கும் அமெரிக்கப் படைகளுக்கும் இடையில் இடம்பெற்ற ஒகினவா சண்டை அமெரிக்கா வெற்றி பெற்றவுடன் முடிவடைந்தது.
- ❖ 1956-கமால் நாசர், எகிப்தின் ஜனாதிபதியானார்.
- ❖ 1960-பத்திரிசு லுமும்பா கொங்கோ குடியரசின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பிரதமர் ஆனார்.
- ❖ 1968-புவெனஸ் அயரசில் உதைபந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்ற நெரிசலில் சிக்கி 74 பேர் உயிரிழந்தனர்.
- ❖ 1980-இந்திய அரசியல்வாதி சஞ்சய் காந்தி விமான விபத்தில் உயிரிழந்தார்.
- ❖ 1990-மல்தாவியா சோவியத் ஒன்றியத்தில் இருந்து விடுதலையை அறிவித்தது.

*பிறப்புகள்*

- ❖ 1924-ரணசிங்க பிரேமதாச, இலங்கை ஜனாதிபதி (இ. 1993)
- ❖ 1972-ஜினடைன் ஜிடான், பிரெஞ்சு காற்பந்தாட்டக்காரர்

இறப்பு

- ❖ 1980-வி. வி. கிரி, இந்தியாவின் 4ஆவது குடியரசுத் தலைவர் (பி. 1894)

# ராஜபக்ஷ ஆட்சியில் குற்றமிழைக்கும் நபருக்கு தண்டனை கிடைப்பதில்லை

## மங்கள எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அவரது குடும்பத்தினர் நாட்டின் சாதாரண சட்டத்திற்கு அமைய செயற்படுவதில்லை எனவும் ஜனாதிபதியை முன்னுதாரணமாக கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல்வாதிகளும் நடந்து கொள்வதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அமைச்சர்கள், அவர்களின் பிள்ளைகள், பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் ஆகியோர் கொலைகளை செய்கின்றனர். ஆசிரியர்களை துன்புறுத்துகின்றனர்.

பாலியல் வல்லுறவு சம்பவங்களில் ஈடுபடுகின்றனர். எனினும் இவற்றுடன் தொடர்புடைய அவர்களுக்கு எந்த தண்டனையும் வழங்கப்படுவதில்லை எனவும் மங்கள கூறியுள்ளார்.

வடமேல் மாகாண சபை உறுப்பினர் ஆசிரியை ஒருவரை முழங்காலில் வைத்தமை, அக்குரஸ்ஸ, காவத்தை பிரதேசங்களில் இடம்பெற்ற பாலியல் வல்லுறவுகள் மற்றும் கொலைகள் இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

அதேபோல், அமைச்சர் மேர்வின் சில்வா தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளதாக அண்மையில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கூறிய போதிலும் கடந்த வருடம் அவருக்கு மேலும் ஒரு சிறந்த பதவி வழங்கப்பட்டது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விதமான ராஜபக்ஷ நிர்வாகத்தின் கீழ் கட்சியில் தவறு செய்பவர்களுக்கு எந்த தண்டனையும் வழங்கப்படுவதில்லை. வழங்கப்பட்ட ஒரே தண்டனை மாவனெல்லை பிரதேச சபைத் தலைவருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையாகும். அவர் ராஜபக்ஷ ஆட்சியை விமர்சித்ததன் காரணமாகவே இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

ராஜபக்ஷ குடும்பத்தின் சட்டமீறல்கள் குறித்து பேசுவதற்கு தனியான கருத்தரங்கு நடத்த வேண்டும் எனவும் மங்கள சமரவீர கூறியுள்ளார். (அ-2)

# வர்த்தக பிரிவு மாணவர்களுக்கு கருத்தரங்கு நாளை

நடைபெறவுள்ள கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் தோற்றவுள்ள மாணவர்களுக்காக கல்வி அமைச்சின் ஆலோசனையின் பேரில் நடத்தப்படும் க.பொ.த.(உ/த) பரீட்சைக்கான உதவிக் கருத்தரங்கு நாளை முதல் தொடர்ந்து 3 நாட்கள் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் யாழ். மத்திய கல்லூரியின் மாணவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கல்லூரியின் அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் அறிவித்துள்ளார்.

மேற்படி வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான கருத்தரங்கில் நாளை திங்கட்கிழமை பொருளியல் கருத்தரங்கும் மறு நாள் செவ்வாய்க் கிழமை கணக்கீடு கருத்தரங்கும் 26 ஆம் திகதி புதன் கிழமை வணிகக் கல்விக்கான கருத்தரங்கும் தினமும் முற்பகல் 8.30 மணிமுதல் பிற்பகல் 2.30 மணி வரை யாழ். மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இக்கருத்தரங்கில் யாழ். மத்திய கல்லூரி, யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, திருக்குடும்ப கன்னியர் மடம், சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை ஆகிய 4 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கேள்விக்குள்ளாகிறது... இந்தியாவின் தென்னாசியப் பிராந்தியத்தின் வல்லரசு நிலை!

13-வது திருத்தச்சட்டத்தை நீக்குவது அல்லது அதன் பெறுமதியை வலுவிழக்கச் செய்வது தொடர்பான முஸ்தீபுகள் தீவிரமடைந்திருந்த வேளையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இந்தியா அழைத்திருந்தது. யூலை மாதத்தின் ஆரம்பப் பகுதியில், இந்தியா செல்வதற்கான திட்டமொன்று, கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் ஏலவே இருந்தது. எனினும் தற்போது புதுடெல்லி கூட்டமைப்பை அவசரமாக அழைத்துள்ளதாகவே செய்திகள் வெளியாகியுள்ளன. சமீபத்தில் 13-வது திருத்தச் சட்டத்தை நீக்குவது தொடர்பான விடயங்கள் தொடர்பில், இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்சித், இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸிடம் எதிர்ப்பு தெரிவித்திருந்ததாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால், அதன் பின்னரும் கூட, கொழும்பு நிலைமைகளில் பெரியளவில் முன்னேற்றங்கள் காணப்பட்டிருக்கவில்லை. இத்தகையதொரு பின்னணியிலேயே கூட்டமைப்பின் இந்திய விஜயம் இடம்பெற்றிருந்தது.

சில தினங்களுக்கு முன்னர், இந்தியா தொடர்பில் கருத்துத் தெரிவித்திருந்த சுரேஸ் பிரேமச்சந்திரன், இந்தியா, விடுதலைப் புலிகளின் காலத்தில் கடைப்பிடித்த கொள்கையை தற்போதும் பின்பற்றி வருவதாகக் குறிப்பிட்டிருந்தார். இந்தியா, ஈழத் தமிழர்களின் உரிமைகளை கருத்தில் கொண்டு செயலாற்றவில்லை என்னும் அபிப்பிராயம் தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி சிந்திக்கும் பலரிடம் உண்டு.

இந்த இடத்தில் சில விடயங்களை அவதானிக்க வேண்டியிருக்கிறது இந்தியாவைப் பொறுத்தவரையில், முதல் அர்த்தத்தில் அதற்கு இந்தியாவின் நலனே முக்கியமானது.

இந்தியாவின் நலன் என்னும் புள்ளியுடன் இணைந்த ஒன்றாகவே ஏனைய விடயங்கள் நோக்கப்படும். எந்தவொரு நாட்டினதும் வெளிவிவகாரக் கொள்கை என்பது, குறித்த நாட்டின் நலனையே அச்சாணியாகக் கொண்டு சுழலும். அந்த சுழற்சியில் தடங்கல் ஏற்படும்போதே ஏனைய தரப்பினரது நலன்களை, குறித்த பலம் பொருந்திய சக்திகள் ஒரு தடைநீக்கக் கருவியாக்கிக் கொள்ள முயற்சிக்கும். இந்த சூத்திரத்தை, 90களுக்கு முற்பட்ட இந்தியாவின் சுழற்சியுடன் ஒப்பிட்டு நோக்குவோமாயின், நாம் சில விடயங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். அன்று இந்தியா தனது நலன் என்னும் அச்சாணியில் சுழன்றுகொண்டிருந்தபோது, அந்த சுழற்சியில் ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான இலங்கை ஒரு தடைக்கல்லாக முட்டியது. அந்த தடைக்கல்லை அகற்றவேண்டிய தேவை இந்தியாவிற்கு ஏற்பட்டது. இந்தப் பின்புலத்தில் தான் ஈழத்தமிழர் பிரச்சினை ஒரு பிராந்தியப் பிரச்சினையாக மாறியது. ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசாங்கத்தின், கழுத்தை நெரிக்கும் வகையிலேயே, இந்தியா, ஈழத் தமிழர்களின் உரிமைகளை முன்னிறுத்தி இயங்கிய ஆயுத அமைப்புகளின் இராணுவ ஆற்றலை விஸ்தரிக்க உதவியது.

உண்மையில் அன்றைய இந்தியாவின் நடவடிக்கைகள் இந்தியாவின் பிராந்திய முக்கியத்துவத்தை இலங்கைக்கு உணர்த்தும் வகையிலேயே அமைந்திருந்தன. ஏனெனில் ஜே.ஆர். தலைமையிலான கொழும்பின் ஆளும் பிரிவினர் இந்தியாவின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட்டிருந்தனர். அவ்வாறு குறைத்து மதிப்பிடுவதற்குக் காரணமாக இருந்தது, அன்றைய இலங்கையின் அமெரிக்க சார்பு நிலையாகும். அமெரிக்கா தங்களுடன் இருப்பதால், இந்தியா தங்களுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கத் துணியாதென்றே ஜே.ஆர். அரசாங்கம் கருதியிருந்தது. ஆனால், அந்த நம்பிக்கையை இந்தியாவின் பின்னைய நடவடிக்கைகள் பொய்ப்பித்தன.

இறுதியில் வேறு வழியின்றியே, ஜே.ஆர். அரசாங்கம் இந்திய- இலங்கை ஒப்பந்தத்திற்கு இணங்கியது என்பது வரலாறு.


ஆனால், பின்னர் விடுதலைப் புலிகள்-பிரேமதாஸ அரசாங்க கூட்டின் விளைவாக, இந்தியா, இலங்கை விடயத்தில் ஒரு கொள்கைசார் தோல்வியை எதிர்கொள்ள நேர்ந்தது. இந்த இடத்தில் ஒரு விடயத்தை நாம் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். இந்தியாவின் பிராந்திய முக்கியத்துவத்தை கேள்விக்குள்ளாக்க முற்பட்ட ஜே.ஆர். அரசாங்கத்தை தன் வழிக்குக் கொண்டு வருவதற்கான ஓர் உபாயமாகவே ஈழத் தமிழர் நலன் இந்தியாவின் பிராந்திய நலனுடன் இணைக்கப்பட்டது. ஆனால், விடுதலைப்புலிகள்- பிரேமதாஸ கூட்டால், இந்தியாவின் பிராந்திய நலனுடன் இணைக்கப்பட்ட ஈழத்தமிழர் நலனை விடுதலைப்புலிகள் அதிலிருந்து வெளியில் எடுத்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழர் அரசியல், பிராந்திய ஒத்துழைப்பை முழுமையாக இழந்துபோகிறது. இதன் மூலம் ஈழத் தமிழர் நலன் என்பது இந்திய நலனுக்கு உட்பட்ட ஒன்று என்னும் நிலைமை மாறுகிறது. அதுவரைக்கும் ஈழத் தமிழர் சார்ந்து குரல் கொடுப்பதற்கான தார்மீக பொறுப்புள்ள ஒரே நாடு, தானே, என்னும் இந்திய அணுகுமுறை கேள்விக்குள்ளாகியது. இது, குறிப்பாக காங்கிரஸ்- இந்தியாவிற்கு, விரல்களைச் சுட்டுக்கொண்ட அனுபவத்தையே கொடுத்தது. விடுதலைப் புலிகளின் அணுகுமுறையால் ஒரு தலைகீழ் நிலைமை ஏற்பட்டது. அதுவரைக்கும் ஈழத்தமிழர் நலனை முன்னிறுத்தி கொழும்பை இறுக்கிப் பிடிக்க முற்பட்ட இந்தியா, விடுதலைப்புலிகளை இறுக்குவதற்கு அல்லது பலவீனப்படுத்துவதற்கு, கொழும்பைத் தழுவிக்கொள்ளும் நிலைக்கு மாறியது. 90களுக்குப் பின்னர், இத்தகைய, கொழும்பைத் தழுவிக்கொள்ளும் ஒரு கொள்கையையே இந்தியா கடைப்பிடித்து வருகின்றது.

இதற்கு முக்கிய காரணமாக இருந்தது, தமிழர் தரப்பின் அரசியலானது இந்தியாவால் நெருங்க முடியாதவொரு அமைப்பின் கட்டுப்பாட்டில் இருந்தமையாகும். ஆனால், விடுதலைப்புலிகளின் தோல்வியைத் தொடர்ந்து, இந்தியா தொடர்ந்தும் கொழும்பைத் தழுவிக்கொள்ளும் கொள்கையைக் கடைப்பிடிக்கக்கூடிய ஏதுநிலை காணப்படுகிறதா என்னும் கேள்வி மேலெழுந்திருக்கிறது. இந்த இடத்தில்தான் மீண்டும் ஈழத்தமிழர் பிரச்சினை, ஒரு தடைநீக்கக் கருவியாக மாறுமா என்னும் கேள்வியும் எழுகிறது. இத்தகயதொரு சூழலில் தான், 13-வது திருத்தச் சட்டத்தை முற்றாக ஒழிக்கும் அல்லது அதனை ஒரு எலும்புக்கூடாக்கும் முயற்சியில், தெற்கின் சிங்கள கடும்போக்குவாதிகள் களமிறங்கியிருக்கின்றனர். அடிப்படையில் 13-வது திருத்தச்சட்டம் எதிர்க்கப்படுவதே, அது இந்தியாவின் பலப்பிரயோகத்தில் திணிக்கப்பட்ட ஒரு விடயம் என்பதால்தான். எனவே, 13-வது திருத்தச் சட்டத்தின் மீதான எதிர்ப்பு என்பதே, இந்தியாவின் மீதான தெற்கின் எதிர்ப்புத்தான். இத்தகைய நிலைமைகளை இந்தியா, எவ்வாறு நோக்குகின்றது? என்பது கேள்வியாகியுள்ளது. அடுத்த ஆண்டில் தேர்தல் ஒன்றை எதிர் கொண்டிருக்கின்ற சூழலில், ஈழத் தமிழர் பிரச்சினை இந்திய அரசியலில் ஒரு முக்கிய பேசுபொருளாக மாறக்கூடும். இதன் விளைவாகவே, பா.ஜ.க, ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து அதிக கரிசனை எடுத்துக் கொள்கிறது.

இந்தியாவின் மென்போக்கு- கடும் போக்கு என்பதெல்லாம் அதன் நலன் சார் கொள்கை முன்னெடுப்பில் தான் தங்கியிருக்கிறது. இந்தியாவின் சமீபகால அணுகுமுறை சற்று இறங்கிச் செல்வது போன்று தோற்றமளிப்பதால், இலங்கை தொடர்பான விடயத்தில் இந்தியா தனது பிராந்திய முக்கியத்துவத்தை இழந்து வருவதாக கருத முடியுமா? அன்று, ஜே.ஆர். தலைமையில் அணிதிரண்டிருந்த கொழும்பின் ஆளும் பிரிவினர், அமெரிக்க சார்பு நிலையைக் காட்டியது போன்று, இன்றைய கொழும்பின் ஆளும் பிரிவினர் சீன சார்பை வெளிப்படுத்தி வருகின்றனர். 1987 இல் இந்திய இலங்கை ஒப்பந்தம் நிகழ்ந்தபோது, சீனா, அமெரிக்க சார்புநிலையில் இருந்தது; இந்தியா, சோவியத் சார்புநிலையில் இருந்தது. அன்றைய சூழலில், இலங்கையின் மீதான இந்திய நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தும் வகையில் சீனா மற்றும் அமெரிக்கா செயலாற்றக் கூடிய சூழல் இருந்தது. ஆனால், அப்படியான எந்தவொரு தலையீட்டையும் அமெரிக்காவோ அல்லது சீனாவோ மேற்கொள்ளவில்லை.

இன்றைய இந்தியா, அமெரிக்காவின் மிக முக்கிய மூலோபாய பங்காளியாக இருக்கிறது.

அன்று முற்றிலும் சாதகமான சூழல் நிலவியபோது கூட, இந்தியாவை தடுத்து நிறுத்த முற்படாத சீனா, இன்றைய இந்தியாவின், இலங்கை தொடர்பான நகர்வுகளில் தலையீடு செய்ய முற்படுமா? இலங்கையை முன்னிறுத்தி, இந்தியாவின் பிராந்திய முக்கியத்துவத்தில் நேரடியாக தலையீடு செய்ய முயலுமா? இலங்கை தொடர்பான விடயத்தில் நேற்று மட்டுமல்ல இன்றும் இந்தியாவின் முக்கியத்துவம் குறைந்துவிடவில்லை. ஆயினும் இந்தியாவின் இன்றைய சுழற்சியில், இன்றைய இலங்கை எவ்வாறு தடைக்கல்லாக அமையும் என்பதைப் பொறுத்தே இந்தியாவின் முகம் வெளிப்படும்.



-யதீந்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மேலும் பத்து திட்டங்களில் முதலீடுகள்

## முன்மொழிவுகளை சமர்ப்பித்தது சீனா



(கொழும்பு)

**இலங்கையில் மேலும் பத்துத் திட்டங்களில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பான முன்மொழிவுகளை இலங்கை முதலீட்டுச் சபையிடம் சீன நிறுவனங்கள் கையளித்துள்ளன. இலங்கையின் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன இத் தகவலை கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

இந்தத் திட்டங்கள் அனைத்தும் கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கானவையாகும்.

உருக்குத் தொழிற்சாலை தகவல் தொழில்நுட்ப பூங்கா, மோட்டார் வாகன ஒருங்கிணைப்புத் தொழிலகம் என்பனவற்றை அமைப்பதற்கான திட்டங்களும் இவற்றில் அடங்கியுள்ளன.

மேலும் மூலிகை அழகுசாதன பொருட்களை தயாரிக்கும் திட்டம் ஒன்றும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்தத் திட்டங்களில் பெரும்பாலானவை 25 மில்லியன் தொடக்கம் 50 மில்லியன் டொலர் வரையிலான முதலீட்டைக் கொண்ட சிறுதொழில் முயற்சிகளே என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே சம்பூரில் முதலீட்டு வலயம் ஒன்றை உருவாக்குவது தொடர்பான யோசனைக்கு இலங்கை அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கனரக தொழில்துறைக்கான சிறப்பு வலயம் ஒன்றை உருவாக்கவே இலங்கை அமைச்சரவை இந்த அனுமதியை அளித்துள்ளது.

இதேவேளை நாட்டின் நெடுஞ்சாலைகளை அமைக்கும் பணியில் சீன அரசாங்கத்தின் பங்களிப்பு அதீதமாகவே காணப்படுகின்றது. அண்மையில் ஏ9 வீதி- கிளிநொச்சி நகர் வீதியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திறந்து வைத்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ-2)


# தங்க இறக்குமதிக்கு 10 வீத வரி அறவீடு

(கொழும்பு)

இலங்கையில் தங்க இறக்குமதிகளுக்கு பத்து வீத வரி அறவீடு செய்யப்படவுள்ளது. இலங்கையில் அதிகளவு தங்கம் இறக்குமதி செய்யப்படுவதாக அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். வரி அறவீடு செய்யப்படாத காரணத்தினால் சில தங்க இறக்குமதியாளர்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளை துஷ்பிரயோகம் செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அண்மைக்காலமாக தங்கக் கடத்தலில் ஈடுபட்டு வந்த சிலர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பி டத்தக்கது. இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை தங்க இறக்குமதிக்கு பத்து வீத வரியை அறவீடு செய்ய உள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த வரி அறவீடு காரணமாக உடனடியாக தங்கத்தின் விலைகளில் உயர்வு ஏற்படவுள்ளதாக தெரிவித்துள்ளார். இதன்படி ஒரு பவுண் தங்கத்தின் விலை 4 ஆயிரம் முதல் 5 ஆயிரம் ரூபா வரையில் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-2)



ஒட்டுசுட்டான் பிரதேச நனசல கணனிப் பயிற்சி நிறுவனத்தில் இலவச கணனிப் பயிற்சி நெறியை நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ரி. திரேஷ்குமார் மாணவன் ஒருவனுக்கு சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்: சித்தங்கேணி செய்தியாளர்)

# வரி மோசடியில் ஈடுபடுவோர் குறித்து விசாரணை அவசியம்

## ஐ.தே.க. வலியுறுத்து

(கொழும்பு)

வரி ஏமாற்றில் ஈடுபடும் இலங்கைப் பிரஜைகள் பற்றி விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்சடி சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.

வரி ஏமாற்றில் ஈடுபடுவோருக்கு உதவிகளை வழங்கும் சில நாடுகளில் இரகசியமான முறையில் இலங்கைப் பிரஜைகள் கணக்குகளைப் பேணி வருகின்றனர்.

இவ்வாறு இரகசிய கணக்குகளைப் பேணி வருவோர் பற்றிய விசாரணைகளை நடத்த பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைக்க வேண்டும்.

அண்மையில் சர்வதேச புலனாய்வு செய்தியாளர்கள் அமைப்பினால் வரி மோசடியில் ஈடுபட்ட நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நபர்கள் பற்றிய தகவல்கள் வெளியிடப்பட்டிருந்தன.

30 இலங்கையர்கள் இவ்வாறு இரகசிய கணக்குகளைப் பேணி வருவதாக அந்த தகவலின் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இரகசியக் கணக்குகளைப் பேணி வரும் இலங்கையர்களை அடையாளம் காணும் நோக்கில் விசாரணைகள் நடத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இலங்கையைச் சேர்ந்த பலர் வெளிநாடுகளில் வங்கிக் கணக்குகளை சட்ட ரீதியாக பேணி வருவதாகவும் அவர்களைப் பற்றி தாம் குறிப்பிடவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் வரி செலுத்த அஞ்சி இரகசியமான முறையில் வரி ஏய்ப்பிற்கு ஒத்துழைப்பு வழங்கும் நாடுகளின் வங்கிகளில் கணக்குகளைப் பேணி வரும் இலங்கையர் பற்றிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதே தமது கோரிக்கை என அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# கபடி, உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் வவுனியா வில் கடந்த 19,20 ஆம் திகதிகளில் கபடி, உதைபந்தாட்டம் ஆகிய போட்டிகள் நடைபெற்றன.

இதனடிப்படையில் 2013 ஆம் ஆண்டிற்கான மாகாண மட்டத்தில் 15 வயதுப் பெண்கள் பிரிவுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மாதகல் சென்.ஜோன்ஸ் மகளிர் கல்லூரி முதலிடத்தையும், கிளிநொச்சி உருத்திரபுர மகாவித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் கிளிநொச்சி சிவநகர் அ.த.க. பாடசாலை மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (அ-254)

# பேருந்து கட்டண உயர்வு குறித்து பேச்சுவார்த்தை

(கொழும்பு)

பேருந்து கட்டண உயர்வு தீர்மானம் மேற்கொள்ளும் பேச்சுவார்த்தை ஒன்று நாளை திங்கட்கிழமை இடம்பெறும் என் தனியார் போக்குவரத்து அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இப்பேச்சுவார்த்தையில் இலங்கை போக்குவரத்து சபை மாகாண போக்குவரத்து அதிகாரிகள் மற்றும் பேருந்து சங்க உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது பேருந்து கட்டண உயர்வு குறித்து மட்டுமன்றி நேர்த்தியான போக்குவரத்து சேவை, ஒன்றிணைந்த கால அட்டவணை உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் பேசப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

எனினும் பேருந்து கட்டண உயர்வு குறித்து பேச சம்பந்தம் இல்லாத நபர்களை அழைத்துள்ளமைக்கு இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன எதிர்ப்பு வெளியிட்டுள்ளார். (அ-2)

# பாதச்சுவட்டை பார்வையிட படையெடுக்கும் சுற்றுலா பயணிகள்



யாழ். நெடுந்தீவு பிரதேசத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள சுமார் 40 அடி மனிதனின் பாதச் சுவட்டை ஒத்த பாதத்தை பார்ப்பதற்காக சுற்றுலாப் பயணிகள் உட்பட பெருமளவானோர் அப்பகுதிக்கு படையெடுத்து வருகின்றனர்.

இந்தப்பாதச்சுவடு உருவாகியமைக்கு விஞ்ஞான ரீதியிலும் வரலாற்று ரீதியிலும் பல்வேறு காரணங்கள் தெரிவிக்கப்படுவதாக நெடுந்தீவு பிரதேச செயலாளர் ஆழ்வார் பிள்ளைசிறி தெரிவித்துள்ளார்.

பாறைகள் சிதைவடைந்து இந்தச் சுவடு உருவானதாக தெரிவிக்கப்படுகின்றது. 40 அடி மனிதன் ஒருவன் கால் வைத்தமையால் உருவானதாகவும் இராமாயணப் போர் நடைபெற்ற போது அனுமன் மலையைத்தூக்கிக் கொண்டு விரும் பொழுது அவர் வைத்த பாதச்சுவடு என்றும் பல்வேறு கதைகள் இது தொடர்பாக தெரிவிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் காணியை அபகரிக்க முனையும் விசேட அதிரடிப்படை

## அனுமதிக்க முடியாது என்கிறார் சிவசக்தி ஆனந்தன்

(குருமன்காடு)

வவுனியா-மன்னார் வீதியில் அமைந்துள்ள பூவரசங்குளம் விசேட அதிரடிப் படையின் முகாமின் தேவை கருதி அங்குள்ள பாடசாலைக்குச் சொந்தமான இரண்டு ஏக்கர் காணியை வழங்கும்படி காணி அமைச்சு உத்தரவிட்டுள்ளமையை வன்மையாகக் கண்டித்துள்ள வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அதிரடிப்படையின் முகாமை அங்கிருந்து அகற்றி ஆரம்பப் பாடசாலையைத் தொடர்ந்து இயங்குவதற்கு அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

1956 ஆம் ஆண்டுமுதல் இயங்கிவரும் குறிப்பிட்ட பாடசாலைக்குச் சொந்தமான காணியில் தற்போது விஷேட அதிரடிப்படையினர் முகாம் அமைத்துள்ளார்கள். இதனால் பாடசாலை மற்றொரு இடத்திலேயே தற்போது செயற்பட்டு வருகின்றது. இதனால், மாணவர்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றார்கள்.

இந்த நிலையில் பாடசாலைக்குச் சொந்தமான இரண்டு ஏக்கர் காணியை விஷேட அதிரடிப்படையினருக்கே சொந்தமாக கையளிக்குமாறு காணி அமைச்சு பிரதேச செயலகத்துக்கு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவித்த சிவசக்தி ஆனந்தன், இதையிட்டு வவுனியா கல்விச் சமூகம் அதிர்ச்சியடைந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் பாடசாலையின் மாணவர்கள், பெற்றோர்கள் தமக்கு முறைப்பாடு செய்திருப்பதாகவும் சிவசக்தி ஆனந்தன் குறிப்பிட்டார்.



கடந்த சுமார் 60 வருடமாக இயங்கிவரும் பாடசாலையை இவ்வாறு இடமாற்றுவது பாரதூரமான ஒரு பிரச்சினை எனத் தெரிவித்துள்ள சிவசக்தி ஆனந்தன், விஷேட அதிரடிப்படையினர் தமக்குத் தேவை எனில் தனியான ஒரு இடத்தைப் பார்த்துக் கொள்ள வேண்டுமே தவிர, பாடசாலைக் காணியைக் கபளீகரம் செய்வதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார். விரைவில் அதிரடிப்படையினர் அங்கிருந்து வெளியேறி பாடசாலை சுமுகமான முறையில் செயற்படுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (3-250)

# முல்லை.உணவகங்களில் சுகாதார சீர்கேடுகள்

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(முல்லைத்தீவு)



முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று, துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, வெலிஓயா ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட உணவகங்களில் சுகாதார சீர்கேடுகள் இடம்பெறுவதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்படி கிராமங்களின் உணவகங்களில் சுகாதாரமான முறையில் உணவுகள், சிற்றுண்டிகள் பரிமாறப்படுவதில்லை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

உணவகங்களில் பாதுகாப்பற்ற பெட்டிகளில் உணவுகள் வைக்கப்படுவதால் அதில் ஈக்கள் மொய்க்கின்றன.

அதுமட்டுமின்றி உணவுகளைப் பரிமாறுபவர்கள் வெற்றுக் கைகளினால் உணவுகளை தொடுவதுடன் தடை செய்யப்பட்டுள்ள அச்சுத்தாள்களில் உணவுகளைப் பொதி செய்கின்றனர்.

மேலும் உணவகங்களில் புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது என அறிவித்தல் ஒட்டப்பட்டிருக்கின்ற போதும் அங்கு வருபவர்களும் வேலை செய்பவர்களும் புகைத்தலில் ஈடுபடுகின்றனர்.

இந்நடவடிக்கைகளால் உணவகங்களுக்கு வருகின்ற ஏனையவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, சுகாதாரமற்ற உணவகங்களை இனங்கண்டு உணவகங்களின் நியதிகளைப் பின்பற்றாத உணவகங்களின் மீது நடவடிக்கை எடுத்து சுகாதாரமான முறையில் உணவுகளை பெற்றுக் கொள்வதற்கு முல்லை.மாவட்ட சுகாதாரப் பரிசோதகர் உடனே நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (3-267)

# முல்லை-வவுனியா பயணிகள் சேவைக்கு பெரிய இ.போ.ச. பேருந்து தேவை

(முல்லைத்தீவு)



இலங்கை போக்குவரத்து சபையினரால் முல்லைத்தீவிலிருந்து வவுனியாவுக்கு செல்வதற்கு வழங்கப்பட்ட பேருந்து அனைத்து பயணிகளும் பயணிக்க போதுமானதாக காணப்படாமையால் பெரிய பேருந்து ஒன்றைப் பெற்றுத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவிலிருந்து வவுனியாவுக்கு செல்வதற்கான தூரம் 78 கிலோமீற்றராக இருப்பதுடன் தற்போது சேவையில் ஈடுபடுகின்ற பேருந்து நீண்ட தூரம் செல்வதற்கு பொருத்தமற்றதாகவும் உள்ளது.

ஏனெனில் மேற்படி பேருந்தின் இருக்கையொன்றில் ஒருவர் மட்டுமே அமர முடிவதுடன் அது சிறிய பேருந்தாகவும் குறைந்தளவு பயணிகளைக் கொள்ளக் கூடியதாகவுமே அமைந்துள்ளது.

இதனால் முல்லை. மாவட்டத்திலிருந்து வவுனியா செல்கின்ற பயணிகள் அனைவரும் அரச பேருந்தில் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, பயணிகள் தொகையைக் கருத்திற் கொண்டு அதிக இருக்கை வசதிகளைக் கொண்ட பெரிய பேருந்தொன்றை வழங்கி உதவுமாறு அப்பகுதி மக்கள் வட மாகாண இலங்கை போக்குவரத்துச் சபை முகாமையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (3-267)




# மூன்று கமநல சேவை நிலையங்களின் கீழ் 4,860 ஏக்கருக்கு மேல் சிறுபோக நெற்செய்கை

(மல்லாவி)



துணுக்காய், மாந்தைகிழக்கு, ஒலுமடு ஆகிய கமநல சேவை நிலையங்களின் கீழுள்ள பெரிய குளங்கள் மற்றும் சிறு குளங்களின் கீழ் மொத்தமாக 4 ஆயிரத்து 860 ஏக்கருக்கு மேல் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள பெரிய குளங்களின் கீழ் 2 ஆயிரத்து 331 ஏக்கரும் சிறுகுளங்களின் கீழ் 221 ஏக்கரும் சிறுபோக நெல் பயிரிடப் பட்டுள்ளது.

மாந்தை கிழக்கில் பெரிய குளங்களின் கீழ் உள்ள பனங்காமம் குளத்தின் கீழ் 70 ஏக்கரும் கொல்லவிளாங்குளம் குளத்தின் கீழ் 80 ஏக்கரும் வவுனிக்குளத்தின் கீழ் ஆயிரத்து 745 ஏக்கரும் பயிரிடப் பட்டுள்ளது. சிறு குளங்களின் கீழ் 288 ஏக்கரும் பயிரிடப்பட்டுள்ளது.

ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள சிறுகுளங்களான தச்சடம்பன் குளத்தின் கீழ் 46 1/2 ஏக்கரும் முறிகண்டி குளத்தின் கீழ் 10 ஏக்கரும் பெரிய புளியங்குளத்தின் கீழ் 22 ஏக்கரும் கற்கிடங்கு குளத்தின் கீழ் 20 ஏக்கரும் யங்கன் குளத்தின் கீழ் 10 ஏக்கரும் ஒலுமடு குளத்தின் கீழ் 70 ஏக்கரும் அம்பகாமம் குளத்தின் கீழ் 45 ஏக்கரும் புல்வேலன் குளத்தின் கீழ் 7 ஏக்கரும் புலுமச்சிநாதகுளத்தின் கீழ் 25 ஏக்கரும் சிறுபோக நெற் செய்கை பயிரிடப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் அறக்கொட்டியான் புழுவின் தாக்கத்தால் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டபோதும் அது தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் கோரைப் புல்லுக்கு தெளிக்கப்படும் களை நாசினியின் வீரியம் போதாமை காரணமாக நெற் பயிர்களில் கோரைத்தாக்கம் அதிகமாக காணப்படுகின்றது.

மேற்படி மூன்று கமநல சேவை நிலையங்களின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கருத்து தெரிவிக்கையில்,

விவசாயிகளுக்கான மானிய உர விநியோகம் நடைபெற்று கொண்டிருப்பதாகவும் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் மானிய உரங்களை பெற்றுக் கொள்ளுமாறும் இதற்கு பின்னர் 2014 ஆம் ஆண்டுக்கான பெரும்போக நெற் செய்கை தொடர்பான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் உர விநியோகம் நடைபெறமாட்டாது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (3-15)







வவுனியா விவசாய திணைக்களத்தின் விரிவாக்கற் பிரிவினால் கனகராயன்குளத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம் தொடர்பான கண்காட்சியும் வயல் விழாவும் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் மங்கல விளக்கேற்றுவதையும் அதிதிகள் உட்பட மாணவர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## சுதந்திரம் இல்லையே!

எத்தனை அழிவுகள்
எமை சுற்றி நடக்கிறது
உள்ளிருக்கும் மனமோ
அவலக்குரல் எழுப்புகிறது
கையிலிருந்த பணமோ
காணாமல் போகிறது
பொருளாதார சுமையோ
கூண்டோடு எரிக்கிறது
முயற்சிகள் எல்லாம்
முட்டாள்தனம் ஆகிறது
வேலை தேடும் பணியில்
துயரங்கள் தொடர்கிறது
ஏன் பிறந்தோம் என்று
ஏக்கங்கள் தொடர்கிறது
பட்டாம்பூச்சிகூட
நமைப்பார்த்துச் சிரிக்கிறது

மருதங்கேணியூர்
வே.வே. அகிலேஸ்வரன்

## இறைவன் தந்த பரிசு

பனிபடர்ந்த காலையில்
மலரும் மலர்கள்
மாலை மரணம்
நிச்சயம் என்று தெரிந்திருந்தும்
கண்ணீர் சிந்தாமல்
புன்னகையுடன் மலர்கின்றதே
இது கடவுளின் வரமா? சாபமா?

க.மலர், திருநெல்வேலி

## புறக்கணிப்பு

பிள்ளையின் இல்லம்
அன்னை இல்லம்
அன்னையோ?
முதியோர் இல்லத்தில்

## ஏக்கம்

கொதிக்கும் வெயிலில்
நடக்கும்போது
நிழலைத்தேடும் கால்கள்
அப்படி தேடும் நிழல்தான்
என் பெற்றோர்

க.செல்வமலர்
திருநெல்வேலி

## உன் கிராமத்து கரையில்

கடலோரக் காற்றோடு
கரையெங்கும் வலைவிரித்து
கரைவலையான்
கவி எழுதும் காடுதான்
என் கள்ளப்பாடு இங்கே..
சுனாமியின்
சொக்கைத் தசைகள்
கிழிய சிணுங்கியதை
கண்டேன்...
இங்கே... துப்பாக்கி ரவைகள்
துள்ளித்துள்ளி
மெல்லக் கொஞ்சியதையும்
கண்டேன்...
இங்கே... கடலோரம் எங்கும்
உடலில் உடையற்று
திடல் ஒன்றில் அலையும்
பசி வயிற்றுப் பாலகர்களையும்
கண்டேன்
இங்கே தூரதரிசனம் வரை
துன்பம் தெரிந்தது
வாரம் ஒரமுரற இன்பமும்
காரம் கண்டது...
இப்பாமரப்பாடு
இப்போ படித்தார் பாடு...
இத்துன்பத்தின் பாடு
இப்போ துள்ளலின் பாடு...
காவியம் செய்யும்
கலைசெய்யும்- இனி
கல்வியும் பொழியும்- என்
கள்ளப்பாட்டுக்கு...
கவி எழுதத்தான்- நான்
காத்திருக்கின்றேன்

பி.ஜதீஸ்குமார்
கள்ளப்பாடு

## இமயம் தொட...

கனவு காண்
உன்னை இந்த உலகிற்கு
அடையாளப்படுத்த
கனவு காணு
கனவை நினைவாக்க
வியர்வையை பரிசாக்கு
உன் வியர்வை
வெற்றியில் முடியும்
வெற்றி
கனவை நினைவாக்கும்

மாவை. நா. கஜேந்திரன்

## உண்மை நண்பி

இன்பம் வரும்போது இனிப்பாகவும்
துன்பம் எழும்போது கைக்குட்டையாகவும்
புகழுக்கு செல்லும்போது தங்கப்பதக்கமாகவும்
திசையறியாத பொழுது திசைகாட்டியாகவும்
விசையில் செல்லாத போது வேகமாகவும்
பாதை தவறிய பொழுது பயணமாகவும்
கைநழுவிய பொழுது கயிறாகவும்
வடிவம் மறைந்த பொழுது தோழியாகவும்
உருக்குலைந்த உருவத்தை
உறுதுணையால் உருவாக்கியவளே
உண்மையான நண்பி

ச.டிலக்சனா
வவுனியா

# மௌனத்தின் தேடல் - 159



## கண்ணீர் வடிக்கின்றோம்

மூன்று முகம் காட்டி
முறுவலிக்கும்...
இளம் பிஞ்சுகளே!
நீங்கள் நினைப்பது போல்
எம் சிந்தை சிரிக்கவில்லை
எதிர்காலம் நினைந்து...
வெந்து நொந்து
வேதனையில்...
கண்ணீர் வடிக்கின்றோம்

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

## வாழ்ந்திடுவீர் நன்றே

புன்னகை பூக்கும் உங்கள்
பொன் முகம் காண
என் மனந் துடிக்கிறதே
அன்பு பொங்க மூவரும்
அரவணைத்து அகமகிழ்ந்து
ஆனந்தமாய்ச் சிரித்ததுபோல
என்றும் வாழ்ந்திடுவீர் நன்றே

துரை
தென்மட்டுவில்

## வாழ்த்துகிறோம்

அன்புச் செல்வங்களே!
உங்களது சிரிப்பிலே
உங்களின் எதிர்காலத்தின்
ஒளி பிரகாசிக்கின்றது
நீங்கள் பல்கலையும் கற்று
பல்லாண்டு காலம்
சீரும் சிறப்புடன்
வாழ்க வாழ்கவென
வாழ்த்துகிறோம்

ஆ.கதுவேந்தன்
மட்டுவில்

## செயற்படுவோம்

கள்ளம் கபடம்
இல்லா உங்கள்
உறவுகளின் ஆழம்
உங்கள் சிரிப்பில்
தெரிகின்றது நாம்
அனைவரும் இவர்கள்
பேரில் ஆனால்-, படைத்தவன்
பரவசப்படுவான்...?

ஞா.வதனி
குருநகர்

## வாழ்த்துக்கள்

போட்டி பொறாமைகள்
நிறைந்த- இவ்வுலகில்
பல ஏக்க கனவுகள்
நிறைந்த உள்ளங்களின்
ஒற்றுமையையும் சிரிப்பையும்
பார்க்கும்போது
யானே பூரிப்படைகின்றேன்
உங்கள் வாழ்வில்
உங்கள் ஒற்றுமையை
தடுக்கும் எந்தத்
தடைகள் வந்தாலும்
எதிர்நீச்சல் போட்டு
வாழ்வில் முன்னேற
என் வாழ்த்துக்கள்

ம.அ.மரிய ஜெனிற்றா
சாவகச்சேரி

## சிரிப்பு

தம்பிமாரே உங்களின்
இந்தச் சிரிப்பே உலகில்
மனிதனையும் மிருகத்தையும்
வேறுபடுத்தி
வைத்துள்ளது

க.ஜெயரூபன்
பருத்தித்துறை

## ஒற்றுமை

இந்த ஒற்றுமை
அந்த நாளில்
மூவேந்தரிடம்
மூலவேர்போல்
வீரியமாகியிருந்தால்
தமிழர் வாழ்வியலில்
தடம்பதித்து
தடுமாற்றம் தந்த
துன்ப துயரங்கள்
தூரப்போயிருக்கும்

க.நாகராசா

## அதுதான்

இடைவிலகிய மாணவர்களோ?
இல்லை இல்லை இவர்கள் மூவரும்
இன்று பாடசாலைக்குப்
போகவில்லை

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்

## புன்முறுவல்

வரலாறுகள் தந்த
காயங்களை
புன்னகை எனும்
மருந்தால்
ஆற்றும் நாளைய
தலைவர்களின்
இந்த புன்முறுவல்
இன்றைய
உலகிற்குச் சொல்லும்
சேதியென்னவோ?

உதயம் ரூபன்
நயினை

## நட்பு

மூன்றுபேர் மூன்று நட்பு
மூன்று உலகம் தொடவேண்டும்
கடவுளே நம் நட்பு
என்றும் சிகரமாய் இருக்க
வேண்டும் தோழர்களே

ச.புவித்ரா
சாவகச்சேரி

## உம் முகதரிசனம்

சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள்
அவர்களை தடுக்காதீர்கள்
என மொழிந்த தேவனே!
உமது அரவணைப்பினாலோ- அல்லது
அவர்கள் உம்மேல் கொண்ட
அன்பாலோ என்னவோ
இம் மழலைகளின் புன்முறுவல்
சிரிப்பில்- இறைவா
உம் முகதரிசனம்
காண்கின்றேன் நான்


அ.அனு
சாவகச்சேரி

## இன்பமே

சின்னஞ் சிறுவர்களே
இன்முகங்கள் தான்
புன்னகையால்
துன்பத்தை விரட்டி
வன்முறையை நிறுத்தி
நன்மையை அடைந்து
மேன்மையை உணர்த்தும்
தன்மையுடையன

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -160



**அன்பு வாசகர்களே!**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 27.06.2013 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.


குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய தீர்த்தோற்சவ சிறப்புமலர் 23.06.2013

எங்கள் வாழ்வில் உந்தன் அன்பைத் தந்தருள்வாயே!




அண்ணா
உற்பத்திப் பொருட்களை
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.
சகல பொருட்களையும்
குறைவான விலையில்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

**அண்ணா சுப்பர் இன்**

கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
தொ.பே: 021 321 8143

உள்ளூர் உற்பத்தியான ஜீவாகாரம்
சிறியோர் முதல் பெரியோர் வரை
பாவிக்க உகந்தசத்துணவு.
இரசாயனக் கலவை அற்றது

உடல் வளர்ச்சிக்கு

**ஜீவாகாரம்**




உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு வழங்குவோம் என்றும் மக்கள் விரும்பிப் பாவிப்பது


அண்ணா தயாரிப்புக்களே...!

- அண்ணா கோப்பி
- அண்ணா அரிசி மா
- குரக்கன் மா
- ஆட்டா மா
- அண்ணா மிளகாய்த் தூள் வகைகள்
- அண்ணா பத்தி வகைகள்
- அண்ணா பற்பொடி
- அண்ணா இனிப்பு வகைகள்


**அண்ணா தொழிலகம்**

இணுவில், தொலைபேசி இல: 021 224 1565

இருளை நீக்கிட வருவாயம்மா..



அமெரிக்கன் குடிநீருக்கான யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்



**E.S.P.நாகரத்தினம் சக நிறுவனம்**

E.S.P.Nagaratnam & Co

52, 54. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 3096

பார் எங்கும் அன்னையின்
அருள் மழை பொழிய
பிரார்த்திக்கின்றோம் நயினைத் தாயை









# கிருபா லேணர்ஸ்

(அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதி பயிற்சிப் பாடசாலை)

- குறிப்பிட்ட காலப் பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.
- வான். முச்சக்கர வண்டி. உழவு இயந்திரம் (டெக்டர்) அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் இரண்டு வருடம் பூர்த்தியானால் கனரக வாகன (AD) சாரதி அனுமதிப்ப பத்திரம் பெறமுடியும்.
- கனரக வாகன (AD) சாரதி அனுமதிப் பத்திரம் பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி பெறலாம்.
- தவணை முறைக் கட்டணம்
- எழுத. வாசிக்க. தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைமுறை

**தலைமைக் காரியாலயம்:**


226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P :021 222 4353, 0214923200
0714546952, 0777225292

**கிளைகள்**

| பருத்தித்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி | விசுவமடு | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|
| T.P : 0214923201 0714546958 | T.P : 0214923202 0212270700 | T.P : 021 228 5505 0714546955 | T.P : 021 300 6550 0714546957 | T.P : 021 320 1515, 0714546955 | T.P : 021 224 2022, 0714546956 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய தீர்த்தோற்சவ சிறப்புமலர் 23.06.2013



## மணி பல்லவத்தில் தீர்த்தம் காண வாரீர்!

மணி பல்லவத்தில் விழாக்காணும் தீவினை தீர்க்கும்
அம்மனுக்கின்று தீர்த்தம் தீராத நோய் தீர்க்கும்
தேவிக்கின்று தீர்த்தம் பக்தர் குறை தீர்க்கும்
அகிலாண்டேஸ்வரிக்கின்று தீர்த்தம் வலிகள் தீர்க்கும்
தாய்க்கின்று தீர்த்தம் வாரீர் வாரீர் வந்தருள் பெறுவீர்
தரணியிலுள்ள அனைவரும் வாரீர் வந்தருள் பெறுவீர்
பிணி, துன்பம், துக்கம், வறுமை, தனிமை, கடன்சுமை தீர்த்திட
தாயிடம் வாரீர் அருள்புரியும் தீர்த்தத்தன்று வாரீர்
மணிபல்லவத்தில் இன்று தீர்த்தமாம் வந்து பாரீர்
மனதின் சுமை தீரும் வந்து பாரீர் கருடன் புடைசூழ
கவலை தீர்த்திடுவாள் நாகம் பூப்போட்ட அன்னை
காத்திடுவாள் நம்பிக்கையுடன் தீர்த்தம் காண வாரீர் வாரீர்

கு.பிரதீபன், அரியாலை.




நயினைத் தாயே...! உன் அருட்கடாட்சம் அனைவருக்கும் கிடைக்க வேண்டுகின்றோம்.

**வேல் முருகன் வாணிப நிலையம்**

தற்கால நவநாகரிக கட்டடங்களுக்கு ஏற்ப சகல விதமான வர்ண பெயின்ட் வகைகளும்,
சுண்ணாம்பு மற்றும் கட்டடப் பொருள் விற்பனையாளர்.

இல.56A,295A மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 9437




தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும்

அல்லல் அறுந்து ஆனந்தம் மலர
துதிக்கின்றோம் அன்னையை

**பரிமளா ஸ்ரோர்ஸ்**

இல:26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0212224135, 0212229165


# நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்

## புதிய மடாலயத் திறப்பு விழா



காலம்: 23.06.2013 ஞாயிறு காலை 9.30

லண்டன் வாழ் சைவ அன்பர்களின் நிதியுதவியில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் மேற்பார்வையில் இப்புதிய கட்டடம் கட்டப்பட்டது.



கட்டட நிர்மாணி
திரு.க.சண்முகநாதன்
(ஊரெழு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று இறுதியாட்டம்

மினி உலகக் கிண்ணப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று நடைபெறுகிறது. இறுதியாட்டத்தில் இந்தியா-இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன. இந்தப்போட்டியை பொறுத்தவரை இந்திய அணி பலமாக உள்ளது. 'லீக்' ஆட்டங்கள் அனைத்திலும் வென்று, அரை இறுதியில் எளிதாக வென்றும் இறுதிப்போட்டிக்கு முன்னேறி உள்ளது.

### பாக். அணியில்

# வருமா மாற்றங்கள்?

மினி உலகக் கிண்ணத் தொடரில் மோசமான பெறுபேறுகளை வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து பாகிஸ்தான் அணியில் மாற்றங்களை ஏற்படுத்துவது குறித்து ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பாகிஸ்தானின் தேர்வாளர்கள், பயிற்றுவிப்பாளர் வட்மோர் ஆகியோர் இது குறித்து ஆராய்ந்து வருகின்றனர்.

பாகிஸ்தான் அணி மினி உலகக் கிண்ணத் தொடரில் மோசமான பெறுபேறுகளை வெளிப்படுத்திய குழுநிலையோடு வெளியேறியிருந்தது.


இந்நிலையில், பாகிஸ்தான் அணியின் சிரேஷ்ட வீரர்கள் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளதோடு, சிரேஷ்ட வீரர்கள் சிலர் அணியிலிருந்து நீக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, சொய்ப் மலிக், கம்ரன் அக்மல், இம்ரான் பர்ஹத் ஆகியோர் அணியிலிருந்து வெளியேற்றப்படுவர் என எதிர்பார்க்கப்படுவதோடு, ருவென்ரி ருவென்ரி அணியின் தலைவரான மொஹமட் ஹபீஸின் இடமும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணி முழுமையான தொடரொன்றிற்காக மேற்கிந்தியத் தீவுகளுக்குப் பயணமாகவுள்ள நிலையில், அதற்கு முன்னதாக இந்த மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் எனத் தெரிகிறது.

எதிர்வரும் ஜூன் 7ஆம் திகதி பாகிஸ்தான் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குப் பயணமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# விலகினார் டில்சான்



இலங்கை கிரிக்கெட் அணியின் தொடக்க ஆட்டக்காரர் டில்ஷான் முத்தரப்புத் தொடரில் இருந்து விலகியுள்ளார்.

சம்பியன்ஸ் கிண்ண அரையிறுதிப் போட்டியில் விளையாடிய போது அவருக்கு கால் பகுதியில் தசைப்பிடிப்பு ஏற்பட்டது. இதையடுத்து அவர் விலகியுள்ளார். அவருக்குப் பதிலாக மாற்று வீரர் விரைவில் அறிவிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய 3 அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு ஒருநாள் தொடர் வரும் 28ஆம் திகதி மேற்கிந்தியத் தீவுகளில் ஆரம்பமாகிறது.

# விளையாட்டுக்கு ஓய்வு



அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் மனைவி, இருபிள்ளைகளுடன்....

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ரிக்கி பொன்டிங் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு. பெறப்போவதாக அறிவித்துள்ளார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடைபெற உள்ள சம்பியன்ஸ் லீக் இருபதுக்கு 20 போட்டியில் பங்கேற்று விட்டு, அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் தான் முழுமையாக ஓய்வு பெறப்போவதாக பொன்டிங் அறிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரரும், அணித் தலைவருமான ரிக்கி பொன்டிங், கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

### மும்பை பூப்பந்தாட்ட அணியின்

# பங்காளராகிறார் சச்சின்?



ஐ.பி.எல் கிரிக்கெட் வருகைக்குப் பின்னர் இதே பாணியில் பல போட்டித் தொடர்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன் வரிசையில் இந்திய பூப்பந்தாட்ட கூட்டமைப்பு (பி.ஏ.ஐ.,) சார்பில், முதல் இந்திய பூப்பந்தாட்ட லீக் (ஐ.பி.எல்.,) தொடர் வரும் ஒகஸ்ட் 14 முதல் 31ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தியாவின் பல இடங்களில் நடக்கவுள்ள இத்தொடரில் மும்பை மாஸ்டர்ஸ், கர்நாடகா கிங்ஸ், லக்னோ வாரியர்ஸ் உட்பட மொத்தம் 6 அணிகள் பங்கேற்கவுள்ளன.

போட்டிகள் லீக் முறையில் நடக்கும். மொத்தம் 90 போட்டிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முதல் நான்கு இடங்களை பெறும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

இதில் மும்பை அணியை வாங்கும் முயற்சியில் சச்சின் முழு வேகத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிகிறது. இதற்கான அனைத்து பணிகளும் ஏறக்குறைய முடிந்து விட்டதாம்.

இது குறித்து பெயர் குறிப்பிட விரும்பாத பி.ஏ.ஐ., நிர்வாகி ஒருவர் கூறுகையில், மும்பையை சேர்ந்த பாலிவுட் நடிகர் ஷாருக்கான் கொல்கத்தா ஐ.பி.எல் கிரிக்கெட் அணியை வாங்கினார்.

இதுபோல, கிரிக்கெட் வீரர் சச்சின் மும்பை மாஸ்டர்ஸ் பூப்பந்தாட்ட அணியின் குறிப்பிட்ட பங்குகளை வாங்கவுள்ளார். தவிர, மேலும் இரண்டு அல்லது மூன்று நிறுவனங்கள் இணைந்து ஏனைய பங்குகளை வாங்குகின்றன என்றும் மொத்தத்தில் அணி உரிமையாளர்களில் ஒருவராக சச்சின் இருப்பார் எனவும் அவர் தெரிவித்தார்.

# 5 போட்டிகள் கொண்ட இந்திய – சிம்பாவே தொடர்

அடுத்த மாதம் சிம்பாப்வே செல்லும் இந்திய அணி 5 ஒருநாள் போட்டிகளில் விளையாட உள்ளது. இந்த தொடரை இந்திய கிரிக்கெட் சபை உறுதி செய்தது. இங்கிலாந்தில் நடைபெற்று வரும் மினி உலக கிண்ணப் போட்டியில் பங்கேற்று விளையாடி வரும் இந்திய அணி, அடுத்து மேற்கிந்தியத் தீவுகள் சென்று முத்தரப்பு ஒருநாள் தொடரில் விளையாடுகிறது. இதைத் தொடர்ந்து சிம்பாப்வேக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இந்திய அணி, 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் மோதுகிறது.

முதல் 3 போட்டிகள் ஹராரே மைதானத்திலும், அடுத்த 2 ஆட்டங்கள் புலவாயோவிலும் நடைபெறவுள்ளன. வீரர்கள் தொடர்ச்சியாக விளையாடி வருவதால், இந்திய கிரிக்கெட் சபை இந்த தொடரை உறுதி செய்யாமல் இருந்தது. தற்போது அட்டவணை அறிவிக்கப்பட்டிருந்தாலும், விளையாடும் வீரர்களின் விபரம் இன்னும் அறிவிக்கப்படவிலலை.

கடந்த 2010ஆம் ஆண்டு சிம்பாப்வேயில் நடந்த முத்தரப்பு தொடரில் சுரேஷ் ரெய்னா தலைமையில் இளம் வீரர்கள் அடங்கிய இந்திய அணி விளையாடியமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்பெயின் பொழிந்தது கோல் மழை



கான்பெடரேஷன் கிண்ண லீக் போட்டியில் கோல் மழை பொழிந்த ஸ்பெயின் அணி, தகிதி அணியை 10-0 என வென்றது.

பிரேசிலில் 9ஆவது கான்பெடரேஷன் கிண்ணக் காற்பந்து தொடர் நடைபெற்று வருகிறது. 'பி' பிரிவு லீக் போட்டியில் ஸ்பெயின், 'கத்துக்குட்டி' தகிதி அணிகள் மோதின. ஆரம்பம் முதல் அசத்திய ஸ்பெயின் அணிககு, முதல் பாதியில் பெர்ணான்டோ டாரஸ்(5, 33வது நிமிடம்) இரண்டு கோல் அடித்தார். டேவிட் சில்வா (31), டேவிட் வில்லா (39) ஆகியோர் கோல் அடிக்க, முதல் பாதியில் 4-0 என முன்னிலை வகித்தது.

பின் இரண்டாவது பாதியில் ஸ்பெயின் அணிக்கு டேவிட் வில்லா (49, 64), பெர்ணான்டோ டாரஸ் (57, 78) தலா இரண்டு கோல்கள் அடித்தனர். ஜுவான் மாடா (66), டேவிட் சில்வா (89) அடுத்தடுத்து கோல் மழை பொழிய, ஸ்பெயின் அணி 10-0 என வெற்றி பெற்றது.

**உருகுவே அபாரம்:**

மற்றொரு போட்டியில் உருகுவே அணி, நைஜீரியாவை 2-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

**புதிய சாதனை**

'பிபா' சார்பில் நடத்தப்படும் சர்வதேச போட்டியில் 10-0 என்ற கோல் கணக்கில் வென்ற முதல் அணி என்ற சாதனையை ஸ்பெயின் படைத்தது. இதற்கு முன் உலக கிண்ண போட்டிகளில் ஹங்கேரி (எதிர்-தென் கொரியா, 9-0, 1954 எல்சால்வடார், 10-1, 1982), யுகோஸ்லாவியா (எதிர்-ஜயர், 9-0, 1974 ) அணிகள் தலா 9 கோல்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றன.

# முக்கோணத் தொடருக்கு இலங்கையும் தயார்

மேற்கிந்தியத் தீவுகளில் இடம்பெறவுள்ள இந்திய, மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் பங்குகொள்ளும் முக்கோணத் தொடருக்கான இலங்கைக் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. இக்குழாமில் அஜந்த மெண்டிஸிற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான குழாமில் அறிவிக்கப்பட்டிருந்த 15 பேர் கொண்ட குழாமிலிருந்து இரண்டு வீரர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். திலகரட்ண டில்ஷான் உபாதை காரணமாகவும், திஸர பெரேரா காரணங்கள் எவையும் குறிப்பிடப்படாமலும் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

காயமடைந்த திலகரட்ண டில்ஷானுக்குப் பதிலாக உபுல் தரங்க சேர்க்கப்பட்டுள்ளார். மோசமான நிலை காரணமாக அணியை விட்டு வெளியேற்றப்பட்டிருந்த உபுல் தரங்க, உள்ளூர்ப் போட்டிகளில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியதன் காரணமாகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

**அறிவிக்கப்பட்டுள்ள குழாம்:**

அஞ்சலோ மத்தியூஸ், டினேஷ் சந்திமால், குஷால் ஜனித் பெரேரா, உபுல் தரங்க, குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்தன, லஹிரு திரிமன்ன, ஜீவன் மெண்டிஸ், ஷமிண்ட எரங்க, நுவான் குலசேகர, டில்ஹார லொக்குஹெட்டிகே, ரங்கன ஹேரத், சச்சித்திர சேனநாயக்க, அஜந்த மெண்டிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச்சான்று நீதிபதியாய் இருந்து தண்டனை தருமுன் நண்பனாய் இருந்து எச்சரிக்கை செய்யும்.

-ஸ்டானிஸ்லாஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மன்னன் இராஜராஜ சோழனுக்கு நேர்ந்த கதியைக் நினைமினே!

வடக்கு மாகாண சபையின் அதிகாரங்கள் வலுக் குறைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டால் எனது பதவியைத் துறப்பேன் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார சூளுரைத்துள்ளார்.

அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் இந்த சூளுரை இனவாதப் பேய்களுக்கு விழுந்த பலத்த அடி எனலாம். அதே நேரம் 13-வது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலேயே வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என நான் கூறுகிறேன்.

இதன்படி தேர்தல் நடைபெற்றால், பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரர் தனது காவியைத் துறப்பாரா? தன் அமைப்பைக் கலைப்பாரா? என்றும் வாசுதேவ நாணயக்கார கேள்வியெழுப்பியுள்ளமை தமிழ் மக்கள் தொடர்பில் சிங்களவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள ஒரு புதிய மாற்றமென அடையாளம் காணமுடியும்.

புத்தபிக்கு ஒருவரைப் பார்த்து இலங்கை சிங்கள அமைச்சர் ஒருவர், உமது காவியைத் துறப்பீரா என கேள்வி எழுப்பிய கணத்திலேயே அந்தக் காவி கழன்று விழுந்து விட்டதாகவே நாம் கருதுகின்றோம்.

இதற்கு அப்பால், அமைச்சர் வாசுதேவ நாணயக் காரவின் இந்தக் கேள்வியானது புத்தபிக்குகள் தம் தொழிலை விட்டு, அரசியலுக்குள் புகுந்து இனவாதம் கக்கினால்? எதிர்காலத்தில் அவமானப்பட வேண்டிவரும் என்பதை கோடி காட்டுவதாகவும் அமைந்துள்ளது என்பது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

30 ஆண்டு காலப் போராட்டம் தோற்றுப் போன தன் மத்தியில், ஈழத்தமிழர்களின் மௌன நிலை, மனச்சாட்சிஉள்ளஎந்தசிங்களவரையும்வேதனைப்பட வைக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை.

போராட்ட காலத்தில் தமிழ் இளைஞர்களின் ஆயுதங்கள் பேசின. ஆனால் இன்று அரசு வெற்றுக் கொண்ட போர் வெற்றிக்குப் பின்னர் ஆயுதங்களின் ஓய்வுக்குப் பின்னர் தமிழர்களின் உரிமை பற்றியும் தீர்வு பற்றியும் ஐ.நா.சபையும் உலக நாடுகளும் நேர்மை உள்ள சிங்கள மக்களும் பேசத்தலைப்பட்டுள்ளனர். இந்நிலைமை இலங்கை அரசுக்கு மிகப்பெரிய நெருக்கடியை கொடுக்க வல்லது என்பதை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

தஞ்சைப் பிரகதீஸ்வரர் என்ற பெருங்கோயிலை கட்டுவித்த மன்னன் இராஜராஜ சோழன் அதற்காக அந்த நாட்டு மக்களை கடுமையாக வருத்தினான் என்ற வரலாறு உண்டு. எந்த நோக்கத்திற்காக மன்னன் இராஜராஜசோழன் பிரகதீஸ்வரர் கோயிலைக் கட்டுமானம் செய்தானோ அந்த நோக்கத்தை அனுபவிக்கமுடியாமல் தான் கட்டுவித்த கோபுரத்தில் ஏறிக் குதித்து தன் உயிரை மாய்த்துக் கொண்டதாகவே அவன் வரலாறு முடிபுற்றது.

மன்னன் இராஜராஜசோழன் பெரிய கோயிலைக் கட்டுவித்தமை தவறன்று. அந்தக் கோயிலின் ஊடாக தன் வரலாறு நிலைபெற வேண்டும் என நினைத்தது தவறன்று. ஆனால் இவற்றுக்காக மக்களை வதைத்தது தவறு. அந்தத் தவறு தான் கோபுரத்தில் ஏறி குதிக்கின்ற பரிதாப நிலையை ஏற்படுத்தியது.

மன்னன் இராஜராஜசோழன் வரலாறு அவனோடு முடிபுற்றுப் போகவில்லை. அவை தொடரவே செய்கின்றன.

இப்போது கூட விடுதலைப்புலிகளிடம் இருந்து இந்த நாட்டை மீட்டு விட்டனர் என்று புகழ்பாடுவோர் எதிர்காலத்தில் இந்த நாட்டின் கறைபடிந்த வரலாற்றுக்கு வித்திட்டார்கள் என்று பேசும் அளவில் கூட நிலைமை மாறலாம். எனவே நிலைமைகள் எப்படியும் மாறலாம் என்பதை நெஞ்சிருத்தி செயற்படுவதே சிறப்பு.

அத்தகையதொரு நினைப்பு ஏற்பட்டுள்ளது என்பதற்கு அடையாளம் தமிழ் மக்களின் உரிமையைக் கொடுப்பதும் கொடுக்கவிடுவதும் ஆகும். மாறாக கொடுப்பதைத் தடுப்பதும் தடுப்பதாக நடிப்பதும் கசப்பான வரலாற்றுக்கே வழிவகுக்கும் என்பதை உணர்தல் புத்திசாலித்தனமாகும்.

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்தநயினார் கோவில் மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் உற்சவங்கள் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து யூலை மாதம் 6-ம் திகதி சனிக்கிழமை சப்பறத்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் நடைபெறவுள்ளது. (9-5)

## தொழில் தருநர்களுக்காக காத்திருக்கும் இளையோர்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற நிஸ்கோ பிரிவில் இதுவரையில் 2 ஆயிரத்து 500 இளைஞர் யுவதிகள் அங்கத்துவம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அங்கத்துவம் பெற்றுள்ள இவ் இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வழங்க விரும்பும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்ட தொழில் நிறுவனங்கள் யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் நிறுவனத்திற்கு பொருத்தமான இளைஞர் யுவதிகளை தெரிவு செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி தொழில் வாய்ப்பினை இளையோருக்கு வழங்கவிரும்பும் நிறுவனங்கள் யாழ்.தேசிய இளைஞர் சேவை மன்ற பொது முகாமையாளர் பஞ்சலிங்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)

## மாணவர் ஒன்றிய நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுர்வேத வைத்திய கல்லூரியின் மாணவர் ஒன்றிய பொதுக்கூட்டமும் ஒன்றியத்திற்கான நிர்வாகிகள் தெரிவும் கல்லூரி பணிப்பாளர் சபையாகிய வட இலங்கை சுதேச வைத்திய சபையின் உப தலைவர் டாக்டர் கே.வி.கே. திருலோகமூர்த்தி தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.

சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் உள்ள கல்லூரி நூலக மண்டபத்தில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக் வட இலங்கை சுதேச வைத்திய சபைச் செயலாளர் டாக்டர் ஜெ.ஜெயலன் கலந்துகொண்டு மாணவர் ஒன்றியத்திற்கான புதிய யாப்பு விதிகளை அறிமுகம் செய்து வைத்தார்.

அத்துடன் தலைவராக யோ. மதீசன், உபதலைவராக ச.கலைவர்ணி, செயலாளராக ரா.அபூர்வகிருஷ்ணன், உப செயலாளராக வை. யாழினன், பொருளாளராக பி.பிறேந்திரா ஆகியோர் தெரிவானார்கள்.

பத்திராதிபராக வி.உமாசுதனும் கணக்காளராக ஜெயலக்சியும் தெரிவானார்கள். (அ-2)

## அலங்கார உற்சவம்


(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கிழக்கு குருநாத சுவாமி கோவில் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு அலங்கார உற்சவம் எதிர் வரும் 26-ம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

உற்சவத்தின் 11 ஆவது நாளான ஜூலை மாதம் 7 ஆம் திகதி வைரவர் பொங்கல் நடைபெறவுள்ளது. (அ-5)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### ஓம் சிவாய நமவெனத் துதிப்போம்



தும்பிமுகன் அடிக்கீழ்ப் படுப்போம்
அம்மையப்பன் பாதத்தில் கிடப்போம்
ஆறுவது சினமென நடிப்போம்
நாறுமுடல்நா மல்லவென்று முடிப்போம்
தேறிந் தெளிந்தவரை அடுப்போம்
ஊறிவரும் அமுதத்தை உண்போம்
வாழ்கசிவ தொண்டனெனக் களிப்போம்
ஊழ்வினையை முற்றாக அழிப்போம்

## பாராயணம் ஓதும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சீரடி சாயி பாபாவின் சத்சரித பாராயணம் ஓதும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 28-ம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெற்று வருகின்றது.

பாராயணத்தின் பூர்த்தியடையும் 28-ம் திகதி அன்று சாயிநாதருக்கு 108 சங்காபிஷேகமும் இரவு 7 மணிக்கு பாபாவின் ஊர் வலமும் நடைபெறவுள்ளது. (அ-5)

## "இயேசு வாழும் கடவுளின் மகன்" எமது வாழ்வில் காட்டுவோம்

"நான்யார்?" என்றகேள்வியை நாம் பல தடவைகள் எம்மிடமோ பிறரிடமோ? கேட்டிருக்கின்றோம்.

இக்கேள்வியைக் கேட்பதன் மூலம் தான்யார் என்பது பற்றி இயேசு ஒரு சுய ஆய்வு மற்றும் பொது ஆய்வு நடத்தி தம்மை அறிந்து கொள்கிறார் எனலாம்.

21 நூற்றாண்டுகளாக மனிதர்கள் "இந்த இயேசு யார்?" என்னும் கேள்விக்கு விடைதேடுகின்றனர். இக்கேள்விக்குப் பதில் என்ன?

இயேசு மக்களும் சீடர்களும் தம்மை யார் என்று கூறுகிறார்கள் என்னும் கேள்வியைக் கேட்கிறார். இயேசுவின் இந்தத் தேடலை இன்றைய நற் செய்தி நமக்குத் தருகின்றது. இன்றைய

### பரமபிதா காட்டிய பாதை

நற்செய்தியில் இயேசுவின் இந்தக் கேள்விகளை நாம் கவனிப் போம்; "நான் யார் என்று மக்கள் சொல்கிறார்கள்?" "நான் யார் என்று நீங்கள் சொல்கிறீர்கள்?"

மக்கள் இயேசுவைப் பற்றி என்ன சொல்கிறார்கள்? என்று நோக்கினால் என்னென்னவோ சொல்லிவிட்டார்கள். இன்னும் சொல்லி வருகிறார்கள். நல்லதும் பொல்லாததும் உண்மையும் பொய்யும் விசுவாச சத்தியங்களும் கற்பனைக் கதைகளும். ஓர் இறைவாக்கினர் எனவும் அளவுக்கதிகமாகவே சொல்லிவிட்டார்கள். ஆனால் இவ்வளவு சொல்லியும் இயேசுவைப் பற்றி முழுமையாக மனிதகுலம் சொல்லிவிட்டதா என்று கேட்டால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

"நான் யார் என்று சொல்கிறீர்கள்?" இந்தக்கேள்வி நமக்குத்தான் தரப்படுகின்றது. இந்த இரண்டாவது கேள்விக்கு அப்படி எளிதாகப் பதில் சொல்லிவிட முடியாது. முதலில் நாம் இயேசுவை யார் என அடையாளம் காணவேண்டும். இயேசுவின் மனநிலை நமது மனநிலையாக மாறவேண்டும். இயேசுவின் வாழ்க்கைப்பாணி நமது வாழ்க்கைப் பாணியாக மாறவேண்டும். அப்போது நாம் "நான் யார் என்று நீங்கள் சொல்கிறீர்கள்?" எனும் கேள்விக்கு நம் வார்த்தையாலேயே பதிலளிக்கமுடியும்.

நாம் படித்தவைகளைவிட பட்டுணர்ந்தவைகளே இந்தக் கேள்விக்குப் பதிலாக வேண்டும். நாம் மனப்பாடம் செய்தவைகளை விட மனதார நம்புகிறவைகளே இந்தக் கேள்விக்கான பதிலையும் தரமுடியும். இந்தக்கேள்வி நம்மில் பலருக்கு சங்கடங்களை உருவாக்குகின்றன என உணர்ந்தால் அது ஒரு நல்ல ஆரம்பம். இயேசுவின் இந்தக்கேள்வி வெறும் கேள்வியல்ல. ஓர் அழைப்பு "என்னைப் பற்றி புரிந்துகொள்" என்னைப் பற்றிக்கொள் என்று இயேசுவிடுக்கும் அழைப்பு.

இது சாதாரண அழைப்பு அல்ல. அவரை நம்பி அவரோடு நடக்க, அவரைப் போல் நடக்க பகலானாலும் இரவானாலும் மழையானாலும் புயலானாலும் துணிந்து நடக்க அவர் தரும் ஓர் அழைப்பு. வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்த கொடுக்கப்படும் இந்த அழைப்பிற்கு மனதின் ஆழத்திலிருந்து வரட்டும் நம் பதில்கள்:



இயேசுவை அறிந்துகொள்ளும் இரு வழிகளை இன்றைய நற்செய்தி நமக்கு வழங்குகின்றது. சொந்த ஈடுபாடு எதுவும் இல்லாமல் இயேசுவைப் பற்றிய கருத்துக்களை திரட்டுவது முதல் வழி. "மானிட மகன் யார் என்று மக்கள் சொல்கிறார்கள்?" என்று இயேசு கேட்ட போது இந்த முதல் வழியில் திரட்டிய பதில்களை சீடர்கள் இயேசுவிடம் கூறினர். பின்னர் இயேசு தன் சீடர்களிடம் "ஆனால் நீங்கள், நான் யார் என சொல்கிறீர்கள்?" என்று கேட்டார். சீமோன் பேதுரு, "நீர் மெசியா வாழும் கடவுளின் மகன்" என்கின்றார். பேதுரு வின் பகல் வெறும் கருத்துக்களைத் தாண்டி விசுவாசத்தின் அறிக்கையாக இங்கு ஒலிக்கின்றது.


இன்று எங்களிடம் இயேசு, "நீங்கள் நான் யார் எனச் சொல்கிறீர்கள்?" என்ற இதே கேள்வியை கேட்கிறார் என வைத்துக்கொண்டால்: இயேசுவின் கேள்விக்கு தாராள மனதோடும் துணிவோடும் பேதுருவின் விசுவாச அறிக்கைக்கு பதிலாக நாம் உலகிற்கு இயேசு மெசியா வாழும் கடவுளின் மகன்" என எமது வாழ்வால் காட்டுவோமா?


ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழின் சிறப்பு







தமிழ், சங்ககாலத்திற்கு முன்பும் பின்பும் சுவடிகளில் படைப்புகள் பலவற்றுக்கு உரையாசிரியர்கள் உரைகண்டனர். அப்போதும் அதற்குப் பின்னர் காகித அச்சு தொழில் நுட்பத்திற்கு மாறிடும் போதும் அதன் வரி வடிவங்கள் சிற்சில மாற்றம் கண்டன.

இவ்வாறு மாற்றம் கண்டிடினும், அதன் வளமை மாற வில்லை. இது தமிழின் சிறப்பாகும். இதுபோன்று அச்சுருக்களிலும் காலத்துக்கேற்ப மாறுதல்கள் வந்த போதும் அந்த மாற்றங்களுக்கும் தமிழ் உட்பட்டது. அச்சுக்கலையின் வேகமான பல்வேறு மாற்றங்களுக்கும் தமிழ் உட்பட்டது. இதேபோல் கணனித் தொழில்நுட்பம் தொடங்கிய போதும் அதில் ஏற்பட்டு வரும் பல மாற்றங்களிலும் தமிழ் தன் தனித்தன்மையை இழக்காமல் அத்துணை மாற்றங்களையும் எதிர்கொண்டு காலங்கள் தோறும் நிகழ்ந்த மாற்றங்களை உள்வாங்கி தனித்தன்மையுடன் மிளிர்கிறது.

ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் புதிய தொழில் நுட்ப அறிவியல் துறைகள் உருவான போது புதிய புதிய சொற்கள் உருவாகின. உலக மொழிகள் பலவும் ஆங்கிலம் பிரெஞ்சு சொல் வடிவங்களை அப்படியே ஏற்றது. ஏனெனில் அவைகளுக்கு புதிய சொல்லாக்கம் செய்திடும் வண்ணம் மொழி வளம் குறைவு. ஆனால் தமிழ் வேர்ச்சொல் அடிப்படையிலும் வினைகளின் அடிப்படையிலும் புதிதாக உருவான சொல்லுக்கு நிகரான சொற்களை உருவாக்கும் திண்மை பெற்றதால் தன் தனித்தன்மையை நிலை பெற வைத்துள்ளது. எடுத்துக்காட்டாக ஜப்பானியர்கள் தொலைக்காட்சி தொழில்நுட்பத்தில் மேற்குலகையே ஆச்சரியத்தில் மூழ்கடித்து வருகின்றனர். எனினும் ஆங்கில சொல்லான டெலிவிஷன் என்ற சொல்லுக்கு மாற்றாக அக் கருவியை ஜப்பான் மொழியில் வழங்க இயலவில்லை. எனவே அவர்களும் டெலிவிஷன் என்றே வழங்குகின்றனர். ஆனால் டெலிவிஷன் எனும் கருவி புரியும் வினையை தமிழில் உட்கிடத்தி அதனை தொலைக்காட்சி என வழங்குகிறோம். இதுவே மொழிச் சிறப்பு. தமிழில் வழங்கப்பட்டு வரும் சொற்களாயினும் புதிய சொல் ஆக்கம் எதுவாயினும் இயற்கை - ஆக்கம் - செயற்கை என உருவாக்கிட தொல்காப்பியத்தின் சொல் அதிகாரம் தெளிவைத் தருகிறது. இது தமிழுக்கே உரித்தானதாகும். எனவேதான் இன்று வளர்ந்து வரும் எத்தகைய புதிய துறையாக இருப்பினும் அதற்கான சொல்லாக்கம் தமிழால் செய்ய இயலும். மனித அறிவின் எல்லையற்ற வளர்ச்சிக்கு ஈடாக தமிழும் இணையற்றதாக உள்ளது.

இதற்கேற்ப சில புதிய அறிவியற் சொற்களுக்கான தமிழ்ச் சொற்கள்.

Accelerator - முடுக்கி
Acceptance - ஏற்பு
Acceptor -ஏற்பி
Accessory - துணைக்கருவி
Air wave - காற்றலை
Amplitude of forced vibration- திணிப்பதிர்வு வீச்சு
Anode - நேர்மின்வாய்
Biophysics - உயிர்இயற்பியல்
Digital computer-எண்கணிப்பொறி
Fuse-உருகி
Gauge-அளவி
Generator -மின் இயற்றி









சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் ஐந்தாவது ஆண்டு குருபூசை வைபவம் கடந்த 20ஆம் திகதி தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் இடம் பெற்ற போது...

(படங்கள் [illegible])

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்




### இன்று தீர்த்த திருவிழா

## நல்லருளை நல்கிடம்மா...

அருள் மழை பொழிகின்ற அகிலாண்டேஸ்வரியே
ஆனந்தமாய் அன்பர் உம்மை ஆடிப்பாடி
இப்புவிதனிலே இருளகற்றி இன்பம் தரும்
ஈசனின் துணையானவளே தாயே
உந்தன் பாதக்கமலம் சரணடைந்தோமே
ஊரெல்லாம் உன்னை போற்றிட
எமக்கருளும் நயினையம்மா
ஏற்றம் மிகுந்த வாழ்வு தன்னில்
ஐயம் களைந்து எம்மை
ஒற்றுமையாய் வாழவைக்கும்
ஓங்காரரூபினியே நயினையில் பதிகொண்ட
நாகபூஷணியே நல்லருளை நல்கிடம்மா.

வி. கீர்த்தனா,
மானிப்பாய்.

## நாகம்மா

அரவம் உலகில் நிலைகொண்ட
ஆதிசக்தி நாகம்மா – உன்
ஆட்சி அருளில் வினை தீர்க்க
அகலும் உலக இருளம்மா

கமலம் நடுவில் உருகொண்ட
கலைவாணி நாகம்மா – உன்
காட்சி கண்டு மீட்சி கொள்ள
கலையும் பாவ துயரம்மா

கோ. சதீஸ்,
இராஜகிராமம்.

## வரம் தருவாயம்மா

நமசிவாய நாயகனின் மகேஸ்வரியே
வேப்பிலையில் குடிகொண்ட வேப்பிலைக்காரியே
பாம்பணையில் பள்ளிகொண்ட ஈஸ்வரியே
மணிபல்லவத் தீவில் வீற்றிருக்கும் அகிலாண்டேஸ்வரியே
வரந்தந்து காத்தருள்வாயே அம்மா

நி.லக்ஷ்மி,
யாழ்/இந்து ஆரம்ப பாடசாலை.

## தீர்த்தமாடிவருகிறாள் அன்னை!

சப்ததீர்த்த நீரிலே மஞ்சளைச் சேர்த்து
நயினை நகர் நாகம்மா நீராடி
அங்க மெலாம் சந்தனத்தை அரைத்து பூசி
அம்மா ஆடி வாரா சிம்மா சனமேறி...


பி.சசிக்குமார்,
வேலணை.

## காத்திடம்மா

ஈரேழு ஆயிரம் ஆண்டுகளாய்
ஏகமாய் அமர்ந்தாய் தீவினிலே
பூவெடுத்து நாகமது கடல் கடந்து
மாசக்தி உன்பாதம் தொழுதம்மா
நாமுமின்று விழித்தெழுந்தோம்
நல்லபெருந் தெய்வமுன்னை
பாடித்தினம் பணிந்திடவே
பக்குவமாய் காத்திடம்மா.

திருமதி. ஜெ. கந்தவேல்,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நயினாதீவு நாகபூஷணியின் தேர்த்திருவிழாவான நேற்று தேரில் ஆரோகணிப்பதற்காக அம்பாள் வருவதையும், பக்தர்கள் அங்கப்பிரதட்சணம் செய்வதையும், தேரிலிருந்து நாகபூஷணி அம்மன் அவரோகணிப்பதையும் படங்களில் காணலாம்.

# 100 மீ.ஓட்டம்; போல்ட் தகுதி

ஜமைக்காவின் கிங்க்ஸ்டன் நகரில் தடகளப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற 100 மீ ஓட்டப்பந்தயத்தில் ஜமைக்காவின் உலக சம்பியனான உசேன் போல்ட் முதலிடம் பெற்று வரும் ஓகஸ்ட் மாதம் நடக்கவிருக்கும் உலக சம்பியன் போட்டிக்கு தகுதி பெற்றார்.

60மீ தூரம் தாண்டியதும் அனைவரையும் பின்னுக்குத் தள்ளி முதல் நிலை பெற்ற போல்ட், 9.94 வினாடிகளில் வெற்றிக் கோட்டைத் தொட்டார். வளர்ந்து வரும் வீரரும், போல்ட்டின் இணை பயிற்சியாளருமான கெமார் பெய்லி கோல் 9.98 வினாடிகளில் 2-வதாக வந்தார். 9.99 வினாடிகளில் வந்து நிக்கல் அஷ்மெத் மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.



அமெரிக்க சாம்பியன்ஷிப் போட்டியில் 9.75 வினாடிகளில் முதலாவதாக வந்த டைசன் கேயுடன் இணைந்து பயிற்சி பெறுபவர் ஆவார்.

# தெரிவுக்குழு குறித்து...

உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் வெளிநாடுகளில் இருப்பதால் இது குறித்து எந்த முடிவும் எட்டப்படவில்லை என்றும் கூறினார்.

வெளிநாட்டில் இருக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் அனைவரும் இலங்கை திரும்பிய பிறகு, எல்லோரும் கலந்துபேசி இந்த தெரிவுக்குழு தொடர்பான தமிழ் தேசிய கூட்டமைப்பின் அதிகாரப்பூர்வ நிலைப்பாட்டை தாங்கள் எடுக்கவிருப்பதாகவும் சம்பந்தன் தெரிவித்தார்.

இந்திய பயணத்தின்போது இல்ங்கை அரசின் இந்த தெரிவுக்குழு குறித்து இந்திய அரசிடம் தாங்கள் முக்கியத்துவம் கொடுத்து பேசவில்லை என்று கூறிய சம்பந்தன், பதின்மூன்றாவது சட்டத்திருத்தம் தொடர்பாகவே இந்திய பிரதமர் உள்ளிட்ட இந்திய தலைவர்களிடமும் அதிகாரிகளிடமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விரிவாக பேசியதாகவும் கூறினார். (எ-11)

# நயினை தேர்...

நேற்று அம்பாள் சித்திரத் தேரில் பவனி வந்து அடியவர் களுக்கு அருள் வழங்கினார்.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தேர்த்திருவிழாவில் கலந்து கொண்டனர்.

யாழ்.குடாநாட்டிலிருந்து இலங்கை போக்குவரத்து சபை பஸ்கள், தனியார் பஸ் சேவை பஸ்கள் என நூற்றுக்கணக்கான வாகனங்கள் நேற்று குறிகாட்டுவானுக்குச் சென்றன.

அதிகளவான படகுகள் மற்றும் வாகனங்கள் சேவையில் ஈடுபட்டதால் சனநெரிசல் இன்றி பக்தர்கள் நயினைத் தாயின் அருளினைப் பெற்றுத் திரும்பினர். (எ-11)

# அதிருப்தியில்...

கட்சியான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு இட மளிக்கப்படாதது குறித்து அந்தக் கட்சியினர் மத்தியில் அதிருப்தி எழுந்துள்ளது.

இது குறித்து கல்முனையில் ஒரு கூட்டத்தில் உரையாற்றிய அந்தக் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

அதேவேளை, முக்கிய சிறுபான்மைக் கட்சியான முஸ்லிம் காங்கிரஸை புறக்கணித்து விட்டு இந்த நடைமுறைகளில் முஸ்லிம்களும் உரிய பங்களிப்பை பெற முடியாது என்று தெரிவித்த அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரான ஹசன் அலி, சில வேளைகளில் அடுத்த கட்டமாக அரசாங்கத்தினால் உறுப்பினர்கள் அறிவிக்கப்படும் போது அதில் முஸ்லிம் காங்கிரசுக்கும் இடமளிக்கப்படலாம் என்றும் குறிப்பிட்டார். (எ-11)

# அவுஸ்திரேலியா...

இந்த சிக்கலில் இருந்து மீளவேண்டுமாக இருந்தால், அவுஸதிரேலியா விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்ய வேண்டும் என்று அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்துள்ள போதும், அவுஸ்திரேலியா இன்னும அதனைத் தடை செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# இந்திய...

பகுதி உடைந்து விழுந்ததால் வெள்ளம் வெடித்துக் கிளம்பி எதிர்ப்பட்டதையெல்லாம் அள்ளிச்சென்றது.

இக் காட்டாற்று வெள்ளம் பல இடங்களில் திசை திரும்பியதால் சுமார் 200 கிராமங்கள் அழிந்தே போயுள்ளன. அங்கிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் கதி என்ன என்பது தெரியவில்லை.

கேதர்நாத்தில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட நூற்றுக் கணக்கான வீடுகள், வாகனங்கள் எங்கே சென்றன என்றே தெரியவில்லை. கேதர்நாத் சிவாலயத்துக்கு வருபவர்களை சுற்றிக்காட்ட 4700 சுற்றுலா வழிகாட்டிகள் இருந்தனர். வாகன ஓட்டுநர்கள் 500 பேரும், பூசாரிகள் 100 பேரும் விடுதி தொழிலாளர்கள் சுமார் 700 பேரும் இருந்தனர்.

இவர்களில் ஆயிரம் பேர்தான் மீட்கப் பட்டுள்ளனர். மற்றவர்களின் கதி என்னவென்று தெரியவில்லை. மேலும் கேதார்நாத் கோயில் வளாகத்தில் இருந்த ஆதி சங்கராச்சாரியாரின் சமாதியும் அடித்துச் செல்லப் பட்டுள்ளது. இது 8-ம் நூற்றாண்டில் கட்டப் பட்டது. அங்கு இருந்த சிலைகள், லிங்கம் என எதையும் வெள்ளம் விட்டு வைக்கவில்லை. (எ-11)

# மத்தியஸ்தம் குறித்து...

தென்னாபிரிக்காவின் பிரதி வெளி விவகார அமைச்சர் இப்ராஹிம் இப்ராஹிம் இன்று ஞாயிற்றுக்கிழமை இலங்கை வருகின்றார். இவர் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பை சந்தித்து இனப்பிரச்சினைக்கான தீர்வு திட்டத்திற்கு மத்தியஸ்தம் வகிப்பது குறித்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவுள்ளார்.

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சுக்களை ஊக்குவிக்கவும், மத்தியஸ்தம் வகிக்கவும் தென்னாபிரிக்கா விருப்பம் தெரிவித்திருந்தது.

அத்துடன் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்ட அரச தரப்பினரையும், தமிழ் தேசியக் கூட்டமைப்பையும் முன்னரும் சந்தித்து பேச்சுவார்த்தைகளை தென்னாபிரிக்கப் பிரதிநிதிகள் முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் இன்று இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொண்டு வரவுள்ள தென்னாபிரிக்காவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் இப்ராஹிம் இப்ராஹிம் அரச தரப்பினருடனும் முக்கிய சந்திப்புக்களை முன்னெடுக்கவுள்ளார்.

இதேவேளை தற்போது இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் மாவை சேனாதிராஜா உள்ளிட்டோர் இன்று நாடு திரும்ப உள்ளதுடன் தென்னாபிரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பில் கலந்து கொள்வார்கள் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்தார். (எ-11)


## வேலைவாய்ப்பு

வடக்கு மற்றும் வடமராட்சி வாழ் இளைஞர் யுவதிகளுக்கு ஓர் அரிய வாய்ப்பு! நீங்கள் (O/L) சாதாரணதரம் படித்தவர்களா? தன்னிச்சையாகச் செயற்படக் கூடியவரா? விடாமுயற்சியுடன் கூடிய நேர்மைத்தன்மை உள்ளவர்களா?

உங்களுக்காகவே புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள DYNAMIC MARKETING COMPANY தனது 1-ம் மாத நிறைவில் 2-ம் கிளையை நிறுவியுள்ள அதேவேளை தனது கிளைகளை பன்முகப்படுத்தும் முகமாக துடிப்பு மிக்க இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பினை வழங்க முன்வந்துள்ளது. அடிப்படை சம்பளத்துடன் ஆறுமாத கால(6) பயிற்சி வழங்கப்படும்.



தொடர்புகளுக்கு :- 0770878555

(3112)

★★★ LUX ETOILES HOTEL

Pizza Lux Pizza

Lux Pizza, Lux Swiming Pool, Lux Hot and Cool Bar, Pool Bar



இது ஓர் இத்தாலிய Pizza இத்தாலிய முறைப்படி, பயிற்சி பெற்ற சமையல் கலை வல்லுநரால் இத்தாலியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடு கொண்டு தயார் செய்யப்படும் Original Italian Pizza.

Pizza நமது வெதுப்பகத்தில் 500 பேர் கொண்ட விழாக்களுக்கும், எமது திறந்த வெளியரங்கில் சேவை செய்ய வசதிகொண்டுள்ளோம் என்பதையும் தெரிவித்து கொள்ளுகின்றோம்.

Italian Pizza முன்கூட்டியே, சுவைத்தவர், நமது Pizza மீது தவறு இருப்பின் சுட்டிக்காட்டும் வண்ணம், தவறுகள் ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் வெகுமானமும் வழங்கப்படும்.

Lux Pizza கிளைகள்: உரும்பிராய், மானிப்பாய் வட்டாரத்தில் முதலாவதாக வசந்தன் கிறீம் ஹவுஸ், உரும்பிராய் சந்தி, உரும்பிராய். 021-3002128

இதோ உங்களுக்காக சலுகை விலையில்

மாநகர சபை எல்லை விலைப்பட்டியல்



| ITAMS | SMALL | LARGE |
|---|---|---|
| Mush Room - veg | 490 | 590 |
| Chicken | 590 | 690 |
| Sea Food | 590 | 690 |
| Mixed Meat | 690 | 790 |
| Sausage | 490 | 590 |
| Mini | 160 | |

No.34, Chetty Street Lane, Nallur, Jaffna.
021-2223966, 021-2219227


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STUDY in LONDON

Aug/Sep Intake started now

- G.C.E O/L தகைமை போதுமானது.
- மிகக்குறுகிய காலத்தில் பயணிக்க கூடிய அரிய சந்தர்ப்பம்.(3/4 வாரங்களில் வீசா)

City&Guilds Approved centre

நீங்கள் City&Guilds B1 or IELTS பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களாக இருந்தால் உங்களுக்காக, எமது நிறுவனம் "கல்லூரிக்கட்டணம்" மற்றும் "Sponsor" ஏற்பாடுகளிற்கு பணத்தை செலவு செய்கின்றது.

"வீசா கிடைப்பதற்கு முன்னதாக எவ்விதமுற்பணமும் உங்களிடத்திலிருந்து அறவிடப்படமாட்டாது"

France(French), German(Deutch), City&Guilds (A1,B1/B2) IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றது.

இந்த பொன்னான அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாது எம்முடன் இணைந்து உங்கள் கனவை நனவாக்குங்கள்.


கடந்த மாதங்களில் வீசா கிடைக்கப்பெற்ற மாணவர்கள்

City&Guilds நிறுவனத்தில் ஆசிரிய பயிற்சிபெற்ற ஆசிரியரின் வழிகாட்டலில் வகுப்புக்கள். *பரீட்சையில்100% சித்தியடைவதற்கான உத்தரவாதம்.

WORLD EDUCATION CONSULTANCY(PVT)LTD
No:377,Sangaththanai, Chavakachcheri.
T.P: 021 7200 989; 077 9265447
e mail: chec.usr@gmail.com Gov.Reg No:TN/DS/UC/0324 (C-3713)


# ஆஸி செல்ல...

2 நாட்களாக தமிழக பொலிஸாரின் ஒபரேஷன் அம்லா - தீவிரவாத தடுப்பு ஒத்திகை நடைபெற்றது.

இதன்போது இலங்கை அகதிகள குழுவொன்று கடல்வழியாக அவுஸதிரேலியாவுக்குத் தப்பிச்செல்ல இருப்பதாக கியூ பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதனையடுத்து நாகப்பட்டினம் கடற்கரைப் பகுதிகளில் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது.

அப்போது கீச்சாங்குப்பம் பகுதியில் மீனவர் படகுகளின் மத்தியில் நிறுத்தப்பட்டிருந்த மர்மப் படகு ஒன்றை கியூ பிரிவு பொலிஸார் கண்டுபிடித்தனர்.

பொலிஸாரின் விசாரணையில் அந்தப் படகில் தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் 60 பேர் கடல் வழியாக அவுஸ்திரேலியா தப்பிச் செல்ல இருந்த தகவல் வெளியானது.

படகின் உரிமையாளரை கைது செய்த பொலிஸார், அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் பின் சென்னை மற்றும் மதுரையைச் சேர்ந்த இரண்டு தரகர்களையும் கைது செய்துள்ளனர்.

(எ-11)


## J.D.C.S.I Green Memorial Hospital - Manipay
## J.D.C.S.I Mac Lead Hospital - Inuvil

### Post of Hospital Secretary

Applications are invited for the Post of Hospital Secretary for the above named mission Hospital.
Christians of Churches affiliated to National Christian Council of Sri Lanka may apply with office of credentials to the Secretary, Jaffna Diocese of the Church of South India. Diocesan office, Vaddukoddai to reach with in two weeks of this notice.

Rev.D.S.Solomon,
Secretary
J.D.C.S.I/A.C.M

(C-3744)



உங்கள் வாழ்நாளில் சர்வதேச நிறுவனம் ஒன்றில் கடமையாற்ற கிடைக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்!

இன்னும் தொழில் தேடுபவரா?
வயது : 18 - 30 வரை.
பயிற்சியின் போது 15000/= க்கு மேல் பெற வேண்டுமா?
A/L பயின்றவரா?
தொழிலுக்கான அர்ப்பணிப்பு உள்ளவரா?
குழுவுடன் இணைந்து வேலை செய்யக் கூடியவரா?
விடை காண வேண்டுமா?

ஆம் எனில்

- குறுகிய கால பயிற்சி!
- வெளிநாடு செல்லும் வாய்ப்பு.
- அனுபவம் அவசியமற்றது.



பயிற்சியின் பின் 35,000/=, 50,000/= வரை, ஆண் - பெண் இருபாலாரும்
[30 பேருக்கு முன்னுரிமை]

[2788]

அழைக்க :- 0779994807, 0724565659, 0214993166



# Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன்-Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து- Dutch (டச்) புதிய பிரிவுகள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.

- French, Italian , English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- இறுதியாக இடம்பெற்ற நெதர்லாந்து தூதரக பரீட்சையில் சித்தி பெற்ற தர்மகுலசிங்கம் தக்ஷலா (உரும்பிராய்) மற்றும் குணசிங்கம் நிஷா (உடுப்பிட்டி) ஆகியோரை எமது கல்வி நிறுவனம் சார்பில் வாழ்த்துகின்றோம்.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

**Vivekananda Academy**
221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.
Tel: 0213216928, 0774842464
(Gov. Reg.No: W/A 76795) (C-3719)



# Vinoth Curtains

யாழ். மண்ணில் அறிமுகமாகிறது

கேட்டின்ஸ் துறையில் நிபுணத்துவம் பெற்ற எம்மால் கேட்டின்ஸ், மெத்தை விரிப்பு, றெயிலிங், போல்ஸ், குசன் கவர், வேற்றிக்கல் லைன்ஸ், வெனிசன் பிற்றிங், புளோ காபற் வேலைகள் செய்து கொடுக்கப்படுகிறது.

தொடர்பு - மைக்கல்
0774906323
0777797532

இல,50/1, நாவலர் வீதி,
(மனோகரா தியேட்டர் அருகில்)
யாழ்ப்பாணம்.

(3107)



## இலவச இணையக் கற்கைநெறி நிறுவகம்
## SERVE e- Learning Institute

T.P: 021 225 6206 பதிவு எண்:1100

கற்கைநெறி:-
இலவச Diploma In Information Communication Technology (ICT)
(4 மாதங்கள்)

தகைமைகள்:
* க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றிப் பல்கலைக்கழக அனுமதியை எதிர் நோக்குவோர்.
* க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்து வேலை தேடுவோர் or வேறு தொழில் பயிற்சிகளை மேற்கொள்வோர்.
* க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றியோர்.

பாடங்கள்: தகவல் தொழில்நுட்பம் (ICT)
ஆங்கிலம் (English)
தட்டச்சுப் பயிற்சி (Computer Typing)

(சி-3742)

**விண்ணப்ப முடிவு திகதி: 25.06.2013**

மேலதிக விபரங்களுக்கு:
No.66, கட்டைப்பாலி ஒழுங்கை, ஆனைக்கோட்டை. தொலைபேசி:0212256206

மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்
பதிவாளர்
SERVE e-Learning Institute



## கார் விற்பனை

HG XXXX தொடர் இலக்கம் உடைய Hyundai Accent (கையுண்டாய் அச்ன்ட்) Butter color கார் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
0773747825 /
021 222 8984



(3109)



## காணி விற்பனைக்கு

மணியந்தோட்டம் சந்தியில் 4 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. முகவர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு :
0750404083

[3108]



## வீடு விற்பனைக்கு

வெங்கடேசா வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புதிய வீடு 1 1/2 பரப்பு விற்பனைக்குண்டு.

தொடர்பு-0757100884

(3111)



## காணி விற்பனைக்கு

கோப்பாய் முருகன் கோயில் பிரதான வீதிக்கு சமீபமாக வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.

உடன் தொடர்புகளுக்கு : 0776758131
0776740836

[3100]



சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் எமது சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்

விரைவு ! பாதுகாப்பு ! நம்பகத்தன்மை!

## உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

உங்கள் இல்லங்களில் இருந்தவண்ணமே சகல நாடுகளுக்குமான பொதிகள் பொறுப்பேற்கப்பட்டு குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும். (Pickup Service) உங்கள் உறவுகளின் கைகளில் 3 - 5 வேலை நாட்களில் ஒப்படைக்கப்படும்.

20 வருடங்களுக்கு மேல் எமது நிறுவனம் பொதிகள் சேவையில் முன்னிலையில் திகழ்ந்து நேரடி முகவராக தனி இடம் பிடித்துள்ளது.

- 11 Kg இக்கு மேற்பட்ட பொதிகளுக்கும் மிக குறைந்த கட்டணம் அறவிடப்படும்
- தற்பொழுது இலங்கையில் எங்கும் இல்லாதவாறு மிகக்குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்பு பொருள்கள் புடைவைகள் CD, VCD கள் என்பன மிக விரைவாக அனுப்பி வைக்கப்படும்.
- 220 நாடுகளுக்கான கட்டணங்களும் குறைக்கப்பட்டுள்ளன.
- கூடுதலான கட்டணங்கள் செலுத்தி ஏமாறாதீர்கள்

குறிப்பு : இந்த சலுகை திருமுருகன் கொம்நெற் இல் மட்டுமே

DHL

(C-3703)

## திருமுருகன் கொம்நெற்

- இல. 208 A , கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 222 7835 (பழைய கடைக்கு முன்பாகவும், ஆல் சிலோனிற்கு அருகிலும் அமைந்துள்ளது)
- இல. 18 , பிரதான வீதி, நெல்லியடி.
- இல. 46 , ஆடியபாதம் வீதி , திருநெல்வேலி.
- TCN E xpress இல. 2 B , நெல்சன் பிளேஸ், கொழும்பு - 2

(அ-3508)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.